**திருவேங்கடம், திரு. பெ. சு.**

ஊராட்சிகள்(திருத்த-செல்திறன்)சட்ட முன்வடிவு 1977 .. .. .. .. .. .. 257—260

வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் ஒன்றியத்தில் சில கிராமங்களில் காலரா நோய் பரவுதல் குறித்தும் தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும் (ஒ. தீ.) .. .. .. 314

**திரைப்படங்கள்—**

வரி வகைகள் .. .. .. .. 2

**தீர்மானங்கள்**

சண்முகசுப்பிரமணியம் (திரு. மா.), ஓய்வுபெற்ற சட்டமன்றப் பேரவைச் செயலாளர், பாராட்டு 45—46

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து .. .. .. .. .. 431—432

மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் விவர அட்டவணையை மாற்றியமைப்பதற்கான வரைவுத் திருத்தம் .. .. .. .. 423—424

பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. .. 187—210

வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் ஒன்றியத்தில் சில கிராமங்களில் காலரா நோய் பரவுதல் குறித்தும் தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும் (ஒ. தீ.).. .. .. 314—31[illegible]







பக்கங்கள்

**துரை கலியமூர்த்தி திரு—**

அரிசனங்களுக்கு வீட்டுவசதி .. .. .. 27

ஊராட்சிகள் (திருத்த-செல்திறன்) சட்ட முன்வடிவு 1977 .. .. .. .. .. .. 325—328

**துறைமுகங்கள்**

சேதுசமுத்திரத் திட்டம், பணி நிலை .. .. 141—144

**தொழிற்சாலைகள்—**

கைமுறை காகித உற்பத்தி ஆலை, பொதுத்துறை 28

தொழிற் பயிற்சிக் கூடம் (புத்தூர்), உதவித் தொகை .. .. .. .. .. 31

மாவட்ட கூட்டுறவு நூற்பாலை (தஞ்சை) பணியாளர். .. .. .. .. .. 19

ந

**நடராசன், திரு. அ—**

இரயில்வே மேம்பாலம், வடகோயம்புத்தூர், அமைப்புச் செயற்குறிப்பு .. .. .. 179

போக்குவரத்துக் கழகங்கள், ஒன்றிணைப்புத் திட்டம் 175

**நாராயணசாமி முதலியார் திரு. கே—**

பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977. 70-71, 79 129—132

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. .. 389—390

**நூல்கள்—**

" இந்திரா காந்தி " பற்றிய நூல்கள், அவசர கால நடவடிக்கை .. .. .. .. 157—162

## ப


பக்கங்கள்

**பல்கலைக் கழகங்கள்—**

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு, தேர்தல் (அறிவி.) .. .. .. .. .. 186

**பள்ளிக்கூடங்கள்—**

ஆறுமுகம் பிள்ளை-சீதை அம்மாள் உயர்நிலைப் பள்ளி, திருப்பத்தூர். .. .. .. 11—12

நடமாடும் விஞ்ஞானக் கூடம், தஞ்சை மாவட்டம் 30

**பாசனம்—**

கிணறுகளுக்கு மின்னிணைப்பு .. .. .. 144—147

பாலாற்றின் குறுக்கே அணை, இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் பாதிப்பு (க. ஈ.) .. 210—212

**பாம்பு கண்காட்சி சாலை—**

அரசு பராமரிப்பு. .. .. .. .. 32

**பாலகிருஷ்ணன் திரு. சோ—**

கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்டமுன் வடிவு, 1977 .. 422

மதுரைப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1977 .. .. .. .. .. .. 251—252

**பாலங்கள்—**

இரயில்வே மேம்பாலம், வடகோயம்புத்தூர், அமைப்புச் செயற்குறிப்பு .. .. .. 179

மஞ்சளாறு, ஆனைமேலகரம் பஞ்சாயத்து .. 15—16

வெள்ளாற்றின் குறுக்கே .. .. .. 20

**பிற்பட்ட வகுப்பினர்—**

தொழில் கருவிகள். .. .. .. .. 25—26




## ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

**பொன்னையன், திரு. சி—**

பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. .. 201—209

**போக்குவரத்து—** 175

கழகங்கள், ஒன்றிணைப்புத்திட்டம் .. ..

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், .. 177—178

விபத்துக்கள் .. .. .. .. 13—15

பாதாள இரயில் திட்டம், சென்னை. .. 175—176

பேருந்து வசதிகள், சென்னை நகர் .. .. 176—177

வடசென்னை பகுதி .. .. ..

## ம

**மரங்கள்—**

தென்னை சாகுபடி, தஞ்சை மாவட்டம் .. .. 20

**மருத்துவ மனைகள்—**

இ. எஸ். ஐ. மருத்துவமனைகள், சென்னை 163—165

**மனோகரன் திரு. கி—**

அலைஓசை நாளிதழ்மீது (உ.பி.) .. ... .. 295,296 297,299 300,302 304

உறுப்பினர்களுக்குப் பை வழங்கல் குறித்து (த.அ.) .. .. .. .. .. 429—430

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 47—48 60—67 69

கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. 391—392 415—422 423

ம—தொடர்ச்சி.


பக்கங்கள்

மனோகரன் திரு. கி—தொடர்ச்சி.

சண்முகசுப்பிரமணியம் (திரு.மா), ஓய்வு பெற்ற சட்டமன்றப் பேரவைச் செயலாளர், பாராட்டு (தீ) .. .. .. .. .. 45—46

சுந்தரம் கிளேட்டன் கம்பெனியில் நடந்ததாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூடு குறித்து (க.கோ.) 425

பேரவை நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப் பெறுவது குறித்து (தீ.) .. .. .. 431

பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977. .. 125—128

பொது விற்பனைவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. .. .. 335—336, 375—388, 391

முரசொலி நாளிதழ் (உ.பி.) .. .. .. 312

லாரி விபத்து (காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்தது), சுங்குவார்சத்திரம் காவல் நிலையம் அருகில் (ஒ.தீ.) .. .. .. .. .. 36—38

வட ஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் ஒன்றியத்தில் சில கிராமங்களில் காலரா நோய் பரவுதல் குறித்தும் தடுப்பு நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும் (ஒ.தீ.) .. 314—315

வெளிநாடுகள் செல்லவிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள் .. 430—431.

மாணவர்கள்—

படிப்பு உதவித் தொகை .. .. .. 27

படிப்பு உதவித் தொகை, பிற்பட்ட வகுப்பினர் 27

மார்க்கபந்து திரு. ரா —

அலை ஓசை நாளிதழ் (உ.பி.) .. .. 308

பொதுவாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977. 72—77,97




ம—தொடர்ச்சி


பக்கங்கள்

மாரிமுத்து திரு. ஏ. ஆர் —

அலை ஓசை நாளிதழ் (உ.பி.) 296

கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. 409—412

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977. .. 48,53

பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. .. 200—201

பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977. 92,99—100

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977. .. .. .. .. .. 368—373

ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி (உத்தமபாளையம்), சம்பளம் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. .. .. 38—39

மின்சாரம் —

கிணறுகளுக்கு மின்இணைப்பு .. .. .. 144—147

மீன் காட்சிச் சாலை —

அரசு பராமரிப்பு .. .. .. .. .. 31

முருகேசன், திரு. கூ. ச —

கிணறுகளுக்கு மின்இணைப்பு .. .. .. 144—147

ரகுமான்கான், திரு. ஏ—

ஊராட்சிகள் (திருத்த—செல்திறன்) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. 331, 332—333, 334

ர— தொடர்ச்சி


பக்கங்கள்

ரகுமான்கான் திரு ஏ.—தொடர்ச்சி.

பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977 .. .. .. 77—83,98

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977. .. .. .. — 344—349

மதுரைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. 247—251

ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி (உத்தம பாளையம்), சம்பளம் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. .. 39—41

ரமணி திரு. கு—

குடிநீர், கோவையில் பற்றாக்குறை .. .. 169—170

கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு 1977 .. .. 400—403

மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறப்பது குறித்து பொது வேலை நிறுத்தம் போன்ற கிளர்ச்சி நடவடிக்கைகள் எடுக்க பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டுக்குழு முடிவு செய்துள்ளது குறித்து (க.ஈ) .. .. .. .. 318,320

ல

லத்தீப் திரு. எம். ஏ—

அலையோசை நாளிதழ் (உ.பி.) .. .. .. 307—308

ஊராட்சிகள் (திருத்த-செல்திறன்) சட்ட முன் வடிவு 1977. 272—274

ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகள், எடுத்துக்கொள்ளாமை, (த.கோ.) .. .. 180

சென்னைப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன் வடிவு 1977. — 214—219




ல— தொடர்ச்சி


பக்கங்கள்

லத்தீப் திரு. எம. ஏ.—தொடர்ச்சி.

பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. .. 193—195

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977. .. .. .. .. .. .. 366—368, 389

முரசொலி நாளிதழ் (உ.பி.) .. .. .. 313

வெளிநாடுகள் செல்லவிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள் .. 430

ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி (உத்தம பாளையம்), சம்பளம் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து (ஒ.தீ.) .. .. .. .. .. 38

வ

வரதராஜன் திரு. என்—

ஊராட்சிகள் (திருத்த-செல்திறன்) சட்ட முன் வடிவு 1977 .. 262—264

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 56—57

முரசொலி நாளிதழ் (உ.பி) .. .. .. .. 313—314

ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி (உத்தம பாளையம்), சம்பளம் வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து. (ஒ.தீ.) .. .. .. .. .. .. 41—42

விபத்துக்கள்—

லாரி விபத்து (காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்தது), சுங்குவார்சத்திரம் காவல் நிலையம் அருகில் (ஒ.தீ.) .. .. .. .. .. .. 35—38

விற்பனைக் கூடங்கள்—

மாவட்ட விற்பனைக் கூடம் (வடாற்காடு), தலைவருக்கான செலவுகள். .. .. .. 16—19

பக்கங்கள்

**வீட்டுவசதி—**
- அரிசனங்களுக்கு .. .. .. .. 26, 27
- அரிசனங்களுக்கு வீடுகள், மாப்படுகை. .. 174
- அரிசனங்களுக்கு வீடுகள், மாயூரம் தொகுதி .. 173

**வெளிநடப்பு—** 206—207

**வேலுச்சாமி திரு. ஓ. சோ—**
- பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977. 104—106

**வேலைவாய்ப்பகங்கள்—**
- ஆசிரியர் பதவிக்கு பதிவு செய்துள்ளவர்கள். .. 24—25

**வேலை வாய்ப்பு—**
- பணிக்காலத்தில் இறக்கும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு .. .. .. .. .. 12—13

**வேளாண்மை—**
- திட்டங்கள், உலக வளர்ச்சி நிறுவனத்தின் கடனுதவி .. .. .. .. .. 153—154

ஜ

**ஜெயவேலு திரு. ஏ—**
- பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977 .. .. .. .. 84, 85—88

**ஜேம்ஸ் திரு. ஜே—**
- "இந்திரா காந்தி" பற்றிய நூல்கள், அவசரகால நடவடிக்கை .. .. .. .. .. 157—162
- ஊராட்சிகள் (திருத்த—செல்திறன்) சட்ட முன்வடிவு 1977 269—272





பக்கங்கள்

**ஜேம்ஸ் திரு. ஜே.—தொடர்ச்சி.**
- கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு 1977 .. .. 401—409
- கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1977 57—58, 59
- சென்னைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1977 226—228
- பல்லவன் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் வேலைநிறுத்தம் (ஒ.தீ.) .. .. .. 187—190
- பேரவைக் கூட்டம், நீட்டியமை, (த.கோ.) .. 182—185
- பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1977 .. 97—98, 100—104
- பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1977 .. .. .. .. .. .. 340—342
- மதுரைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1977 243, 254—255
- முரசொலி நாளிதழ் (உ.பி.) .. .. .. 311

[மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார்]

இது தவிர அந்தந்தப் பகுதியிலுள்ள நன்னடத்தை அலுவலர்களின் மேற்பார்வையில் வைக்கப்படும் விடுதலையான ஆயுள் தண்டனை மற்றும் நீண்ட கால தண்டனை பெற்ற சிறைவாசிகள் அவரவர்கட்குத் தேவையான உதவிகளை மேற்படி நன்னடத்தை அலுவலரிடமிருந்து பெறுகின்றனர். பல்வேறு நிறுவனங்களை அணுகி, விடுதலையான சிறைவாசிகளின் மறு வாழ்வுக்கான உதவியோ, அவர்கள் வேலைக்கு வேண்டிய கருவிகள் வாங்கித் தருவதோ, அல்லது வேலை வாங்கித் தருவது போன்ற உதவிகளையோ நன்னடத்தை அலுவலர்கள் செய்கிறார்கள்.

சிறையில் தண்டனையை நல்ல முறையில் அனுபவித்துவிட்டுச் செல்லும் ஆயுள் தண்டனை மற்றும் நீண்ட கால தண்டனையடைந்த சிறைவாசியின் மறு வாழ்வுக்கு பயன்தரும் வகையில் அவர்கட்கு அவரவர் தேர்ச்சி பெற்ற தொழிலில் பயனுள்ள கருவிகளை வாங்கித் தருவதற்கான ரூ. 8,000 மதிப்பில் ஒரு திட்டத்தை வகுத்து அரசுக்கு சிறைத்துறைத் தலைவர் சமர்ப்பித்துள்ளார். இது அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் சில மாநிலங்களில் ஆயுள் தண்டனையினைக் கழித்து வரும் கைதிகளுக்கு ஐந்தாயிரம் ரூபாய் கடன் உதவி அளித்து அவரது புனர்வாழ்வுக்கு உதவி புரிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டிருப்பதாகக் கருதுகிறேன். அந்த முறையை நமது தமிழ் நாட்டிலும் பின்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :** The previous answer suggests that Government is examining a proposal for aiding these discharged prisoners to the extent of advancing even a sum of Rs. 8,000, let alone Rs. 5,000.

திரு என். வரதராஜன்: பத்தாண்டு கால, அல்லது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளின் குடும்பங்கள் சீரழியும் வகையில் சூழ்நிலைகளால் பலர் சிக்கிக்கொள்கிறார்கள். அந்தமாதிரி காலங்களில் இவர்களது குடும்பங்களில் இருக்கும்படியானவர்களுக்கு அரசு உதவி செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :** Such a measure of reformation is not for the time-being under the consideration of Government.





திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலேயிருந்து வெளியேற்றப்பட்டு வரும் கைதிகளுக்குப் புனர்வாழ்வுத் திட்டத்தின்படி மீண்டும் அந்த மேற்படி கைதிகள், சிறைக்கு வர மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் வாங்கப்படுமா? கைதிகளுக்கு ஒரு நாளைக்குச் செலவாகும் தொகை, சப் ஜெயிலில் செலவாகும் தொகையும், சென்ட்ரல் ஜெயிலில் செலவாகும் தொகையும் ஒன்றாக இருக்குமா அல்லது, வேறுபாடு உண்டா?

**THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :** Answer to the first question depends on the display of criminal proclivities which a person might or might not have abandoned after his release. If he has really reformed, there will be no chance of his coming back to the prison. The second question, I had not been able to follow.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, கைதிகள், சிறைக்குள்ளே இருந்து விடுதலை செய்யப்படுபவர்கள்—பல பேர்கள் திரும்பவும் அதே குற்றங்களை, அதற்குமேலும் செய்து உள்ளே வருகின்ற காட்சி, இன்றைக்கு நடந்து கொண்டிருப்பது நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருப்பது. ஆகவே, ரெஃபார்ம் என்பதற்கு, அவர்கள் சீர்திருத்தம் அடைவதற்குப் பதில், அதிகப்படியாக தவறுகள் நடக்கின்ற நிலைமை, போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? ஜெயிலுக்குள்ளே நடக்கும்படியான அன்றாட நடவடிக்கைகளில் என்ன சீர்திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் செய்யவுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR :** During the period of imprisonment suffered by the prisoners, every measure for reformation of the criminals is being taken i.e. religious instruction and teaching in some trades and moral instruction and like that. If the prisoner comes out of the jail after serving a period of imprisonment and commits crimes and has a tendency to go back. I am afraid, the State cannot help rejecting the criminal proclivities of any prisoner who has been discharged from the jail after his period of term of imprisonment.

### சிறைக் கைதிகளின் உணவுக்கு ஆகும் செலவு

*111 வினா.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

வெள்ளிக்கிழமை, 1977 ஆகஸ்டு 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்குப் புனர் வாழ்வு

*110 வினா.—திரு என். இட்டப்பா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) சிறைக் கைதிகளின் தண்டனைக் காலத்திற்குப் பின் அவர்களது புனர்வாழ்வுக்கு உதவிபுரியும் திட்டம் ஏதேனும் அமுலில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் :

(அ) ஆம்.

(ஆ) சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் அவர்களாக விரும்பினால் சென்னை பல்லாவரத்தில் உள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இங்கு பலவித தொழில்களில் இரண்டு வருடங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இரண்டு வருடங்களில் இலவசமாக உணவு, உடை, மருத்துவ வசதி, இருக்க இடம் அனைத்தும் கொடுக்கப்படுகின்றன.

மத்திய சிறைகள் இருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் விடுதலை பெற்ற சிறைவாசிகள் சகாய சங்கம் ( Discharged Prisoners Aid Society) உள்ளது. இது விடுதலையான சிறைவாசிகளின் கோரிக்கை பேரில் அவர்களுக்கு வேண்டிய பண உதவி, வேலை வாய்ப்பு அளித்தல் முதலிய உதவிகளை செய்கிறது.

[திரு என். கிட்டப்பா] [1977 ஆகஸ்டு 26

சிறைக் கைதிகளின் உணவுக்காக "சி" வகுப்பு கைதிகளுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு செலவிடப்படும் தொகை எவ்வளவு?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: The average cost of diet for 'C' class prisoner (now 'B' class) per day works out as follows:—

| | Per day per prisoner |
|---|---|
| 1. Under Nutritious diet Scheme— | |
| Labouring | Rs. 2·65 |
| Non-Labouring | Rs. 2·50 |
| 2. Under partly Nutritious diet Scheme— | |
| Labouring | Rs. 2·45 |
| Non-Labouring | Rs. 2·30 |

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தத் தொகை எத்தனை ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுது ஏறி இருக்கிற விலைவாசிகளின் அடிப்படையில், இதை உயர்த்துவதற்கான குறிப்பு ஏதேனும் உள்ளதா? அல்லது, இந்தத் தொகைக்கு உரிய உணவுப் பண்டங்களையாவது இந்தக் கைதிகளுக்கு முறையாகக் கொடுக்கப்படுமா? ஏனென்றால், இப்பொழுது கைதிகளுக்கு முறையாக, பெரும்பாலான சிறைச்சாலைகளில் தரப்படுவதில்லை. முறையாகத் தரப்படுவதற்கு அரசு கண்காணிப்பினை மேற்கொள்ள முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: In order to enrich the content of the diet with vitamin A in the old diet scheme, the old diet has been supplemented as on 28th November 1970. This scheme has come into effect by virtue of G. O. 3285, Home, dated 28th November 1970 and this has been actually extended to the Central Prison in Madurai and Coimbatore from August 1973.

Sir, will the hon. Member Thiru Kittappa repeat his second part of the question?

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, பெரும்பாலாக நமது தமிழகத்திலேயுள்ள சிறைச்சாலைகளில், இப்பொழுது புதிதாக ஏற்பட்டதல்ல, நீண்டகாலமாகவே, சிறைக் கைதிகளுக்கு உணவுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை, சரிவர அங்கே செலவழிக்கப் படாமல், கைதிகளுக்கு அங்கே ஒதுக்கப்படுகிற தொகைக்கான உரிய உணவுப் பொருள்கள் வழங்கப்படாமலிருந்து வருகிறது. இந்தக்





1977 ஆகஸ்டு 26] [திரு என். கிட்டப்பா]

குறைபாட்டினை நீக்க, அரசு அதற்கான கண்காணிப்பை மேற்கொள்ள, புதிய முயற்சிகள் எதையாவது மேற்கொள்ள முன்வருமா?

[முற்பகல் 9.10]

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: Sir, appreciate the anxiety of the hon. Member. When a grievance is ventilated that the diet fixed by the G. O. is not really supplied to the prisoners or there is diminition in quantity or quality of it, the Government will certainly examine every possibility of correcting this deficiency.

திரு ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக—இந்த அரசாங்கத்தின் கீழ் இன்னும் ஜெயிலுக்குப் போகவில்லை—அதற்கு முன்னால் இருந்த எல்லா அரசாங்கத்திலும் போயிருக்கிறேன். அந்த அனுபவத்தைக் கொண்டு கேட்கிறேன். ஒதுக்கப்பட்ட தொகை—செலவு செய்யப்படவில்லை—கிட்டப்பா அதுபற்றி சொன்னார். நான் "பாசிடிவாக" சொல்கிறேன். ஒதுக்கப் பட்ட தொகை, காண்டிராக்டர்களுக்கும், "ஜெயில் அபிஷியலுக்கும்" அந்தத் தொகையிலே ஒரு தொகையும், பொருள்களை பர்ச்சேஸ் பண்ணுகிற ஊழல் மூலமாக அவர்கள் சாப்பிடுவதால், உண்மையி லேயே கைதிகளுக்கு கொடுப்பது மிகவும் மட்டரகமாக இருக்கிறது, அதன் காரணமாக பல சிறைகளிலே நீண்டகாலமாக தகராறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது மாற்றப்பட்டு "ரிபர்மேஷன்" செய்யப்படவேண்டும். Jail Reforms Committee என்று சொல்லி, இதையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு நீங்கள் பொதுவாக சொன்னீர்கள் We will do our best என்று நான் "கான்கிரீட்டாக" சொல்கிறேன். அந்த கமிட்டி பல ஆண்டு களாக வரவில்லை. அப்படி ஒரு கமிட்டி அமைப்பதற்கு அரசு முன் வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: Sir, the constitution of such a Committee is really under the serious consideration of the Government. We have been thinking aloud of composition of such a Committee to correct such evils, to eliminate such evils.

திரு எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, "சி" வகுப்பு கைதிகளுக்கு தரப்படுகிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதே நேரத்தில், "ஏ" வகுப்பு கைதிகள், மிசா கைதிகளுக்கு, அதிகமான அளவு தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. வேறு எந்த கைதிகளுக்காவது இன்றும் இதைவிட அதிகம் வசதி

[திரு எஸ். ஆர். இராதா] [1977 ஆகஸ்டு 26

இருக்கிறதா என்பதையும், மிசா கைதிகளுக்கு எவ்வளவு தரப் படுகிறது என்பதையும், "ஏ" வகுப்பு கைதிகளுக்கு எவ்வளவு தரப் படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Sir, the hon. Member may please put a separate question as the material that has to be covered by his question has not been furnished to me.

திரு கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில், பிற மாநிலங்களான ஆந்திரா, கேரளா, மைசூர், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் சிறைக் கைதிகளுக்கு— இரண்டாம் வகுப்பு, இங்கே "பி" வகுப்பு என்று சொல்லப்படுகிறது. "சி" வகுப்புகூட உண்டு. ஆனால் அங்கே "பி" வகுப்பு கைதிகளுக்கு மீன், மட்டன், காபி, டீ கொடுக்கப்படுகின்றன. அதே போல, இங்கேயும் மீன், மட்டன், காபி, டீ போன்றவைகளை தமிழ்நாடு அரசு கொடுக்க முன்வருமா. மேலும் அங்கே இருக்கக்கூடிய சிறைகளில் கேண்டீன் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. "கன்விக்டட் பிரிசனர்ஸ்" "Convicted Prisoners" தண்டனை கைதிகளுக்கு வேலைக்கேற்ற ஊதியம் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்போல வேலையையும் அதற்கேற்ற ஊதியமும் கொடுத்து, கேண்டீன் வைத்துக் கொடுத்தால் சாமான்களை பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என கேட்க விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Sir, after getting relevant information from the neighbouring States, the Government will be quite willing to examine every proposal and suggestion made by the hon. Member.

திரு போ. கோபாலன் : தலைவரவர்களே, சிறைச்சாலையிலே ஒரு நாளைக்கு ஒரு கைதிக்கு செலவிடப்படுவதாகச் சொன்ன தொகை மிகக் குறைவாக இருக்கிறது. இந்தத் தொகையில் மூன்று வேளையும் அவர்கள் சாப்பிடுகிறார்களா? என்னென்ன உணவு வகைகள் பரிமாறப் படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல இயலுமா?

THE HON. THIRU. K. NARAYANASWAMI MUDALIAR: Sir, cholam idli, ragi idli, wheat uppuma and cholam puttu are supplied to the prisoners. Whether two meals or three meals are served to the prisoners, I am not in a position to state the details. I think at least there must be two full meals for the prisoners. I think they are given by the authorities. I am sure about it.



1977 ஆகஸ்டு 26]

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, "சர்பிரைஸா

அமைச்சர் அவர்கள் சிறையிலே கொடுக்கப்படுகின்ற உணவுகளை

பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னு

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அவற்றைச் சாப்பிட்டு சுவை

பார்த்துவிட்டு, அவற்றின் தரத்தைப் பற்றிச் சொல்லுவாரா என்

கேட்க விரும்புகிறேன்.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, "சர்பிரைஸாக

அதைச் செய்யலாம்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR

Sir, actually I have proposed to inspect the Jail along with my hon

colleague, Thiru Sadiq Pasha. I am sure that he will give advanc

taste of the things that are given to the prisoners.

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னது போல சர்பிரைஸாகட

போகலாம். அதற்குத் தகவல் கொடுத்தால் நானும் வருகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR

Quite right. With pleasure, I welcome the move.

திரு வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, சோள இட்லி,

ரவா இட்லி என்று பெருமையாக இட்லி கொடுக்கிற மாதிரி

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இட்லியாக அல்ல, கல்லும்

மண்ணும் கலந்து, கல்லைவிட மோசமான அளவுக்கு இருக்கக்கூடிய

இட்லியாகத்தான் கொடுக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு இட்லி, ஒரு

நாளைக்கு ரவா புட்டு என்று கல்லைக் கலந்து கொடுக்கக் கூடிய

அளவுக்குத் தான் இருக்கிறது. அவற்றை சாப்பிட முடியாமல்

அவ்வளவு மோசமாக இருக்கிறது. இதற்குக் காரணம், ஏற்கனவே

பல அங்கத்தினர்கள் சொன்னது போல, ஏகப்பட்ட திருட்டு நடை

பெறுகிறது. இந்த இட்லியையும், புட்டையும் எடுத்துக் கொண்டு

போய் தங்களுடைய ஆடுகளுக்கு சிறை ஊழியர்கள் தீனியாக

வைக்கின்ற அளவுக்கு நிலைமை இருந்து வருகிறது. இவற்றை

யெல்லாம் அரிசியில் செய்யக்கூடிய அதே நேரத்தில் பார்வை

யாளர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

இட்லி கல்லாக இருப்பதைச் சொல்ல மூன்று நிமிடம் எடுத்துக்

கொண்டீர்கள்.

திரு ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அவ்வளவும் கல்லாக

இருப்பதால் அதைச் சொல்ல அவ்வளவு நேரமாகிறது.

[1977 ஆகஸ்டு 26

திரு வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, பார்வையாளர்கள் என்ற பெயரால் காங்கிரஸ் ஆட்சியில் காங்கிரஸ்காரர்களாகப் பார்த்துப் போட்டுக்கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களாகப் பார்த்துப் போட்டுக்கொண்டார்கள். அதைப் போல, அகில இந்திய அ. தி. மு. க. ஆட்சி, அ. இ. அ. தி. மு. க. காரர்களைப் போட்டுச் செய்யாமல் சர்வ கட்சி அடிப்படையில் பார்வையாளர்களைப் போடுவதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Sir, this will be considered seriously by the Government in due course of time.

திரு எம். எ. ஜெயவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது வெளியிலே உணவு கிடைக்காமல் ஏராளமான பேர் வேண்டுமென்றே குற்றங்களைச் செய்துவிட்டு சிறைக்குச் செல்கிறார்கள். இப்படி தேனும், பாலும் நெய்யும் போட்டால் குற்றங்கள் அதிகரித்து சிறையில் நெரிசல் ஏற்படுவதற்கான வழிவகை செய்யும் என்கின்ற நிலையை அரசு உணருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR: Sir, I am not so pessimistic as to agree with the views of the hon: Member Thiru Jayavelu. Even a beggar in the country wants freedom. He does not commit crime in order to enjoy the amenities provided in the jails. Every Indian loves freedom and no Indian would like to commit a crime in order to go to jail to enjoy the amenities provided there.

## தொழுநோய் கைதிகள்

*112 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டனைக் கைதிகளில் தொழுநோய் உள்ளவர்களுக்கு தமிழ்நாட்டில் தனியே சிறைச்சாலை ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் : தமிழ்நாட்டில் தொழு நோய் உள்ளவர்களுக்கு தனியே சிறைச்சாலை ஏதும் கிடையாது. ஆனால் மத்திய சிறை, வேலூரில் தொழுநோய் சிறைவாசிகளுக்குப் பிரத்தியேகமான சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு தனி இடவசதியும் செய்யப்பட்டிருக்கிறது



1977 ஆகஸ்டு 26]

[முற்பகல் 9.20]

திரு என. கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறும்போது வேலூரில் இத்தகைய பிரிவு இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக கடலூர் மத்திய சிறையில்கூட 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து 15 ஆம் தேதி வரையில் நான் அடைக்கப்பட்டிருந்த போது இரண்டு தொழு நோயாளிகள், இப்போது உள்ள ஆட்சியில் அல்ல, நெருக்கடி காலத்தில் இருந்தார்கள். அவர்களோடு எங்களையெல்லாம் சேர்த்து அடைத்து வைத்து இருந்தார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் அங்குள்ள மருத்துவர் இடத்தில் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் அவர் அவர்களைத் தனியாகப் பிரிப்பதற்கு மறுத்து விட்டார். இப்போது அல்ல. நெருக்கடி காலத்தில், இந்த நிலை இப்போது நடைபெறுகின்ற நமது புதிய ஆட்சியிலும் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Every step will be taken in every jail or sub-jail and in every Central Jail to segregate leper-prisoners from healthy prisoners and there will be no difficulty in assuring the Hon. Member that all the conceivable steps will be taken for the proper segregation of the leper-prisoners.

திரு செ. சிவசாமி : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நாங்களெல்லாம் மதுரை ஜெயிலிலே இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது அங்கே எங்களையெல்லாம் "லெப்பர்" வார்டிலே அடைத்து வைத்திருந்தார்கள். கிட்டத்தட்ட 42 பேர் "சி கிளாஸ்"-லே அந்த லெப்பர்களோடு உண்மையிலே ஒன்றாக இருந்தோம் என்பதை நான் சொல்லிக் கொண்டு இப்படிப்பட்ட நிலைமைகள் நமது புரட்சித் தலைவரவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நீடிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : If such a thing happened during D.M.K. regime it would be a matter for regret. But this Government assures the Hon. Members as I have already assured the Hon Member, Thiru Kittappa, that every conceivable step will be taken to segregate leper-prisoners from other healthy prisoners.

[1977 ஆகஸ்டு 26

திரு கே. சௌந்திரராசன் : சிறையிலே அடைக்கப்பட்ட கைதிகள் உண்மையிலேயே நோய்வாய்ப்படுகின்றபோது உடனடியாக அவர்களைக் கவனித்து மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவதில்லை. இப்படிக் காலதாமதம் ஏற்படுவதன் விளைவாக அவர்களுடைய நோய் அதிகரிக்கின்ற நிலை ஏற்படுகிறது. நோய் அதிகரித்த பிறகுதான் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியில் இப்படி நடைபெற்றது என்று சொல்லப்பட்டது. இது நம்முடைய ஆட்சிக் காலத்தில் நடக்காமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Certainly all the medical officers in the jails are expected to do their duty like every other Indian and if there is any transgression or violation or dereliction of the duties on the part of the medical officers, proper steps, not merely corrective but punitive steps, will be taken against the medical officers who do not discharge their duty properly towards the prisoners.

திரு சோ. பாலகிருஷ்ணன் : பெரு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா நெருக்கடி காலத்தில் சிறையில் இருந்ததாகச் சொன்னார்கள். இப்படி மிசாவிலே சிறையிலே அடைக்கப்பட்ட கைதிகளுக்கு அநேக வசதிகள் சிறையிலே செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அவைகள் என்னென்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : The Hon. Member is requested to put a separate question.

திரு கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு தலைவரவர்களே, "லெப்பர்" தொழு நோயாளிகளுக்கு என்று வேலூரிலே தனியாக இடம் இருப்பதாகக் கூறினார்கள். அப்படியே யானைக்கால் வந்தவர்கள் திருச்சி ஜெயிலிலும், தஞ்சை ஜெயிலிலும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு மற்றவர்கள் ஒன்றாக அடைக்கப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கெனத் தனியாக இடம், தனி அறை கொடுக்கப்படுமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : The suggestion will be examined by the Government.



1977 ஆகஸ்டு 26]

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, 1976-ம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 41 (2) என்ற செக்ஷனின் கீழ் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் "சி" வகுப்புக் கைதியாக வைக்கப்பட்டிருந்த போது அந்த நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு அம்மையார், முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்த போது, பிப்ரவரி 15 ஆம் தேதி திடீரென்று எனக்கு பிரமோஷன் கொடுத்து மிசா கைதியாக்கப்பட்டு திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டேன். இதனைத் தன்னிலை விளக்கமாக இங்கே எடுத்துச் சொல்கிறேன்.

திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் தொழு நோயாளிகள் தனியாக வைப்பதற்கு வேலூர் சிறையில் வசதி செய்து இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ மனையில் மனநோய் உள்ள கைதிகளுக்குத் தனியாக இடம் ஒதுக்கி அவர்களை அந்த ஆஸ்பத்திரியில் பார்த்து சிகிச்சை அளிக்கின்ற நிலை இருக்கிறது. அதே போல குடந்தைக்கு அருகில் தொழு நோயாளிகளுக்கு வெளியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. திருச்சி பெரிய மருத்துவ மனையில் தொழுநோய் கைதிகளுக்கு என்று தனி இடம் அமைத்து போலீஸ் பாதுகாப்போடு வைத்தியம் செய்தாலும், அதே நேரத்தில் கைதிகளின் பாதுகாப்பிற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : The suggestion implied in the question will be examined by the Government.

## ஆறுமுகம் பிள்ளை—சீதை அம்மாள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், திருப்பத்தூர்.

*113 வினா.—திரு கூத்தகுடி ச. சண்முகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள ஆறுமுகம் பிள்ளை—சீதை அம்மாள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் அபாய நிலையில் உள்ளதென அறிவிக்கப்பட்டு, பள்ளி தற்காலிக கீற்றுக் கொட்டகையில் நடத்தப்படுகின்றதை அரசு அறியுமா ?

(ஆ) இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

[1977 ஆகஸ்டு 26

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) பழுதடைந்த பழைய கட்டடத்தை பழுதுபார்ப்பது சிக்கனமல்லாததினால், பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு கூத்தகுடி ச. சண்முகம் : புதிய கட்டடம் எவ்வளவு காலத்திற்குள்ளாகக் கட்டப்பட இருக்கிறது? இப்பொழுது மழை பெய்கிறது. ஆகவே இடையில், கீற்றுக் கொட்டகையிலாவது பள்ளிக்கூடத்தை வைக்க பிள்ளைகளை இருக்க வைக்க உடனடியாக கீற்றுக்கொட்டகையாவது போட்டு கொடுக்க ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : புதுக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசிலனை செய்ய வரை படமும், தற்கால விலை நிலவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளும் கேட்கப்பட்டுள்ளன. அது வந்தவுடன் கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்யப்படும். தற்காலிக ஏற்பாடுகள் பற்றி பரிசீலிக்கப்படும்.

ஆசிரியர் குழந்தைகளுக்குச் சலுகைகள்

*114 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சாலைகளிலும், பணிகளிலும் தனிச் சலுகைகள் எவையேனும் வழங்கப்பட்டு வருகின்றனவா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரி படிப்பிற்கு மத்திய அரசின் "ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான தேசிய படிப்புதவி" திட்டத்தின் கீழ் மாநில அரசு உபகாரச் சம்பளம் வழங்கி வருகின்றது. அரசுப் பணிகளில் தனிச் சலுகை யாதும் அளிக்கப்படுவதில்லை.

பணிக் காலத்தில் இறக்கும் அரசு ஊழியர் குடும்பம்

* 115 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்கள் பணிக் காலத்தில் இறந்து போனால் அவர்களது குடும்பத்திலுள்ள தகுதியான ஒருவருக்கு அரசு வேலை வாய்ப்பளிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?



1977 ஆகஸ்டு 26]

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : ஆம். இதுபற்றி அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு என். கிட்டப்பா : அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறதா ? எந்தெந்த வகையில் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : அரசு ஆணைப்படி, அரசு அலுவலகங்களிலும், அரசு சார்பு அலுவலகங்களிலும், தன்னாட்சி நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஏனைய மற்ற நிறுவனங்களிலும் ஏற்படுகிற காலியிடங்களில் அவர்களது வாரிசுகளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பகங்கள் அனுப்பும் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

சென்னைக்கு பாதாள இரயில் திட்டம்

* 116 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் பாதாள இரயில் விடும் திட்டம் குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு என். கிட்டப்பா : சென்னை பெருநகர விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது. பக்கிங்காம் கால்வாயைப் பயன்படுத்தி, அந்த பக்கிங்காம் கால்வாய் இருக்கிற பகுதிகளில் பாதாள இரயில் விடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட இருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டது. அது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : கேள்வியை நான் மீண்டும் படிக்கிறேன். சென்னை நகரில் பாதாள இரயில் விடும் திட்டம் குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா ? ஆம் எனில், அதன் விவரம் என்ன ? பதில், இல்லை

என்று சொல்லியிருக்கிறேன். ஆர். டி. எஸ்—ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம், பூமிக்கு மேலே போக. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிந்து சொல்கிறேன். கேள்வியே சரியாக இல்லை.

[முற்பகல் 9-30]

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி சரியாக இல்லை என்று சொன்னார்கள். ஒருவேளை கேள்வி சரியாக இல்லையென்றால் இங்கு கேள்விப் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பிரிவு கேள்வியை திருத்தம் செய்து சரியாக வெளியிடுகின்ற முறை கையாளப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...........

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பாதாள இரயில்தான் இல்லை என்று சொன்னேன். ஆகவே இந்தக் கேள்வி எழவில்லை.

திரு ரா. உமாநாத் : அந்தத் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். இங்கே போக்குவரத்து நெருக்கடியுள்ள நகரமாக இருக்கின்ற காரணத்தால்—ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டே வருகிறது—கல்கத்தா போன்ற நகரங்களில் இதுபோன்ற திட்டங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அதுபோன்று ஏன் இங்கு திட்டமிடவில்லை, திட்டம் இல்லை என்றால் ஏன் இல்லை, அதற்கான காரணங்களைக் கூறக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இல்லை என்று நான் சொன்னது பாதாள இரயில் திட்டம்தான் இல்லை என்று சொன்னேன், "ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம்" இருக்கிறது; அதற்கான விவரங்களும் இருக்கின்றன. அதைப்பற்றி கேள்வி போட்டால் விவரங்களைச் சொல்லுகிறேன். பீச்சிலிருந்து இந்திரா நகர் வரை போகின்ற திட்டம் தனியாக இருக்கிறது. அதற்கு தனிக்கேள்வி போடவும், பாதாள இரயில் இல்லை என்றுதான் நான் சொன்னேன்.

திரு ரா. உமாநாத் : என் கேள்வி பாதாள இரயில் இல்லை என்றால், அந்தத் திட்டம் ஏன் இல்லை, அதற்கான காரணங்கள் என்ன என்றுதான் நான் கேட்டேன். அதற்கு அரசாங்கம் என்ன சொல்கிறது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : அதற்கு தனிக் கேள்வி [illegible]





திரு ரா. உமாநாத் : பாதாள இரயில் திட்டம் ஏன் இல்லை, அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவில்லையா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : ஏன் இல்லை என்று சொன்னேன் என்றால் பாதாள இரயில் திட்டம் பற்றி ஆலோசிக்கப் பட்டதில் இதற்கு அதிகமான செலவு ஆகும் என்பதாகும். பூமிக்கு அடியில் போவது என்றால் அதிகம் செலவாகும். ஆகவே "ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம்" என்பது இப்போது—அதாவது பூமிக்கு மேலே போகக்கூடிய திட்டம்—இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் இதற்கான விவரங்களைச் சொல்லுகிறேன்.

## குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்கு குடிநீர்

*117 வினா.—திரு மு. செல்வராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி பேரூராட்சியின் கோரிக்கையின் பேரில் குடிநீர் வழங்குகிற திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது அமலுக்கு வரும் ?

THE HON. THIRU S. RAGAVANANDAM :

(a) No.

(b) and (c) Do not arise.

## மஞ்சளாற்றின் குறுக்கே பாலம்

*118 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலூகா ஆனைமேலகரம் பஞ்சாயத்தில் மஞ்சளாற்றின் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இனிமேலாவது அங்குள்ள மக்களின் நெடுங்காலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற நிலையில், இந்த அரசு இதற்கான முயற்சியை மேற்கொள்ள முன்

வருமா ? இந்த வேலையை மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு பரிந்துரை வழங்குமா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மஞ்சள் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதின் தேவையைப்பற்றி சரியான தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார் களேயானால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

## வடாற்காடு மாவட்ட விற்பனைக் கூடம்

*119 வினா.—திரு எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் இதுவரை வடாற்காடு மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக்கூடத் தலைவருக்கென, ஒழுங்குமுறைக்கூடத்தின் சார்பில் பிரயாணப்படி, பெட்ரோல், தொலைபேசி முதலிய இனங் களின் கீழ் ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

(ஆ) தணிக்கை அறிக்கைகளில் அதுகுறித்து ஏதேனும் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : விவர அறிக்கை† அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையில் வட ஆற்காடு விற்பனைக்கூடத் தலைவர் இரா. தர்மலிங்கம் அவர் களுக்கு 1970 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை பிரயாணப் படியாக 30,910 ரூபாய் 54 காசும், பெட்ரோல் செலவாக 21,022 ரூபாய் 25 காசும், தொலை பேசி கட்டணச் செலவாக ரூபாய் 4,033.70 காசும் வழங்கப்பட்டுள்ளது என்று இருக்கிறது. இது மிகவும் கொடுமையான செலவு என்கிற காரணத்தால், 1972-73 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில், 10 ஆவது பத்தியில் 970 ரூபாய் 50 காசு அனுமதிக்கப்பட்டதில் 3,313 ரூபாய் 80 காசு எடுத்திருக்கிறார்கள். அதிகப்படியான ரூபாய் 2,343–30 காசையும் வசூல் செய்யவேண்டும் என்றும், 13 ஆவது பத்தியில் 2,434 ரூபாய் 24 காசு அதிகப்படியாக

† 124—127 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





பெற்றுக்கொள்ளப்பட்டதால், இதையும் வசூல் செய்யவேண்டும் என்று ஆடிட் அப்ஜெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது வரை இந்தத் தொகை வசூல் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அப்படியானால் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை, ஏன் வசூல் செய்யவில்லை என்பதை தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மை இயக்குநர் அவர்கள், இந்த ஒழுங்குமுறை கூடத்தின் தலைவருக்கு இதுபற்றி பல கடிதங்கள் எழுதி, அதற்கு அங்கு இருக்கக் கூடிய செயலாளர், தலைவர் ஊரில் இல்லை, அவரைப் பார்க்க முடிய வில்லை என்று தெரிவித்துக் கொண்டிருப்பதால் இதுவரை இதை சரியாக வசூல் செய்ய முடியவில்லை. ஆனால் இந்த அரசு இந்தத் தொகையை வசூல் செய்வதற்கு வழிமுறைகளைக் கடைப்பிடித்து வசூல் செய்யும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : சார், சட்டரீதியாக ஒரு புரொடியூசர்தான் அந்த மாவட்ட விற்பனைக் கூடத்திலே மெம்பராக இருக்க முடியும். அப்படி இருக்கும்போது அவர் எப்படி தலைவராகத் தேர்ந்தெடுக்க முடியும். அவர் புரொடியூசரே கிடையாது. இந்த நிலைமையிலே எப்படி அவர் அதன் தலைவராக ஆனார் ? அப்படி அவர் தலைவராக ஆனது சட்ட விரோதம் அல்லவா ? அப்படித் தெரிந் திருந்தும் இந்த அரசும் இதுவரையிலே அவரைத் தலைவர் பதவியி லிருந்து நீக்குவதற்குப் பதிலாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப் பதற்கு என்ன காரணம் என்பதைக் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, சட்ட விதி முறைகளுக்கு முரண்பாடாக, ஒரு நான்–புரொடியூசரை விவசாயி அல்லாதவரை மாவட்ட விற்பனைக் கூடத்தின் தலைவராக நியமித்தது கழக அரசு. அந்தத் தவறு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்தபோது ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தவறைக் களைவதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும். மேலும், அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலே பல ஊழல்கள் இருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. அவற்றைப் பற்றியெல்லாம் இந்த அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தற்போது தேர்ந்

[திரு பே. அழகர்சாமி] [1977 ஆகஸ்டு 26

தெடுப்பதற்கு வாக்காளர்கள் என்று யாரையோ சிலரை பிரதிநிதிகள் என்று கூறி லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, இப்போது கூட்டுறவுச் சங்கங்களிலே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலே மெம்பர்களாக இருக்கின்றவர்கள் அந்தந்த வட்டார கூட்டுறவுச் சங்கத்திற்கு பிரதிநிதிகள் என்ற முறையிலே, அவர்களை இதற்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பது முறையானது என்பதை உணர்ந்து, அந்த முறையிலே இதை மாற்றியமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு வி. கே. கோதண்டராமன் : சார், இவர் தலைவராக வந்ததற்குப் பிறகு ஏராளமான ஊழல்கள், சார்ஜுகள் அவர் பேரில் வந்திருக்கிறதா ? இவர் தலைவராக வருவதற்கு முன்னால், இவருடைய ஆஸ்தி எவ்வளவு ? தலைவராக வந்ததற்குப் பிறகு எந்த அளவுக்கு அவருக்கு ஆஸ்தி உள்ளது என்பதைப் பரிசீலித்து, சரியான நடவடிக்கை எடுக்கின்ற அளவிற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு நான் உறுதியான பதிலாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஊழல்களைப் போக்குவதற்காகவும், களைவதற்காகவும் இந்த நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட அரசாகும். ஆகவே, ஊழல்கள் எங்கிருந்தாலும், அதிலும் குறிப்பாக விவசாயிகளுடைய பணத்தை யார் எடுத்திருந்தாலும், இந்த அரசு பார்த்துக்கொண்டு இருக்காது. உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு காளை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெங்குறமை விற்பனைக் கூடங்களில் தலைவராக வருகின்றவர்கள் ஜீப், டெலிபோன் வசதிகளுக்காக அன்றன்றைக்கு 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் வரைப் பணத்திலிருந்து வீரயம் செய்கிறார்கள். அப்படி செலவையிலும் யார் செய்திருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பல குறிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, எந்த ஒழுங்குமுறை விற்பனைக்



[illegible] [மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு]

[illegible] குறைபாடுகள் நடந்திருக்கின்றன [illegible] உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், உடனடி [illegible] எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## உடுக்குறியிடாத வினாக்கள்

### தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை பணியாளர்

வினா 1.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி—நூற்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலூகா, மணல்மேட்டிலுள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் தற்போது எத்தனை தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்?

விடை : 478 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

### மாப்படுகை—கடலங்குடி சாலை

வினா 2.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் ஒன்றியம், மாப்படுகை—கடலங்குடி சாலை நெடுஞ்சாலைத் துறையின் கீழ் பராமரிக்கப்படுகின்றதா?

விடை : ஆம்.

Yes.

### பட்டவர்த்தி—குறிச்சி சாலை.

வினா 3.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[திரு எஸ். ஜே. இராமசாமி] [1977 ஆகஸ்டு 26

(ஆ) எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன முறையே கோவாப்டெக்ஸ் மூலமாக, தனியார் மூலமாக?

(இ) தற்போது கோவாப்டெக்சில் இருப்பு உள்ள துணிகளின் மதிப்பு என்ன?

(ஈ) ஏற்றுமதியைப் பெருக்க அரசாங்கம் தரும் ஊக்கம் என்ன?

விடை : (அ) 1976 சனவரி மாதம் முதல் 1977 ஆம் ஆண்டு சூன் மாதம் வரை சுமார் ரூ. 55.50 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாட்டிலிருந்து கைத்தறித் துணிகள் கீழ்க்காணும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன :—

| | |
|---|---|
| (1) பிரான்சு | (10) மேற்கு ஜெர்மனி |
| (2) யு. ஏ. ஆர். | (11) ரஷ்யா (யு. எஸ். எஸ். ஆர்) |
| (3) இங்கிலாந்து | (12) இலங்கை |
| (4) இத்தாலி | (13) ஆஸ்திரேலியா |
| (5) ஸ்வீடன் | (14) டென்மார்க் |
| (6) ஹாலந்து | (15) மலேசியா |
| (7) சிங்கப்பூர் | (16) டெஹோமி |
| (8) நைஜீரியா | (17) ஜப்பான் |
| (9) சுவிட்சர்லாந்து | (18) சியிராலியோனி |

தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1976 ஆம் ஆண்டு சனவரி முதல் 1977 ஆம் ஆண்டு சூன் வரை நேரடியாக தானே கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யவில்லை. எனினும் ரூ. 1.43 இலட்ச மதிப்பிற்கு ஏற்றுமதி வகை கைத்தறித் துணிகளை தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு விற்றது.

சென்ற சூலை மாதத்திலிருந்து தானே ஆஸ்திரேலியா, இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு நேரடியாக மேல் குட்டைகளை ஏற்றுமதி செய்து வருகின்றன. சுமார் 30 இலட்ச அளவுக்கு ஏற்றுமதி செய்ய ஆணை தன் வசம் இருக்கிறது.

(இ) சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 30—6—1977 ஆம் நாளன்று சுமார் ரூ. 12 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் இருப்புள்ளன.

(ஈ) மத்திய அரசு ஏற்றுமதியாளர்களுக்கு தாங்கள் ஏற்றுமதி செய்த பொருள்களின் மதிப்பின் பேரில் ஊக்குவிக்கும் தொகையை



1977 ஆகஸ்டு 26] [திரு எஸ். ஜே. இராமசாமி]

5 சதவீதம் முதல் 17.5 சத வீதம் வரை ஏற்றுமதி செய்யும் பொருளுக்கேற்றாற்போலும், ஏற்றுமதி செய்யப்படும் நாட்டிற்கேற்றாற்போலும் அளித்து வருகின்றன. இதைத் தவிர்த்து ஏற்றுமதி செய்யும் இயற்கைப் பட்டு, கைத்தறி ஜவுளிகளின் மதிப்பில் 10 முதல் 15 சத வீதம் வரை கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவி அளித்து வருகின்றது. கைத்தறி ஜவுளி ஏற்றுமதியினை வலுப்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு அரசு பருத்தி, பட்டு, ரெடிமேடு ஆடைகளை சிறந்த முறையில் ஏற்றுமதி செய்வோருக்கு ஆண்டு தோறும் பரிசு கொடுத்து வருகிறது. தவிர ஏற்றுமதி செய்யப்படும் சில துணி ரகங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மதிப்பில் ஒரு பங்கு திருப்பி தரப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள்

வினா 9.—திரு ஏ. சுவாமிதாஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை அரசு தொடக்கப் பள்ளிகள் உள்ளன?

(ஆ) அவற்றுள் எத்தனைப் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை?

(இ) கட்டடங்கள் இல்லாத எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை :

(அ) 305

(ஆ) 140

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு தொடக்கப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 7 லட்சம் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 9 தொடக்கப் பள்ளிகளை ரூ. 62,700 செலவில் உடனடியாக பழுது பார்க்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்திலுள்ள சில தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கும், பழுதுபார்த்தலுக்கும் இவ்வாண்டு தனி மானியமாக ரூ. 10 இலட்சம் ஒதுக்க வேண்டுமென்ற பள்ளி கல்வி

[திரு ஏ. சுவாமிதாஸ்] . [1977 ஆகஸ்டு 26

இயக்குநரின் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இம் மாவட்டத்திலுள்ள நல்ல கட்டடங்கள் இல்லாத அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டுகளில், ஆண்டிற்கு சில பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவது என்ற முறையில் கட்டடங்கள் கட்டப்படும்.

கோவில்பட்டி வட்டத்தில் புதிய கண்மாய்கள்

வினு 10.—திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

கோவில்பட்டி தாலூகாவில் 1971–72, 1973–74, 1974–75 ஆகிய நிதி ஆண்டுகளில் அமைக்கப்பட்ட புதிய பாசனக் கண்மாய்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை :

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி தாலூகாவில் எடுத்துக்கொள்ளப்பட்ட புதிய பாசனக் கண்மாய்களின் எண்ணிக்கை வருமாறு :

(1) 1971–72—இல்லை

(2) 1973–74—1

(3) 1974–75—இல்லை.

The number of new irrigation tanks formed in Kovilpatti taluk of Tirunelveli district is furnished as follows.—

| | | |
|---|---|---|
| (1) | 1971–72 | Nil |
| (2) | 1973–74 | 1 |
| (3) | 1974–75 | Nil |

ஆசிரியர் பதவிக்கு வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்

வினு 11.—திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் படித்துவிட்டு பட்டதாரி ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவிகளுக்கென வேலை தேடித் தரும் அலுவலகங்களில் பதிவுசெய்துகொண்டுள்ளவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்?



1977 ஆகஸ்டு 26] [திரு சோ. அழகர்சாமி]

விடை : விவரங்கள்* இணைப்பில் தரப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மானியம் வழங்கல்

வினு 12.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

1975–76 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர் உழவு மாடுகள் வாங்கவும் கிணறுகள் தோண்டவும் அரசு அளித்த கடன் தொகை எவ்வளவு?

விடை : 1975–76 ஆம் ஆண்டு கடனுதவித் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. ஆயினும் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், உழவு மாடுகள், விதைகள், உழுக் கருவிகள் ஆகியவை வழங்கு வதற்கு ரூ. 99,600-ம் விவசாயக் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 4,91,500-ம் செலவிடப்பட்டுள்ளது.

பிற்பட்ட வகுப்பினருக்கு தொழில் கருவிகள் வழங்கல்

வினு 13.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

1974–75 ஆம் ஆண்டில் இலவசமாகக் கருவிகள் பெற்ற சவரத் தொழிலாளர்கள் மற்றும் சலவைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு; மாவட்ட வாரியாக?

விடை : 1974–75 ஆம் ஆண்டில் இலவசமாகக் கருவிகள் பெற்ற சவரத் தொழிலாளர்கள் மற்றும் சலவைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மாவட்டவாரியாக கீழே தரப்பட்டுள்ளது :—

| மாவட்டத்தின் பெயர். | பயன் அடைந்த சவரத் தொழி லாளர் எண்ணிக்கை. | பயன் அடைந்த சலவைத் தொழி லாளர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. சென்னை | 275 | 210 |
| 2. செங்கற்பட்டு | 165 | 125 |
| 3. வட ஆற்காடு | 175 | 130 |
| 4. தென்னாற்காடு | 180 | 135 |
| 5. தஞ்சாவூர் | 155 | 130 |
| 6. திருச்சிராப்பள்ளி | 125 | 105 |

* [illegible] இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | பயன் அடைந்த சவரத் தொழிலாளர் எண்ணிக்கை | பயன் அடைந்த சலவைத் தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 7. புதுக்கோட்டை | 55 | 45 |
| 8. சேலம் | 165 | 125 |
| 9. தர்மபுரி | 110 | 85 |
| 10. கோயம்புத்தூர் | 165 | 150 |
| 11. நீலகிரி | 82 | 62 |
| 12. மதுரை | 165 | 125 |
| 13. ராமநாதபுரம் | 195 | 145 |
| 14. திருநெல்வேலி | 165 | 130 |
| 15. கன்னியாகுமரி | 82 | ... |
| மொத்தம் | 2,259 | 1,702 |

### அரிசனங்களுக்கு வீடுகள்

**வினா 14.**—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1975–76 ஆம் ஆண்டு முடிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாகக் கட்டித் தரப்பட்ட வீடுகள் எத்தனை, மாவட்டவாரியாக?

**விடை** : 1975–76 முடிய அரிசனங்களுக்கு தமிழ்நாடு அரிசன [illegible] வசதி வளர்ச்சிக் கழகம் (15—2—74-ல் ஆரம்பிக்கப்பட்டது) [illegible] 30,022 வீடுகள் இலவசமாக கட்டித் தரப்பட்டன. மாவட்டவாரியான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. செங்கற்பட்டு ... ... ... | 1,925 |
| 2. வட. ஆற்காடு ... ... ... | 2,758 |
| 3. தென்னாற்காடு ... ... ... | 3,121 |
| 4. சேலம் ... ... ... | 3,125 |
| 5. தர்மபுரி ... ... ... | 1,559 |
| 6. கோயம்புத்தூர் ... ... ... | 2,458 |
| 7. நீலகிரி ... ... ... | 520 |
| 8. திருச்சிராப்பள்ளி ... ... ... | [illegible] |
| 9. புதுக்[illegible] ... ... ... | [illegible] |
| [illegible]ஊர் ... ... ... | 2,967 |





| | |
|---|---|
| 11. மதுரை ... ... ... | 2,352 |
| 12. ராமநாதபுரம் ... ... ... | 1,437 |
| 13. திருநெல்வேலி ... ... ... | 2,186 |
| 14. கன்னியாகுமரி ... ... ... | 600 |
| மொத்தம் | 30,022 |

**வினா 15.**—திரு துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முறையே 31—1—1976 வரை, 1—2—1976 முதல் 30—6—1977 வரையிலான காலத்தில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன?

**விடை** : 31—1—1976 வரை 30,000 வீடுகளும், 1—2—1976 முதல் 30—6—1977 வரையில் 3,885 வீடுகளும் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன.

### மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை

**வினா 16.**—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1974–75 ஆம் ஆண்டில் படிப்பு உதவித் தொகை பெற்ற குற்றப் பரம்பரைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர்?

**விடை** : 65,334 பேர்.

**வினா 17.**—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1974–75 ஆம் ஆண்டில் படிப்பு உதவித் தொகை பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் எத்தனை பேர்?

**விடை** : 1974–75 ஆம் ஆண்டில் படிப்பு உதவித் தொகை பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கை 1,75,391 ஆகும்.

The number of Backward Classes students who were sanctioned scholarships during 1974–75 is 1 75, 391.

திரு ஐ. கணேசன்.
திரு வி. அர்ச்சுனன்.
திரு கே. ஆர். சின்னராசு.
திரு என். தனசேகரன்.
திரு எஸ். கணேசன்.
திரு எம். பொன்னுரங்கம்.
திரு ஒ. எஸ். வேலுச்சாமி.
திரு எம். அண்ணாமலை.
திரு ஜே. ஜேம்ஸ்.

பேரவையின் 215 (1) ஆவது விதியின் கீழ் திரு ஒ. எஸ். வேலுச்சாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

## (ஈ) மேலவைத் துணைத் தலைவரிடமிருந்து வரப்பெற்றுள்ள செய்திகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அறிவிப்பு. சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப் பெற்றுள்ளன.

1977–78 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.—

1. திரு கே. அறிவழகன்.
2. திரு டி. வி. முத்துகிருஷ்ணன்.
3. திரு எல். பலராமன்.
4. திரு கே. எஸ். கணபதி.
5. திரு பி. மாணிக்கம்.

1977–78 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.—

1. திரு என். முத்து.
2. திரு இளம்பரிதி.
3. திரு என். ராமகிருஷ்ண தேவர்.
4. திரு கே. எஸ். அப்துல் வகாப்.
5. திரு என். வில்சன் அபோலோஸ்.





1977–78 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.—

1. திரு எம். மாசிலாமணி.
2. திரு வி. தங்கபாண்டியன்.
3. திரு எச். எல். முருகேசன்.
4. திரு ஆர். சக்திமோகன்.
5. திரு ஒய். வெங்கடேச்வர தீட்சதர்.

1977–78 ஆம் நிதி ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை சட்டமன்ற விதிகள் ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்—

1. திரு ஏ. கே. வில்வம்.
2. திரு கோ. சி. மணி
3. திரு எ. பாலசுப்பிரமணியம்.
4. திரு டி. சந்தோசம்.
5. திரு எம். எம். பாக்கர்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்த லாரி விபத்துக்குள்ளாகி மூன்று பேர் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்த லாரி விபத்துக்குள்ளாகி 3 பேர் இறந்தது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு வி. கே. கோதண்டராமன் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டியது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவரவர்களே, 15—8—1977 ஆம் தேதி காலை சுமார் 11-50 மணிக்கு காட்டுப் பாக்கத்தைச் சேர்ந்த எம். டி. ஜே. 4264 எண் லாரி வந்து கொண்டிருந்த நேரத்திலே —காஞ்சிபுரத்திலிருந்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது—சுங்குவார் ... அருகில் வந்துகொண்டிருந்தபோது ...

விசாரணை நடக்க இருப்பதாலும் இது குறித்து மேலும் விவாதிக்கும் பொருட்டு பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 9 மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படாமையால் தொடர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்.

உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கடந்த 9 மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படாதது குறித்தும், அதனால் அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருப்பது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு, திரு ஏ. ஆர். மாரிமுத்து, திரு ரகுமான்கான், திரு எம். ஏ. லத்தீப், திரு என். வரதராசன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்.

*திரு ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரியில் கடந்த எட்டு மாதங்களாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அப்படி அவர்களுக்குச் சம்பளம் கிடைக்காத காரணத்தால் ஆசிரியர்கள் மிகுந்த சங்கடத்திற்குள்ளாகி இப்பொழுது உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன. அந்தக் கல்லூரி நிர்வாகம் சரியாக நடக்காத காரணத்தால் இப்படி இருப்பதாகத் தெரிகிறது.



ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தைத் கல்லூரி மான்யமாகப் பெறுகிறார்கள். அப்படி மான்யத்தைப் பெற்று வைத்துக்கொண்டு, பெற்ற மான்யத்திலிருந்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்றால் அது மிகுந்த வருத்தத்திற்குரியது. கண்டனத்திற்குரியது. இப்படி ஒரு மேனேஜ்மெண்ட் அரசிலிருந்து பெற்ற பணத்தில் வேறு செலவுகளைச் செய்துகொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்றால் இந்த ஆசிரியர்கள் எப்படி வாழ முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அரசினிடத்தில் முறையிட்டுக்கொண்டு, இனிமேல் அரசே நேரடியாகச் சம்பளம் கொடுக்கும் என்று அமைச்சர் கூறியதாகக்கூடச் சொன்னார்கள். ஆனால் இதற்கு முன் கொடுக்க வேண்டிய பாக்கியை எப்படிக் கொடுப்பது?

அந்தக் கல்லூரிக்குத் தற்சமயம் கரெஸ்பாண்டெண்ட் யாரும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் அந்தக் கல்லூரி போய்க்கொண்டிருக்கிறது. இது அங்கு வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும், ஸ்டாஃப்-க்கும் நல்லது இல்லை என்பதோடு கூட மாணவர்களுக்கும் நல்லது இல்லை. ஆகவே, அந்தக் கல்லூரியை அரசே ஏற்று நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இதுமாதிரி தவறான நிர்வாகம் செய்து, சரியாக நடக்காத கல்லூரியை அரசே ஏற்று நடத்துவதுதான் சாலச் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுத்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி பல்வேறு பிரச்னைகளை அந்தக் கல்லூரி சம்பந்தமாகப் பேச வேண்டியிருப்பதால் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஏ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி இன்றைக்கு மிகவும் மோசமான நிலையில், அது கல்விக் கூடமாக இல்லாமல் ஒரு போராட்டக் களமாக ஏற்பட்டு, இன்றைக்கு அந்தப் பகுதி மக்கள் தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, அந்தக் கல்லூரி ஸ்தாபகரான கருத்த ராவுத்தர் அந்தப் பகுதியில் கல்வித் தீபத்தை ஏற்றி வைக்க வேண்டுமென்ற

உணாவோடு மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் ஏராளமான நிலங்களை டிரஸ்டாக அந்தக் கல்லூரிக்குத் தந்து அந்தக் கல்லூரி திறக்கப் பட்டது. ஆனால் கடந்த எட்டு மாதக் காலமாக அங்கேயிருக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரப்படாத ஒரு நிலைமை இருக்கிறது. தொழிலாளர்கள் எப்படித் தங்களுடைய கோரிக்கை களுக்காகத் தொழிற்சாலைகளில் போராடிக்கொண்டிருக்கிறார்களோ, அதைப்போல கல்விக் கூடம் இன்றைக்கு ஒரு தொழிற்சாலையைப் போல மாற்றப்பட்டிருக்கிறது. அங்குள்ள கல்லூரி ஆசிரியர்கள், அங்குள்ள துணைப் பேராசிரியர்கள் ஆகிய இவர்கள் இன்றைக்கு கல்லூரியைப் போராட்டக் களமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துத் தர வேண்டிய வணக்கத்திற்குரிய தெய்வங்களாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள் போராட வேண்டிய துயரநிலை ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் அங்கே ஊழல் நடைபெற்றிருக் கிறது. அந்த ஊழலின் அடிப்படைக் காரணமாக அங்கே இருக்கக் கூடிய நிர்வாகம்—தலைவரவர்களே, உங்கள் மூலமாக அதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்—அந்தக் கல்லூரியைச் சுற்றி வேலி போடுகிறோம் என்று சொல்லி 30,000 ரூபாய் கணக்குக் காட்டி அதிலிருந்து கொள்ளையடித்திருக்கிறார்கள். அதைப்போல பங்களாதேஷ் நிதி என்று ஏறக்குறைய 10,000 ரூபாய் அதிலே கொள்ளையடித்திருக்கிறார்கள். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எவ்வளவோ சொல்லியும் எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆசிரியப் பெருங்குடி மக்களுக்குச் சம்பளம் தர வேண்டுமென்று பலரைச் சந்தித்தாகி விட்டது. அரசாங்கத்திலே அமைச்சரைச் சந்தித்தாகிவிட்டது. எல்லோரையும் சந்தித்தாகி விட்டது. அதிலே அக்கறை எடுத்து அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சி இல்லாமல் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு இரண்டு மாத சம்பளம் கிடைப்பதற்கு நாங்கள் முயற்சியெடுக்கிறோம் என்ற உறுதிமொழி தரப்பட் டிருக்கிறது. நான் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துக் கேட்ட பொழுது, எனக்கு அது தெரியவருகிறது.

அதைப் போல் இன்னொன்று. வாக்ஃப் போர்ட்டின் மூலமாக எடுத்துக் கொள்ளலாம் என்ற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று



சொல்லப்படுகிறதே தவிர, ஏறத்தாழ 2 மாதங்களுக்குப் பின்னாலே இருக்கக்கூடிய 6 மாதச் சம்பளங்கள் என்ன ஆவது? இந்த 2 மாதச் சம்பளங்கள் விரைவாக வருமா? அல்லது, சிறுபான்மையாருடைய கல்லூரி என்ற காரணத்தாலே அரசு அதிலே தலையிட முடியாது, அரசு நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள முடியாது—காரணம், சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு இருக்கிறது. எனவே, எடுக்க முடியாது என்ற காரணத்தைச் சொல்லிவிட்டு, அதைத் தொடர்ந்து கல்லூரியிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு சம்பளமும் கிடையாது என்று சொல்லப் போகிறார்களா? 9 மாதகாலமாக, வேதனையிலே உழன்று கொண் டிருக்கிறார்கள், அதனால் போராடிக் கொண்டிருக்கிறார்கள், ஊர்வலம் வருகிறார்கள். உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. ஆகவே, கல்வி தீபம் அணைக்கப் படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஊழலை ஒழிப்பதைத் தூய நோக்க மாகக் கொண்டிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது அவ்வழியிலே செயலாற்றுவதாகச் சொல்லப்படுகிற பொழுது, அந்த ஊழலை நீக்கிவிட, நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஏதோ ஓரிரு பிரச்சினைகளில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற் காக, தப்பித்துக்கொள்ள விடக்கூடாது. எந்த நிலையிலே இருந்தா லும் நடவடிக்கை எடுக்க வேண்டும்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அனுமதி கொடுத்த பிறகு பேசவேண்டியதையெல்லாம் இப்போது பேசக் கூடாது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு ஏ. ரகுமான்கான் : ஆகவே, ஆசிரியப் பெருமக்கள் அவர்கள் சேவையைச் செய்ய முடியாமல், உண்ணாவிரதம் இருப்பதைப் போக்க வும், மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லுகின்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளவும், 8 மாத சம்பளத்தை ஆசிரியர் களுக்குக் கொடுக்கின்ற நிலையில், பிரச்சினையைப் பேசவேண்டிய காரணத்தால், இந்தப் புனிதச் சபை, தன்னுடைய நடவடிக்கையை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எம். ஏ. லத்தீப் இருக்கை யில் இல்லை.

திரு என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது உத்தமபாளையத்தில், ஹாஜி கருத்த ராவுத்தர்

ஹௌடியா கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அங்கு உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. முதலிலே, நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புவது, அந்தப் பகுதியில், 100 மைல் சுற்றளவிலே ஒரே ஒரு கல்லூரிதான் அங்கே இருக்கிறது. இந்தக் கல்லூரிக்கு, ஏராளமான நிலங்கள், ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருக்கிறது—சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளை மோசடி செய்யும் எண்ணத்தோடு, அதனுடைய நிர்வாகிகள் முயற்சி செய்கிறார்கள். 8 மாதச் சம்பளம் கிடைக்கவில்லை என்று சொன்னால், நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன்; அந்த நகரத்திலே, இந்தப் பேராசிரியர்களுக்கு எந்தப் பலசரக்குக் கடையிலும் எதுவும் வாங்க முடியாத நிலையிலே அவர்கள் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அந்தக் கல்லூரி தாளாளர்மீது நடவடிக்கை எடுங்கள். எந்த முயற்சியாவது செய்து, ஊழலைப் புரிந்துள்ளவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள். 8 மாத சம்பளத்தை உடனே வழங்கவேண்டுமென்பது தான் அவர்கள் வேண்டுகோள். கல்விக் கூடத்திலேயே தகுந்த [illegible]யில்லை. நிர்வாகிகளால் இவ்வாறு அவதிப்படுகின்றனர். இதனுடைய நோக்கம் என்ன என்று அரசு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். ஏறக்குறைய ரூ. 160 கோடி ஆண்டொன்றுக்குக் கல்வித் துறையிலே அரசு செலவு செய்து விட்டு, இம்மாதிரி கல்லூரி நிர்வாகத்தினர் செய்கின்ற காரியங்களினால், ஏன் வீண் பழியை நாம் சுமத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக்கூட விவாதிக்க வேண்டும்.

ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கவேண்டும். உண்ணாவிரதத்தை அவர்கள் நிறுத்த வேண்டும். மாணவர்களது கல்வி தொடர வேண்டும். கல்வி தழைக்கட்டும், கல்லூரி நிலைக்கட்டும் என்பது ஆசிரியர்கள் கொள்கை. இதற்காக, இதுபற்றி விவாதிப்பதற்காக, சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌடியா கல்லூரி, உத்தமபாளையம் 1956 ஆம் ஆண்டு கருத்த ராவுத்தர் அவர்களால் தொடங்கப்பட்டது. அவர் கல்லூரிக்கு சுமார் ரூ. 6 இலட்சம் (3 இலட்சம் ரொக்கமாகவும், 3 இலட்சம் நிலம் மற்றும் விடுதி



வருமானம்) அறக்கட்டளை (Endowment) ஏற்படுத்தினார். நிலத்தைப் பொறுத்த வரை, அதை கல்லூரிக்கு பதிவு செய்வதற்கு முன் 6—8—1958 அன்று இறந்து விட்டார். அவர் மறைவுக்கு பிறகு அவருடைய மூத்த புதல்வர் திரு குலாம் மொய்தீன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். நிர்வாகம் கல்லூரிக்குச் சேர வேண்டிய வருமானம் வந்தவுடன் திருப்பித் தரலாம் என்ற எண்ணத்தில் சுமார் ரூ. 7 இலட்சத்திற்கு கனரா வங்கியிலிருந்து கடன் பெற்றுள்ளது. ஆனால், கல்லூரிக்குச் சொந்தமான நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தினை திரு குலாம் மொய்தீன் கல்லூரிக்கு கொடுக்கவில்லை. கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லோரும் மறைந்த ராவுத்தரின் புதல்வர்களே, அவர்களில் சிலர் நில வருமானத்தைப் பெற வேண்டி திண்டுக்கல் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். நீதி மன்றமும், நிலம் கல்லூரிக்கு சொந்தம் என்று தீர்ப்பு வழங்கியது. இதன் பின்னர் நீதி மன்ற உத்தரவின்படி நிலம் குத்தகைக்கு விடப்பட்டது.

[முற்பகல் 10-00]

ஆனால் இதற்குப் பிறகும் பிரச்சினை தீரவில்லை. ஆகையால் அறுவடைக்குப் பின்னர் கிடைத்த வருமானமாகிய ரூ. 13,000 நீதி மன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. திரு குலாம் மொய்தீனுடைய சில நடவடிக்கைகளால் கல்லூரி நிலத்தை இழக்கக் கூடிய நிலை ஏற்பட்டு விட்டது என்று கூறப்படுகிறது. 1976 ஆம் ஆண்டின் முதல் பாதி மாதங்கள் வரை கல்லூரியின் நிலைமை ஓரளவு திருப்திகரமாக இருந்தது. ஆனால் பின்னர் வங்கியும் கடன் தர மறுக்கவே நிலைமை மோசமாகியது. ஆசிரியர்களுக்கு ஊதியம் மே 1976 முதல் வழங்கப்படாமலிருந்தது. அரசு இதில் தலையிட்டு சுமார் 3 இலட்சம் ரூபாய் மானியமாக (Advance Adhoc grant) வழங்கியது. ஆசிரியர்களுக்கு இதைக்கொண்டு நவம்பர் 1976 வரை சம்பளம் கொடுக்கப்பட்டது. தற்போது டிசம்பர் 1976 முதல் ஊதியம் நிலுவை உள்ளது.

கல்லூரியின் நிலைமையை சரி செய்யும் பொருட்டு நிர்வாகத்தில் உள்ள தாளாளர் மற்றும் உறுப்பினர்கள் அரசு மற்றும் பல்கலைக் கழகம் அழைத்த போது எல்லோரும் வராததால் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

நீதிமன்றத்தால் முடக்கி வைக்கப்பட்டுள்ள ரூ. 13,000-ஐப் பெற்று கல்லூரிக்கு செலவு செய்யவும் (2) 6—8—1958 முதல் கல்லூரிக்கு சேர வேண்டிய வருமானத்தை திரு குலாம் மொய்தீனிடமிருந்து பெறவும் மற்றும் (3) நில வருமானத்தை கல்லூரிக்கு செலுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதேபோன்று கல்லூரியின் ஆசிரியர்களுக்கு அரசே நேரிடையாக ஊதியம் வழங்க வேண்டுமென்றும், ஒரு அறிக்கை குழுவை கல்லூரிக்கு அனுப்பி ஏதாவது முறைகேடுகள் நடந்துள்ளனவா என்று கண்டறிய வேண்டும் என்று மதுரை பல்கலைக் கழக துணை வேந்தர் அரசைக் கேட்டுக்கொண்டார். இது தவிர பொது மக்களிடமிருந்து அரசே கல்லூரியை எடுத்து நடத்த வேண்டும் என்று விண்ணப்பம் விடுக்கப்பட்டது.

இது சிறுபான்மையோரால் நடத்தப்படும் கல்லூரி; ஆகையால், அரசு கல்லூரியை எடுத்துக்கொள்வதற்கு சட்டப் பிரச்சினைகள் உள்ளன. இக்கல்லூரியின் நிலங்கள் "வக்ப்" சொத்து என்பதால், "வக்ஃப் போர்டு" நீதி மன்றத்தை அணுகி Official Receiver நியமிக்க வழி செய்ய இயலும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தேவையான நடவடிக்கை எடுக்க கல்லூரி கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். தவிர வக்ப் போர்டு செயலரையும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி அரசு கேட்க உத்தேசித்துள்ளது.

சமீபத்தில் அரசாணை எண் 1235, கல்வி, நாள் 13—7—1977-இல் அரசு ரூ. 80,000 மானியமாக (Advance ad hoc grant) வழங்க உத்தரவிட்டது. உதவி கல்லூரிக் கல்வி இயக்குநரை நேரிடையாக கல்லூரிக்கு அனுப்பி இந்தத் தொகையிலிருந்து ஜூன் மற்றும் ஜூலை 1977-க்கு ஊதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர், ஒரு துணைப் பேராசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதார் 13 பேர் ஜூன் மாத ஊதியத்தைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் மற்றவர்கள் ஏற்கனவே 6 மாதம் ஊதிய நிலுவை இருப்பதால் ஜூன் மாத ஊதியத்தை மட்டும் வாங்கிக் கொள்ள மாட்டோம் என்று முதலில் மறுத்து விட்டனர். பின்னர் அவர்களும் ஊதியம் வாங்கிக் கொள்ள சம்மதித்துள்ளனர். அவர்களுக்கு விரைவில் 2 மாத ஊதியம் வழங்கப்படும்.





முன்னமேயே கூறியபடி இக்கல்லூரி நிர்வாகத்தில் உள்ள அனைவரும் மறைந்த ராவுத்தரின் புதல்வர்களே. கல்லூரியை எப்படியாவது மூடிவிட்டு அதன் சொத்துக்களை முக்கியமாக, நிலங்களை தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆகையால்தான் கல்லூரிக்கு உண்டான நிலங்களைப் பெற யாரும் அக்கறை காட்டவில்லை.

ஏற்கனவே கன்யாகுமரி மாவட்டம், நெய்யூரிலுள்ள லட்சுமிபுரம் கலை, விஞ்ஞான கல்லூரியை பிப்ரவரி 1975 முதலும் மற்றும் சிவகங்கையிலுள்ள ராஜா தொரைசிங்கம் கல்லூரியை ஜனவரி 1977 முதலும் அரசு தற்காலிகமாக எடுத்து நடத்தி வருகிறது. இதே போன்று ஹாஜி ராவுத்தர் ஹௌடியா கல்லூரியையும் நிர்வாகத்தினரின் ஒப்புதலைப் பெற்று, தற்காலிகமாக 2 வருடங்களுக்கு அரசு ஏற்று நடத்தலாம் என்று கல்லூரி கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெற்று அனுப்பும்படி கல்லூரி கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவருடைய அறிக்கையைப் பெற்று, கல்லூரியை அரசு மேற்கொள்வது பற்றி அரசு விரைவில் தீர்மானிக்கும்.

ஆகவே இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, அரசினர் தனித் தீர்மானம்.

## 4. அரசினர் தீர்மானம்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளராக இருந்து ஓய்வுபெற்ற திரு மா. சண்முகசுப்பிரமணியம் அவர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே; "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1962-ல் இருந்து 1964 ஆம் ஆண்டு வரை உதவிச் செயலாளராகவும், 1964 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை துணைச் செயலாளராகவும், 1971 ஆம் ஆண்டு இணைச் செயலாளராகவும் 1972 ஆம் ஆண்டு கூட்டுச் செயலாளராக

வும், 1973 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை செயலாளராகவும், திரு மா. சண்முகசுப்பிர மணியம் அவர்கள் இத்துறையில் பணியாற்றியுள்ளார்கள். சட்டமன்ற மரபுகளையும், வழி முறைகளையும், இவ் அவைக்கும் அதன் உறுப்பினர் களுக்கும் எடுத்துக் காட்டி, அவர் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்கு பேரவை தனது பாராட்டுதலை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 5. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த—செல்திறன்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த—செல்திறன்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/77).

மாண்புமிகு திரு கி. மனோகரன் : 1977 ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/77) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

---

* 19—8—77-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் அவருடைய கருத்துக்களைச் சொல்லி விட்ட பிறகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கலாம். பலர் பேச விரும்பினாலும் பேசலாம்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/77) பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் இந்நேரத்தில் அது குறித்து சில வார்த்தைகள் தெரிவிக்க விரும்புகிறேன்.

தற்போதுள்ள கேளிக்கை வரி அமைப்பின்படி கட்டணம் கேளிக்கை வரி, மொத்த வரி விதிப்பில், கேளிக்கை வரி சதவிகிதம் குறைந்த வகுப்பு அனுமதிச் சீட்டுகளைப் பொறுத்த மட்டில், உயர் வகுப்பு அனுமதிச் சீட்டுகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள தற்காலிக திரைப்படக் கொட்டகைகள் பெரும்பாலானவற்றில் இப்போது குறைந்த வகுப்பு அனுமதிச் சீட்டுகள் நடைமுறையில் உள்ளன. ஆனால் அங்கு கேளிக்கை வரி செலுத்தப்படாமல் இருப்பதற்கு இது காரணமாக இருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய வரி ஏய்ப்பைத் தடுக்க ஏதாவது முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, அனுமதிச் சீட்டில் வரி போக திரைப்பட தொழிலுக்குக் கிடைக்கும் பங்கு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது.

ஆகவே, உயர் விகித வரி விதிப்பினால் 1976 ஆம் ஆண்டு பல தற்காலிகத் திரைப்படக் கொட்டகைகள் மூட வேண்டி வந்தது. திரைப்படத் தொழில் துறையினர் முறையீடு செய்து கொண்டனர். திரைப்படத் துறைக்குச் செல்கிறவர்கள் மீது விதிக்கப்பட்ட வரி விகிதம் மிக அதிகமாக இருந்ததன் விளைவாக திரைப்படத் தொழி லுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அகற்றுவது இன்றியமை யாதது என அரசு கருதுகிறது.

அதன்படி திரைப்படம் பார்ப்பதற்கு உள்ளே அனுமதிப்பதற்காக கேளிக்கை வரி, மேல் வரி சேர்ந்து விதிக்கப்படுகிற கட்டணம் 25 காசுக்கு மேற்படாது இருக்கும் அனுமதிச் சீட்டுகளைப் பொறுத்த மட்டில் கூடுதல் மேல் வரி 15 காசிலிருந்து 50 காசு, கேளிக்கை வரி உயர் வகுப்புக்கு விதிக்கப்படுகிற கட்டணம் 25 காசுக்கு மேற்பட்டு ரூ. 1-க்கு மேற்படாது இருக்கும் அனுமதிச் சீட்டுகளைப் பொறுத்த மட்டில் மேல் வரி 15 காசிலிருந்து 10 காசாகக் குறைப்பதற்கு அரசு

முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க [illegible] கேளிக்கை வரிச் சட்டத்தின் 4 ஆவது ஷரத்துப் பிரிவிற்கு ஒரு உப பிரிவு திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று அரசு [illegible] கிறது. இந்த முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற அளவில்தான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமென்று நம்புகிறேன்.

[முற்பகல் 10.10]

திரு ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, சினிமாவுக்குப் போடப்பட்டிருக்கின்ற அடிஷனல் சர்சார்ஜைக் குறைக்க இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பட்ஜெட் உரையின்போது குறிப்பிட்டதற்கேற்ப இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே 25 காசுக்கு உட்பட்டிருக்கின்ற டிக்கெட்டுகளுக்கு 10 காசு வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் இருக்கின்ற டூரிங் சினிமா, பெர்மனென்ட் தியேட்டர்களில், அதாவது பஞ்சாயத்து அல்லது மேஜர் பஞ்சாயத்து இந்த மாதிரியான பகுதிகளில் எங்கும் 25 காசு டிக்கெட் இருக்கின்ற மாதிரி தெரியவில்லை. குறைந்தபட்சம் 40 காசு, 45 காசு அல்லது 50 காசு என்று இருக்கிறது தரைக்கு. ஆகையால் இப்படி தரை இருக்கின்ற இடங்களில் பெஞ்சைப் போட்டு வைத்திருக்கிறார்கள் பெர்மனென்ட் தியேட்டர்களிலே. ஆகையால் அங்கே சாதாரண ஜனங்கள் போனால் 50 காசு, 45 காசு டிக்கட் தான் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்குகின்றபோது, அவர்களுக்கு இந்த 10 காசு வரிச் சலுகை இல்லாமல், 5 காசு தான் கிடைக்கும். ஆகையால் இந்த 25 காசு என்றிருப்பதை 40 காசு என்று வைத்தால் தான், அரசு எதிர் பார்க்கின்றபடி கீழ்நிலையில் இருக்கின்ற மிகச் சாதாரண மக்களுக்கு சலுகை கிடைத்ததாக இருக்கும் என்ற காரணத்தால், இந்த 25 காசு என்பதை 40 காசு வரையில் 10 காசு சலுகை என்று மாற்ற யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி திருத்தச் சட்டம் இந்த நேரத்தில் அவசியம் தானா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு நீண்ட காலமாக இருந்து வருகிற பிரச்னை, இந்தத் தொழில்





வரை நசித்துக் கொண்டிருக்கிறது என்பது தான். இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருவதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்போது எண்ணிப்பார்க்க வேண்டும். நேற்றைக்கு முன் தினம் நம்முடைய செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு கேளிக்கை வரி கம்பௌண்டிங் முறை கொண்டு வருவது குறித்து இந்த அரசு ஆலோசித்து வருகிறது என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொல்வது போல, தமிழகத்தில் குறைந்த கட்டணமாக, நிகர கட்டணமாக 25 காசுகள் இருக்கின்ற திரைப்படக் கொட்டகைகள் 10 அல்லது 15 தான் இருக்க முடியும் என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 25 காசுக்கு மேல் ஒரு ரூபாய் வரை இருக்கின்ற அந்தக் கட்டணம் வேண்டுமானால் ஓரளவுக்கு பலனளிக்கக் கூடியதாக இருக்கலாம். குறைந்த கட்டணத்தில் படம் பார்ப்பவர்கள் திரும்பவும் அந்தப் படத்தை பார்ப்பதன் மூலம் இந்த நஷ்டம் சரிக் கட்டப்படும் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. தமிழகத்தில் இருக்கின்ற ஏறத்தாழ 1,100 கிராமங்களில் இருக்கின்ற பெர்மனென்ட் தியேட்டராக இருந்தாலும், டூரிங் சினிமாவாக இருந்தாலும், 10 அல்லது 15 கொட்டகைகளில் தான் இந்த 25 காசு நிகர கட்டணம் இருக்க முடியும் என்பது என்னுடைய கருத்து. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். என்னுடைய கோரிக்கை எல்லாம், செய்தி, சுற்றுலா துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, செப்டம்பர் 15 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் கம்பௌண்டிங் முறையைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி ஏய்க்கப்பட்டிருப்பதாகக் கூட நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், வரி ஏய்ப்பு என்பது, போடப்பட்டிருக்கின்ற வரி பளுவின் காரணமாக, அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருப்பவர்கள் சில பல பகுதிகளில் ஏய்ப்புகள் செய்திருக்கலாமே தவிர, திருச்சி, தஞ்சை போன்ற பகுதிகளில் வரி ஏய்ப்பு அறவே கிடையாது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு நினைவுப்படுத்தக் கடமைப்

பட்டிருக்கிறேன். எனவே இந்தத் தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அன்று பிறந்த நாள் விழாவில் அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள கம்பௌண்டிங் முறையைக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இந்தத் தொழில் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய பல பெரியவர்கள் நீண்டகாலமாக இந்த அரசிற்கு கோரிக்கை விடுத்து, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பில் இருந்த காலத்தில் பிலிம் என்குயரி கமிட்டி என்று ஒன்று அமைத்து இந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகச் செய்தார்கள். அந்தக் கமிட்டி இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தியேட்டர் சொந்தக்காரர்கள், விநியோகஸ்தர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள், ஸ்டுடியோ உரிமையாளர்கள் எல்லோரையும் சந்தித்து அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிந்து ஒரு ரிப்போர்ட்டை அரசிற்கு கொடுத்திருக்கிறது அந்த ரிப்போர்ட்டை அமல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறுபரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு க. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவின் நோக்கங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அதில் கூறப்பட்டிருக்கிறது. ' evasion of entertainments tax also is found to be Mampant , என்று வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே என்னசெய்வது. இதற்கு முன்னால் மத்திய நிதி அமைச்சராக இருந்த சுப்பிரமண்யம் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது வாலண்டரி டிஸ்க்ளோஷர் ஸ்கீம் ******

இப்போது வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு என்ன வழி? வரியைக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மூற்பகல் 10-15-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.





சாதாரண மக்கள், ஏழை மக்கள் வரி கட்ட முடியாவிட்டால் ஜப்தி செய்கிறார்கள். சட்டி பானைகளை தூக்கிவிடுகிறார்கள். விவசாயிகளை கஷ்டப்படுத்துகிறார்கள். ரெண்ட் ரிக்கவரி ஆக்டைப் போட்டு நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இப்படி வரி ஏய்ப்பவர்களுக்கு ஒரு சலுகை. வரி கட்ட பணம் இல்லை என்பதற்காக அல்ல, வரி ஏய்ப்பவர்களுக்கு சலுகை தரப்படுகிறது. வரி ஏய்ப்பவர்கள் அதிகமாக இருப்பதால் அதைத் தடுக்க என்ன வழி என்றால் வரியைக் குறைப்பது என்ற கொள்கை வேடிக்கையான கொள்கையாக இருக்கிறது.

நான் ஒன்று சொல்வேன், வரியே போடாவிட்டால் தொல்லையே கிடையாது. டூரிங் டாக்கீசில் வரி கட்டுவதில்லை. அங்கெல்லாம் எந்தத் தரமான படங்கள் ஓடுகின்றன என்று தெரியும். அந்தப் படங்களைப் பார்த்துத்தான் நாம் இப்போது இந்த நிலையில் இருக்கிறோம். அவற்றைப் பார்க்காமல் இருப்பது நல்லது. அங்கு ஓடுகின்ற படங்களைப் பார்த்தால் எல்லாம் பத்தாம்பசலிப் படங்கள் தான் ஓடுகின்றன. அவை வாழ்க்கையில் உள்ள உண்மை நிலையை யொட்டி அமைவதில்லை. வாழ்க்கையில் நடக்காதவைதான் காட்டப் படுகின்றன. அப்படிப்பட்ட படங்களுக்கு ஒரு சலுகை. அவற்றிற்கு ஏன் இந்தச் சலுகை? அந்தப் படங்களை எல்லோரும் ஓசியில் பார்த்து விட்டுப் போகட்டுமே. தேர்தல் காலத்தில், விளம்பரம் என்று சொல்லி, ஓசியில் படங்களைப் போட்டுக் காண்பித்தார்கள். தேர்தல் அறிக்கை என்று படம் போட்டுக் காண்பித்தார்கள். இவற்றிற்கு ஏன் ஐந்து பைசா, பத்து பைசா குறைக்க வேண்டும். மொத்தமாக ஒன்றுமே வேண்டாம் என்று எடுத்து விடுங்கள். வரி ஏய்ப்பவர்களுக்கு சலுகை காட்டுவது என்றால் என்ன பொருள்?

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். வரி ஏய்ப்பவர்களுக்கு சலுகை, ஏழை விவசாயிகள் வரி கட்டவேண்டுமென்றால் அவர்களுக்கு வரி ஏய்ப்பதற்கு வழி இல்லை. அரசாங்க ஊழியர்களுக்கு வரி ஏய்ப்பதற்கு வழி இல்லை. கணக்குகள் எல்லாம் கச்சிதமாக இருக்கின்றன. ஊழலை ஒழிக்கப்போகிறோம் என்று ஊரெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வரி ஏய்ப்பைத் தடுக்க வரி குறைப்பு என்று சொல்கிறார்கள். நல்ல படங்களுக்கு படம் ஒன்றுக்கு ஒரு

இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நல்ல படம் என்பதற்கு என்ன கிரவுண்ட், அதற்கு என்ன யார்ட் ஸ்டிக் என்று தெரியவில்லை; சென்னை போன்ற நகரங்களில் நல்ல படங்கள் என்றால் பாக்ஸ் ஆபீஸ் இட்டில் போகிறது. அந்தப் படங்கள் சென்னையில்தான் ஓடுகின்றன. சில நேரங்களில் சில மனிதர்கள், அது சில நாட்கள்தான்; இப்படித்தான் போகிறது. அப்படிப்பட்ட படங்கள் கிராமங்களில் வருவதில்லை. அங்கே வக்கிரமான ரசனை தான் வளர்ந்து கொண்டிருக்கிறது.

நல்ல படங்களுக்கு பணம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மக்களின் வரிப்பணம் இப்படிப் போகிறது. ஆனால் விவசாயிகள் கடன்பட்டிருக்கிறார்கள், அவர்களது கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால், திரு அழகர்சாமி போன்றவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள், அதை யாரும் கவனிப்பதில்லை. விவசாயிகளுக்கான மின் கட்டணத்தை 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது 11 காசை 12 காசாக உயர்த்தியதைத் தாக்கினார்கள். இப்போது அப்படி 12 காசுக்காவது கொண்டு வந்திருக்கக் கூடாதா? திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கான மின் கட்டணத்தை உயர்த்தி விட்டது என்று குற்றஞ் சொன்னார்கள். அப்படிப்பட்ட குற்றம் ஏற்படாத அளவிற்கு அந்த 12 காசு அளவிற்காவது அதைக் கொண்டுவரக் கூடாதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஐந்து மசோதாக்கள் இருக்கின்றன. நேரத்தை வீணாக்குகிற முறையில் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள். ஐந்து சட்ட முன் வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்கேற்றபடி ஒத்துழைக்க வேண்டும். சம்பந்தம் இல்லாத விஷயங்களில் போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

[ முற்பகல் 10.20]

திரு க. சுப்பு : தலைவர் அவர்களே, அடுத்தபடியாக— — — — —

திரு கோ. எ. சீனிவாசரெட்டியார் : பாயிண்ட் ஆப் ஆர்டர், உறுப்பினர் அவர்கள் பேசும்போது, திரு சி. சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது முறையானதாக இல்லை,



ஆகவே சபையில் இல்லாத ஒருவரைப்பற்றி பேசிய பேச்சை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : கனம் உறுப்பினர் அவர்கள் பேசும் போது சம்பந்தம் இல்லாத விஷயத்தை எல்லாம் சொல்லுகிறார்கள்.

** ** ** ** ** ** ** *

அடிக்கடி இப்படி பேசிக்கொண்டிருப்பது சரியல்ல, ஆகவே இப்படிப் பட்ட பேச்சை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரச்னையை விட்டுவிட்டு சம்பந்தம் இல்லாமல் எதையெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுப்பு அவர்கள் பிரச்னையைப்பற்றி பேசுங்கள், அதை விட்டுவிட்டு நீங்கள் எங்கேயெல்லாமோ பேசுகிறீர்கள், பிரச்னையை விட்டுவிட்டு எதையெல்லாமோ பேசிக்கொண்டிருப்பது சாமார்த்தியம் என்று எண்ணிக் கொண்டு பேசாதீர்கள். (திரு க. சுப்பு அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசிக்கொண்டு இருந்தார்கள்) இப்படி இருக்கையில் இருந்து கொண்டே பேசிக் கொண்டு இருப்பதும் சரியல்ல, முறையல்ல.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, திரு சி. எஸ்.-ஐ பற்றி பேசிய பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு க. சுப்பு : அவைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது, அவைக் குறிப்பிலிருந்து நினைத்ததையெல்லாம் நீக்கிவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியாது என்று நீங்கள் எப்படி சொல்ல முடியும்? அப்படி சொல்வதற்கு நீங்கள் யார்? அந்த உரிமை உங்களுக்கு கிடையாது. அப்படிப்பட்ட பேச்சை யெல்லாம் தயவுசெய்து பேசாதீர்கள். உட்காருங்கள். பிரச்னையில் மட்டும் பேசுங்கள். இதைப்பற்றி எத்தனை தடவை நான் சொல்லிக் கொண்டிருப்பது?

* * * * *

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 10.22–10.25-இல் சில பகுதிகள்) அகற்றப்பெற்றன.

திரு க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மரபுக்கு மாறாக ஒரு சர்ச்சை ஏற்பட்டு, அதன் விளைவாக பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டு, பல தகாத, தவறான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்த அவையிலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்கு நான் வருந்துகிறேன். அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காகத் தாங்கள் தயவுகூர்ந்து, இங்கே உட்கார்ந்து திரு சுப்பு பேசிவிட்டதாகச் சொன்ன வார்த்தைகளையும், மற்றவர்கள் பேசிய அத்தனை வார்த்தைகளையும் அவைக் குறிப் பேட்டிலே இருந்து நீக்குவதன் மூலம், தவறான உணர்ச்சியிலிருந்து விடுபட்டு, மறுபடியும் முறையாக நடந்துகொள்வதற்கு வழிவகை வகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இப்படி, பல சம்பவங்கள் நடந்து வருகின்றன. இப்படி எல்லோரும் எழுந்து பேசுவதாக இருந்தால், எத்தனை மணி நேர மானாலும் சபையை நடத்த முடியாது. ஒரு பக்கம் * * * * என்றும் விவாதம் நடந்தது. தலைவரவர்களே உட்காரச் சொன் னாலும், தலைவரவர்களே கெஞ்சிக் கேட்டுக் கொண்டாலும் பலர் உட்காரவில்லை. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து இருக்கலாமா என்பதைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே * * * * என்று சொன்ன அத்தனை சொற்களையும் இந்த அவையின் குறிப் பேட்டிலே இருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு சுப்பு அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களுக்குள் தன்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த மன்றத் திலே என்ன வேண்டுமானாலும் பேசிவிடலாம். பிறகு அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட்டால் போதும் என்பது சரியான மரபா? அப்படியென்றால் நாங்கள் என்ன வேண்டுமானாலும் பேசி அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படும் என்று பேசலாம். ஆகவே இது அவையின் உணர்வுக்கு ஏற்றதாக இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-26-ல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.





மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் வேதனைப்பட்டு, அவர் உள்ள உணர்வுகளை எடுத்து கருத்தாகத் தந்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்தப் பேரவையில் ஏதோ தவறுகள் உணர்ச்சிவயமான கருத்துக்கள் பயன் படுத்திக் கொண்டாலும், அதைக் குறிப்பேட்டிலே பதிவு செய்யாமல் எடுத்துவிட வேண்டும். குறிப்பாக எதிர்க் கட்சியைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்கள் வருத்தம் தெரிவித்த நிலைமை ஏற்பட்ட பிறகு, அதை மதித்து, அதற்கு ஏற்ப வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது தான் நியாயம் என்று கருதுகிற காரணத்தினால், கூத்தகுடி சண்முகம் அவர்கள் வேறு நடவடிக்கை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாக்க, அப்படிப்பட்ட நிலைமை மறுபடியும் ஏற்படக் கூடாது என்று நீங்கள் தயவு செய்து வற்புறுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு செ. சதாசிவம் : தலைவரவர்களே, திரு சுப்பு அவர்கள் பேசிய நேரத்திலே சுப்பிரமணியம் அவர்கள் * * * * என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அவ்வாறு அவர் இந்த அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசலாமா? இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றி குறைவாகப் பேசுவது கூடாது. திரு சி. சுப்பிர மணியம் அவர்களைப் பற்றி பேசிய அத்தனை வார்த்தைகளையும் அவையின் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு க. சுப்பு : வரியை ஏய்க்கின்ற முறையிலே உள்ளவர்கள் உபதேசம் செய்யக்கூடிய நிலைமை மாறவேண்டும். இந்த வரியை ஏய்க்கக் கூடியவர்களுக்கு சலுகைகள் கொடுப்பதை மாற்ற வேண்டு மென்ற ஒரு நிபந்தனையை கூறிக்கொண்டு, இந்த மசோதாவை எதிர்த்து நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-28-ல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

[1977 ஆகஸ்டு 26

[முற்பகல் 10.30]

திரு என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கேளிக்கை வரியில் சில நிவாரணங்களை அளித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை இன்று நம்முடைய மக்கள் கழுத்தளவு வரிக்கு ஆளாகி விட்டிருக்கிற நிலையில் சிறிதளவு வரி நிவாரணம் கொடுத்தாலும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் கொடுத்திருக்கும் விளக்க விவரங்களைப் பார்க்கும்போது அதிகாரிகளாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும், இந்தப் பிரச்சினையை எப்படிக் காண்கிறார்கள் என்பதைப் பற்றித்தான் வருத்தப்படுகிறேன். வரி ஏய்ப்பவர்களுக்கு வரிச் சலுகை கொடுத்த உடனேயே நம்முடைய அரசுக்கு வருமானம் வரும் என்று விளக்கக் குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருப்பது சரியானது அல்ல, நல்லது அல்ல. அந்தப் பகுதியே நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது அரசுத் துறையில் இருந்து வந்தாலும், அமைச்சர்கள் பெயரில் வந்தாலும் சரி, நல்லது அல்ல.

நான் இன்றைய தினம் மொத்தமாக விவசாயிகள் என்று பார்க்கவில்லை. குறிப்பாக, மின்சாரக் கட்டணத்தை எடுத்துக் கொண்டால் நீண்ட காலமாக எங்கள் கட்சி இந்த நாட்டில் வற்புறுத்தி வந்தது. விவசாயிகள் பல தரப்பார் இருக்கிறார்கள், கீழ் மட்டத்தில் இருக்கும் விவசாயிகள் மேலே நிலச்சுவான்தார்கள் என்று சொன்னோம். இந்த அரசு வந்தவுடன் 2½ ஏக்கர் நஞ்சை நிலமும், 5 ஏக்கர் புஞ்சை நிலமும் வைத்திருப்பவர்களுக்கு மின்சாரக் கட்டணத்திலே நிவாரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்ற உணர்வை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதே போன்ற சினிமாத் துறையில் கிராமப் புறமா, நகரப் புறமா என்று பார்க்காமல்—வசதி படைத்தவர்களுக்கு சினிமா காட்சிகளைப் பார்க்கக்கூடிய வசதிகள் இருக்கின்றன. சென்னை நகரத்தில் மிகப் பெரிய சினிமா கொட்டகைகளில் பத்து ரூபாய் இருபது ரூபாய் செலவழிக்கக்கூடிய நபர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வரியை உயர்த்துவது பற்றிக் கவலை இல்லை. அது நியாயமும் கூட. நேற்றைய தினம் நிதியமைச்சர் அவர்கள் கிராமப் புறத்தில் இருக்கும் ரூரல் ரிச்சுக்கு வரி போடுவது பற்றி ஆலோசிக்கிறேன் என்று கூறியிருக்கிறார்கள். அதே போன்று சினிமா கொட்டகைகளையும் மூன்று தரமாகப் பிரிக்க வேண்டுமென்று



1977 ஆகஸ்டு 26] [திரு என். வரதராஜன்]

வற்புறுத்துகிறேன். அது பற்றி ஆலோசிக்க வேண்டும். கிராமப் புறத்தில் இருப்பது, நகரத்தில் இருப்பது என்ற வகையில் பிரிக்கப்பட்டு அந்த வகையில் வரிக் குறைப்புக்கு உதவி செய்ய வேண்டும்.

நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய்க்கு மேற்பட்டு இரண்டு ரூபாய்க்கு மேற்படாது இருந்தால் 30 காசு என்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் எடுத்துக் கொண்டால் கட்டை வண்டி இழுப்பவர்கள், கை வண்டி இழுப்பவர்கள், ரிக்ஷா ஓட்டுபவர்கள், சாதாரண கடைநிலை ஊழியர்கள், கடைச் சிப்பந்திகள், நடுத்தர மக்கள் இரண்டு ரூபாய் டிக்கட்டில் போகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மக்களுக்கும் நிவாரணம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும்.

சினிமாவைப் பற்றிப் பலவிதமான பேச்சுக்கள் அடிபடுகின்றன. எவ்வளவோ பெரியவர்கள் தமிழகத்தில் சினிமாத் துறையில் முட்டி மோதி உடைபட்டுக் கீழே விழுந்து விட்டார்கள். இந்தப் புதிய நாகரிக சமூக அமைப்பில் அது ஒரு பெரும் துறையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட துறை மேலும் வளருவதற்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில் நல்ல படங்கள், தரமான படங்கள் உழைக்கும் மக்கள், பாடுபடும் மக்கள் இந்த நாட்டின் மாற்றங்களை அறிந்து கொள்ளுகிற அளவுக்கு வரவேண்டும்.

இன்று சுழன்று சுழன்று ஒன்றுக்குள்ளேயே குண்டுச் சட்டிக் குள்ளேயே குதிரை ஓட்டக்கூடிய கற்பனையாக இல்லாமல் காட்சிகளில் மாற்றம் கொண்டுவர இந்த அரசு முயற்சிக்க வேண்டும். இந்தக் கட்டணத்தின் மேல் வரியைக் குறைக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் இருக்கின்ற கேளிக்கை வரி சர்சார்ஜ் குறைப்பு மசோதா மீது எனது கருத்தைக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவில் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்ற பகுதியில் கூறியிருப்பது—

'With the increased efforts to prevent evasion, the Film Industry has complained that the share of the industry has progressively come down and that the high rates of tax have led to the closure of as many as 113 touring cinemas during the year 1976'.

[திரு ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 26

ஆக இந்த மசோதா இங்கே வருவதற்குக் காரணமாக கூறப்பட்டிருப்பது பல தியேட்டர்கள் மூடப்பட்டு விட்டன. மூடப்பட்டதற்குக் காரணம் என்ன என்ருல் வரியை ஏய்ப்பதைத் தடுக்கின்ற முயற்சியின் காரணமாகத்தான் சினிமாத் தொழில் பாதிக்கப்பட்டுவிட்டது. தியேட்டர்கள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன என்று சொல்லியிருக்கிருர்கள். ஏதோ சினிமா முதலாளிகளைக் காப்பாற்றுகிருேம் என்று சொல்வதற்குப் பதிலாக அவர்கள் ஏழை மக்கள் அதிகமாக சினிமா பார்ப்பதற்காக இதைக் கொண்டு வருகிருேம் என்று கூறியிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த மசோதாவினுடைய நோக்கம், சினிமா முதலாளிகளைக் காப்பதற்குத்தான். அதை மறைமுகமாக இங்கே கூறியிருப்பது சரி அல்ல, சாதாரணமாகச் சொல்லுவார்கள், காலுக்கு ஏற்ற செருப்பை வாங்குவதற்குப் பதிலாக செருப்புக்கேற்ற காலின் பகுதியை வெட்டிக்கொள் என்ற முறையிலே இந்த மசோதா அமைந்திருக்கிறது.

ஆக சினிமா தொழிலிலே அதிக அக்கறை செலுத்துகிற இந்த அரசு சினிமாத் தொழிலிலே ஈடுபட்டவர்களுக்கு அதிகச் சலுகைகள் வழங்கவேண்டுமென்று விரும்புகிற இந்த அரசு சினிமாத் தொழிலினல் இந்த நாட்டிற்கு எவ்வளவு கேடு இருக்கிறது. இந்த நாட்டிலே எந்த அளவிற்குக் கறுப்பு பணம் ஏற்பட்டிருக்கிறது, விலைவாசி உயர்விற்கு அதுவே காரணமாக இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்காமல் ஏதோ சினிமா தொழிலில் ஈடுபடுகிறவர்கள் பாதிக்கப்படுகிருர்கள் என்று சொல்வது சரியல்ல, உண்மையிலேயே இந்த மசோதா வேறு நோக்கத்திற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு ரெ. வி. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, இந்த சினிமாவின் மூலம் கிடைக்கும் வருமானம் மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும். பேரூராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் போகின்றன. அந்த பணம் சர்சார்ஜ் என்ற முறையிலே ஊராட்சி ஒன்றியங்களுக்கும் போகின்றன. ஆகவே, இந்த வரி குறைப்பினுல் பெரும்பாலும் ஸ்தல ஸ்தாபனங்கள்தான் பாதிக்கப்படும். ஏதோ வரியை ஏய்ப்பவர்கள் சிலர் இருக்கிருர்கள் என்ற காரணத்தால் இது மாதிரி திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது மூட்டைப் பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்தியது போலாகிறது. பாபநாசம் பேரூராட்சிக்கு நான்



1977 ஆகஸ்டு 26] [ரெ. வி. சவுந்திரராஜன்]

அதற்குத் தலைவராக இருக்கிறேன். அங்கே பெரும்பாலும் வருமானம் சினிமா மூலம்தான் வருகிறது—இன்றைய நிலை அரசு, நகராட்சிகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் உதவி செய்யுமா? என்ற நிலைமையில் இருக்கிறது. அங்கே சம்பளம்கூட கொடுக்க முடியவில்லை. ஆகவே இந்த சினிமாக் கட்டணங்கள் குறைக்கப்படுமானல் நகரப் பஞ்சாயத்துக்கள் மட்டும் அல்ல, நகராட்சிகள் மட்டுமல்ல, மாநகராட்சிகள் உட்பட எல்லாமே பாதிக்கப்படும். ஆகவே ஏதோ வரியை எய்க்கிருர்கள் என்ற காரணத்திற்காக வரியைக் குறைத்து இருப்பது சரியல்ல. வரி ஏய்க்கிருர்கள் என்ருல் அதைக் கண்டுபிடித்து தண்டனை அளிக்கவேண்டுமே தவிர, சினிமாக் கட்டணத்தைக் குறைத்து எங்களைப் போன்ற பேரூராட்சிகளையும், நகராட்சிகளையும் கஷ்டத்திற்கு உள்ளாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு பழைய நிலைமையை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி இச்சம் "தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/7 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

திரு ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே விவாதத்திலே அனைத்துக் கட்சியினரும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். முறையாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகுதான் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனல் அவர்கள் பதில் கூருமலே நிறைவேற்றி விட்டார்கள், அது முறையா?

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : ஏற்கனவே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விட்டு விட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு ஜேம்ஸ் அவர்கள் வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு முன்னுல் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்க வேண்டும். இப்பொழுது அது முடிந்து விட்டது. வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு அதை அவை ஏற்றுக் கொண்டதற்குப்

[திரு க. உரொ. எட்மண்ட்] [1977 ஆகஸ்டு 26

பிறகு மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்து சொல்ல வேண்டிய அவசியமில்லை.

திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். பெரும்பாலான உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் தீர்மானத்தை ஆதரிப்பது இயற்கை, அது நிறைவேறுவது இயற்கை. எனவே, நிறைவேறிவிட்டது என்பதால் விளக்கங்கள் தர வேண்டாமென்று சொல்வதைவிட தாங்கள் அனுமதித்தால் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லி கருத்து உருவாக ஏதுவாகும்.

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, பல உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லும்போது, அந்தக் கருத்துக்களைப் பற்றி அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டியது அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவர் சொன்னதை நான் எடுத்துக்கொண்டேன். கடைசியிலே பிரிவு வாரியாக விடும்பொழுது இருந்த நேரத்தில் அவர் பேசட்டும். அவர் முதலிலே பேசிவிட்டதால் கடைசியாக இருக்காது என்று கருதி தீர்மானம் நிறைவேறும்படி செய்தேன். கடைசியிலே சட்ட முன்வடிவை நிறைவேற்றத் தீர்மானம் கொண்டு வரும் நேரத்தில் பேச வேண்டுமானால் வாய்ப்பு தருவோம்.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/77) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று கோருகிறேன்.

தலைவரவர்களே, உங்கள் முன்னால், இந்த அவையின் முன்னால் நான் வைத்திருக்கின்ற கேளிக்கை வரி மசோதாவைப்பற்றி பல நண்பர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே குறிப்பாக முதலில் இந்த மசோதாவின் நோக்கத்தை நான் விளக்கிட விரும்புகிறேன். இந்த மசோதாவின் அடிப்படை நோக்கம், வரி ஏய்ப்பைத் தடுப்பது என்பதாகும். இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஏறக்குறைய இங்கிருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும்



1977 ஆகஸ்டு 26] [திரு கி. மனோகரன்]

என்று நான் கருதுகிறேன். மொத்தம் இருக்கிற தியேட்டர்கள், அதைப்பற்றி ஒரு கணக்கை உங்களது கவனத்திற்கு வைக்க நான் விரும்புகிறேன். 1—4—76 வரை பர்மனென்ட் தியேட்டர்களின் எண்ணிக்கை 763, செமி-பர்மனென்ட் தியேட்டர்களின் எண்ணிக்கை 48, டூரிங் எண்ணிக்கை 674, ஆக மொத்தம் 1,485. 1—2—77-ல் பர்மனென்ட் தியேட்டர்கள் 779, செமி-பர்மனென்ட் தியேட்டர்கள் 61, டூரிங் 552, அவற்றினுடைய மொத்தம் 1,392.

இங்கே பேசிய மாரிமுத்து அவர்களும், மற்றைய நண்பர்களும் குறிப்பிடுகின்றபொழுது இப்பொழுது 25 பைசா என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள், அதிலே குறைத்திருக்கிறீர்கள், அப்படியிருக்கின்ற தியேட்டர்கள் மிகவும் குறைச்சலானதாகும், ஆகையால் அதிகம் எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி வரிக் குறைப்பின் மூலம், நாம் தந்த சலுகையின் மூலம் சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு 1 கோடியே 5 இலட்சம் என்பதை நான் நினைவூட்டுகிறேன்.

டூரிங் டாக்கீஸ்கள் இன்றைக்குப் பல இடங்களில் மூடப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 113 கொட்டகைகளுக்கு மேல் மூடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏன் இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு அவர்கள் விளக்கம் சொன்னபொழுது அதிகாரிகளின் தொல்லைகளைத் தாங்க முடியவில்லை என்றும், எங்களுக்குக் கிடைக்கின்ற வசூலில் கொஞ்சத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டு செல்கிறது என்றும், கொஞ்சத்தை நாங்கள் அதிகாரிகளுக்கும் கொடுத்துவிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்றும், மிச்சம்தான் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, ஒழுங்காக நடத்தப்பட முடியாத காரணத்தால் நாங்கள் அதை மூடுகிறோம் என்று அவர்கள் தங்களது கருத்தைத் தெரிவித்தார்கள்.

இன்றைக்கு, இப்படி குறைக்கப்படுவதன்மூலம் நாம் இலட்சக் கணக்கான டிக்கட்டுகளை விற்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற தெளிவான கணக்கு, புள்ளி விபரத்தோடு தரப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பாக, அருமை நண்பர் சுப்பு அவர்கள் அவருக்கே உரித்தான விளக்கத்தைச் சொன்னார். அவர் வரி போடாமலே சர்க்கார் நடத்துவதிலே வல்லவர் என்பதை

[திரு கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட்டு 26

இங்கே எடுத்துச் சொன்னார். வரியைப் போட வேண்டியதில்லையென்பதைச் சொன்னதோடு மட்டுமல்லாமல், படமே எதற்காக என்றும் சொன்னார். அது மட்டுமல்ல, கிராமப் புறங்களிலே இருக்கிற கொட்டகைகளில் போடப்படுகிற படங்கள் நாட்டு நிலைமையைப் பிரதிபலிக்கவில்லை, அந்தப் படங்கள் தேவையற்ற படங்களாகும், அதைப் பார்க்காமல் இருப்பது நல்லது என்றும் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அவர் பார்க்காமல் இருப்பதைப் பற்றி பரிதாபப் படவில்லை. ஆனால், மற்றவர்கள் ஏராளமாகப் பார்க்கிறார்கள் என்பதை நான் சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே, இன்னும் ஒன்றைச் சொன்னார்கள், ஏதோ ஒரு படத்தின் பெயரைச் சொல்லி, 4 நாட்களுக்கு ஓடிற்று, அதற்குள்ளே பெட்டிக்குள் போய் பதுங்கிற்று என்று ஒரு படத்தைப் பற்றிச் சொன்னார். ஆனால், இன்றைக்குக் கிராமப்புறங்களில் டூரிங் டாக்கீஸ்களிலே மட்டுமல்லாமல், பஞ்சாயத்துக்களிலே இருக்கிற தியேட்டர்களிலே, செமி—பர்மனென்ட் தியேட்டர்களிலே நடை பெறுகின்ற, போடப் படுகின்ற படங்களிலே, அதிகமான வருவாயைத் தருகின்ற படங்கள், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். நடித்த படங்கள் என்பதை மனச் சாட்சி உள்ள அத்தனை பேரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கப்பட்ட, புரட்சித் தலைவரின் மதுரைவீரன் போன்ற படங்கள், இன்றைக்குப் புதிய படங்களைவிட எவ்வளவு அதிகமாக மக்களால் விரும்பிப் பார்க்கப் படுகின்றன என்பதை அருமை நண்பர்கள் உணர்வார்கள். சுப்பு அவர்களுக்கு அதையெல்லாம் பார்க்க நேரம் இல்லாத காரணத் தாலே, அப்படிப்பட்ட கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு இன்னொன்றையும் இங்கே எடுத்துச் சொன்னார். தரமான படத்திற்கு ரூ. 1 இலட்சம் என்றால் சொன்னால் என்ன யார்ட்ஸ்டிக் என்று கேட்டார்கள். நான் சுப்பு அவர்களையே கேட்கிறேன். "தரமான படம்"—இது ஒரு தலைப்பு. அதற்கு ஒரு யார்ட்ஸ்டிக்கை நீங்களே உருவாக்கி, நீங்களே தருவீர்களானால் அதைப் பரிசீலிக்கவும் சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தரமான படத்திற்கு இலக்கணம் இல்லையென்று மட்டும் அருள்கூர்ந்து சொல்ல வேண்டாமென்று சுப்பு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தரமான படம் எப்படி இருக்க



1977 ஆகஸ்டு 26] [திரு கி. மனோகரன்]

வேண்டுமென்பதை விளக்குவதற்காக ஒரு குழு அமைக்க வேண்டுமானால், ஒரு குழு அமைக்கலாம். அந்தக் குழுவில் தரமான படத்தின் யார்ட்ஸ்டிக்கை எனது அருமை நண்பர் சுப்பு அவர்கள் கொண்டு வந்தால், அதைப் பரிசீலித்து, ஏற்கக் கூடியதாக இருந்தால்—பெரும்பாலும் இருக்காது என்று நம்புகிறேன்—ஏற்றுக்கொள்ள ஆட்சேபனை இல்லையென்றும் நான் பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு பேசிய கணேசன் அவர்கள் கம்பவுன்டிங் சிஸ்டம் தேவை, கொண்டு வரப்பட வேண்டுமென்று இங்கே தனது கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்துக்குச் சர்க்காரின் பரிபூரண ஆதரவு உண்டு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அவரும் இதுபோன்ற டூரிங் டாக்கீஸ் நடத்திக் கொண்டிருந்தவர் என்பது எனக்குத் தெரியும். இப்பொழுது இருக்கிறதோ, இல்லையோ எனக்குத் தெரியாது. 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே, என்னை அவர் அழைத்துச் சென்று புரட்சித் தலைவரின் படத்தைப் போட்டு, நானும் அவரும் பார்த்து சேர்ந்து இருந்த பழைய காலங்களெல்லாம் எனக்கு நினைவிற்கு வந்து கொண்டிருக்கிறது. கணேசன் அவர்களின் கருத்து நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாரிமுத்து அவர்கள் பேசும்பொழுது, 40 பைசாவாக ஆக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதை ஏற்றுக்கொள்வதிற்கில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டால், சர்க்காருக்கு ஏற்படும் நஷ்டம், ரூ. 2 கோடியைத் தாண்டும் என்பதை அருள்கூர்ந்து அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரதராஜன் அவர்கள் பேசும்பொழுது, அதிகாரிகளின் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார். அந்தத் தொல்லைகளைப் போக்குவதற்காக இப்படிப்பட்ட மசோதாவை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன் என்பதை நான் அவருக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் எப்பொழுதும் வழக்கமாகப் பேசும்பொழுது, நியாயமாகப் பேசுவது வழக்கம். இன்றைக்கு அநியாயமாகப் பேசினார் என்று நான் சொல்லவில்லை. ஆனால், நோக்கத்தையே தலைகீழாக மாற்றுகிற அளவுக்கு அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள்

[திரு கி. மனோகரன்] [1977 ஆகஸ்டு 26

கருத்தை வெளியிட்டு விட்டார்களோ என்று நான் வருந்துகிறேன். இந்த மசோதாவின் நோக்கம் முதலாளிகளைக் காப்பாற்றுவது, இந்த மசோதாவின் நோக்கம் எக்சிபிட்டர்ஸ்-ஐக் காப்பாற்றுவது, இந்த மசோதாவின் நோக்கம் புரட்யூசர்ஸ்-ஐக் காப்பாற்றுவது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். நான் அவருக்குத் தெரிவித்துக்

[முற்பகல் 10-50]

சொல்வேன். இந்த மசோதாவின் நோக்கம், சினிமாத் தொழில் நலிந்து கொண்டு வருகிறது—அதைக் காப்பாற்றுவதற்காக என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது. இதிலே இத்தனை சாராரும் ஈடுபடுகிறார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது. தியேட்டர்காரர்கள், இதிலே வருகிறார்கள். படம் பிடிப்பவர்கள் இதிலே வருகிறார்கள். படத்தைப் போட்டுப் பார்ப்பவர்கள் இதிலே வருகிறார்கள். ஆகவே இந்த முக்கூட்டிலேதான் இது இயங்கி வருகிறது என்பதை ஜேம்ஸ் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக நாங்கள் "ஆப்ஜக்டஸ் அண்ட் ரீசன்ஸ்"-ல் இது எதற்காக கொண்டு வரப்படுகிறது என்று தெளிவுபடுத்தி இருக்கிறோம். அதைப் படித்ததற்குப் பிறகும், முதலாளிகளுக்காகக் கொண்டு வரப்படுகிற சட்டம் என்று எந்த அடிப்படையில், ஜேம்ஸ் அவர்கள் பேசினார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ பேசுவதற்காக பேசினார் என்று கருதுகிறேன்.

இந்த மசோதா சினிமாத் தொழிலுக்குக் கேடு, இழிவு என்று அவர் சொன்னார். பேசுவதற்காக அவர் பேசுகிறாரா, அல்லது படித்துப் பேசுகிறாரா என்பது எனக்குப் புரியவில்லை. எப்படி சினிமாத் தொழிலுக்கு இது கேடு, எப்படி இழிவு என்று எனக்குப் புரியவில்லை. அவர் தன்னந்தனியாக இந்த மசோதாவை, தனது அறையில் படித்து நாளைக்கு இந்த மசோதாவைப் பற்றி அவர் கொண்டிருக்கிற அருமையான கருத்துக்களை எனக்கு எழுதி அனுப்புமாறு, இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதா உண்மையிலேயே கொண்டு வரப்பட்ட நோக்கம் நான் திரும்பவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அளவசியமான வரி ஏய்ப்பு இருக்கிறது. அந்த வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும். அதிகாரிகள் தொல்லைகளைத் தடுக்கவும் அதே நேரத்தில் ஏழை மக்கள் அதிகமாகச் சென்று படம் பார்க்கவும், இந்த



1977 ஆகஸ்டு 26] [திரு கி. மனோகரன்]

மசோதா வழி செய்கிறது. ஏழைகள் எதற்காகப் படம் பார்க்க வேண்டுமென்று யாரும் கேட்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த ஏழைகள் உழைத்து உழைத்து கடைசி நேரத்தில் கொஞ்சம் ஓய்வு பெறுவதற்கான மன மகிழ்ச்சியோடு தியேட்டர்களுக்குப் போகும்போது, அதிகமான கட்டணத்தைக் கொடுத்து உள்ளே போகும் சிரமம் ஏற்படாமல் தடுப்பதற்கும், புரட்சித் தலைவர் நடித்தவை போன்ற படங்கள் வரும்போது repeated audience அதிகமாக வருவதன் மூலம் லாபம் கிடைக்கும், முக்கியமாக மன நிறைவு கிடைக்கும் என்பதற்காகவும், அதிகாரிகள் அடிக்கடி ஆங்காங்கே "செக்" செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு, இது சரியாக இருக்கிறதா, இது முறையாக இருக்கிறதா என்று பார்த்துக் கடுமையான தொல்லைகளைத் தருகிறார்கள் என்று வேதனைப்பட்டு முறையீடு தெரிவித்ததற்குப் பிறகுதான்—உங்களுக்கெல்லாம் தெரியும் என்று கருதுகிறேன் ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டி தனது ரிப்போர்ட்டை சமர்ப்பித்தது. அந்த ரிப்போர்ட்டில் "கம்பவுண்டிங் சிஸ்டம்" இருந்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. சர்க்கார் ஏற்றுக்கொண்டது என்று உங்களுக்கு ஆரம்பத்தில் சொன்னேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். கம்பவுண்டிங் சிஸ்டம் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று என்பதில் எங்கள் யாருக்கும் இதிலே அபிப்பிராயபேதம் இல்லை என்று இங்கே பெரிய நகரங்களிலே தியேட்டர் வைத்து நடத்துகிற "எக்சிபிட்டார்கள்" முதல் "டூரிங் டாக்கீஸ்" நடத்துகிறவர்கள் வரை சொன்னார்கள். எங்களுக்கு அதனாலே அதிகாரிகள் தொல்லை வராது. எங்களுக்கும் சர்க்காருக்கும் நேரடித் தொடர்பு இருக்குமே தவிர, இடைத் தரகர்களுக்கு இடம் இருக்காது, ஆகவே அதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் என்று அவர்கள் தங்களுடைய ஒப்புதலை தெரிவித்து இருக்கிறார்கள்.

நான் எனது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டேன் ஆரம்பகட்டமாக அந்த சினிமாத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கும், சினிமா பார்க்க செல்கிறவர்களுக்கும் தந்த ஆரம்ப சலுகை இது. ஆனால் சர்க்கார் கவனத்தில் நிச்சயமாகக் கொண்டு வர இருக்கிற ஒன்று இந்த "கம்பவுண்டிங் சிஸ்டம்" தான். இந்த சிஸ்டம் இதற்கு முன்னாலே இருந்த தி. மு. க. சர்க்கார் கொண்டு வந்தது என்பதை மறந்து விடக்கூடாது. அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு, எந்தக்

[திரு கி. மனோகரன்] [1977 ஆகஸ்டு 26

காரணத்தைக் கொண்டு கம்பவுண்டிங் சிஸ்டம் வாபஸ் வாங்கப் பட்டது என்பதை இங்கே உட்கார்ந்து அவர்களைச் சிந்திக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற ஏராளமான பேர்களுக்கு அது தெரியாது. அதிலே ஒரு இரகசியம் புதைந்து கிடக்கிறது. (குறுக்கீடு). ஆகவே, அப்போது கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம் திருப்பி வாபஸ் வாங்கப்பட்டது. அது ஏன் எப்படி வாபஸ் வாங்கப்பட்டது என்கின்ற காரணத்திற்கு இப்போது நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் அந்தக் காரணம், நோக்கம் கற்பிக்கின்ற காரணம் என்பதைச் சுருக்கமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்போது நான் முடிப்பதற்கு முன்பு மறுபடியும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், "கம்பவுண்டிங் சிஸ்டம்" என்பதைக் கொண்டு வருவதற்கு இந்தச் சர்க்கார், இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நேற்றைக்குப் பேசிய நமது அருமை அமைச்சர் திரு வீரப்பன் அவர்கள் உங்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தற்காலிகமாக, அது வரும் வரையில் இது அமுலில் இருந்து வரவேண்டும் என்பதற்காக நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டேன். அதையே மீண்டும் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன். எனவே அருள் கூர்ந்து இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுகிற போது கேளிக்கை வரி திருத்தப்பட்டு கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வரப்பட்டதும், பின்னாலே அது கைவிடப்பட்டதற்கும் காரணம் ஒரு இரகசியம் புதைந்து கிடப்பதாகக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குத் தெரிந்த அந்த இரகசியத்தை இந்த அவைக்குச் சொன்னால், இந்த அவையில் உள்ளவர்களும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். அமைச்சரவர்களுக்குத் தெரிந்த இரகசியத்தை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இரகசியத்தைச் சொன்னால் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் மீண்டும் நடைபெறாத அளவிற்கு இருக்க முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அந்த இரகசியம் காபினெட் கூடி எடுக்கப்பட்ட இரகசியமாக இருக்கிறது என்ற காரணத்தினாலே நான் அந்த காபினெட்டுக்கு, முன்னாலே இருந்த அந்த அமைச்சரவைக்கு கொஞ்சமும் சிரமமோ அல்லது சஞ்சலமோ தருகின்ற



1977 ஆகஸ்டு 26] [திரு கி. மனோகரன்]

அளவிற்குச் செல்ல நான் விரும்பவில்லை. எனது அருமை எதிர்க் கட்சித் தலைவர் அடிக்கடி சொல்வது போல நடந்தது நடந்தவை களாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக அமை யட்டும் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர் களுக்கு நான் உறுதி அளிக்கிறேன். அப்படிப்பட்ட எந்தத் தவறும் இந்த அரசில் வராது, நிச்சயம் வராது.

*திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, இந்தக் கம்ப வுண்டிங் சிஸ்டம் கொண்டு வரப்பட்டபோது நான் அமைச்சராக இருந்தேன். அந்த கம்பவுண்டிங் சிஸ்டம் இப்போது கொண்டு வரப்பட்ட போது அது ஆப்ஷனலா அல்லது கம்பல்சரியா என்று நமது அமைச்சரவர்கள் விளக்கவில்லை. அன்றைக்குக் கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வந்த பிறகு எதிர்பார்த்த அளவிற்குப் பயன் கிடைக்கவில்லை. அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானம் குறைந்ததே தவிர கூடுதலாக வரவில்லை. எனவே அது கை விடப்பட்டது. அதிலே எந்தவித இரகசியமும் இல்லை. இதிலே இரகசியம் என்ன இருக்கிறது? அரசாங்கத்திற்கு இரகசியம் கிடையாது.

அரசாங்கம் எதிர்பார்த்த அளவிற்கு வருவாய் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அந்தக் கம்பவுண்டிங் சிஸ்டம் கைவிடப் பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நான் இப்போது கூடச் சொல்கிறேன் இந்தக் கம்பவுண்டிங் சிஸ்டம் வெற்றி பெறாது. ஏனென்றால் இந்த அதிகாரிகள் கம்பவுண் டிங் சிஸ்டத்தின்படி கம்பவுண்டிங் செய்து கொள்ள விடமாட்டார்கள் சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கு இருக்கிற கஷ்டமெல்லாம் இந்த அதிகாரிகள் கொடுக்கிற தொல்லைதான். என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் சட்டத்தை அமுல் செய்வதற்காக உள்ள அதிகாரிகள் சினிமாக் கொட்டகைகளுக்குப் போனால் அவர்கள் சினிமா தியேட்டர் காரர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் பார்த்துக் கொள்ளும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அதிகாரி களை எதிர்பார்த்து இந்தக் கம்பவுண்டிங் சிஸ்டத்தை நடத்தாதீர்கள்.

திரு ரா. உமாநாத் : கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள். முன்னால் இருந்த அரசாங்கம் இந்தக் கம்பவுண்டிங் சிஸ்டத்தைக் கை விட்டு விட்டதற்கு ஒரு இரகசியம் இருக்கிறது என்றும், அந்த அமைச்சர்களுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாது என்பதற்காக அந்த இரகசியத்தை வெளியில் தெரிவிக்க விரும்பவில்லை என்றும் சொன்னார்.

[திரு ஏ. உமாநாத்] [1977 ஆகஸ்டு 26

[illegible] சபையிலே "பப்ளிக் இன்டரஸ்டு"க்கு பாதகமாக [illegible] படிவங்களை மட்டும் சொல்லக் கூடாதே தவிர, மற்றபடி எந்த இரகசியத்தையும் வெளியில் சொல்வதற்கு எந்தவிதத் தடையு [illegible] என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே தயவு [illegible] அமைச்சரவர்கள் அந்த இரகசியத்தை சொல்ல வேண்டும். [illegible]விட்டால் சும்மா "Just don't hold it in the air"

[முற்பகல் 11-00]

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் சொன்னதை இந்த அரசு நிச்சயமாக கவனத்தில் வைத்துக் கொள்ளும். எந்தத் தொல்லைகளிலிருந்து கொட்டகைக் காரர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும், பாதுகாப்புத் தர வேண்டும் என்று மக்களும், ஏனையோரும், நாமும் விரும்புகின்றேமோ, அவை மீண்டும் ஏற்பட அனுமதிக்க மாட்டோம்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் சொன்னது போல, இரகசியம் என்று சொல்வதை இரண்டு முறைகளில் நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டும். முன்னால் இருந்த அரசு தீர்மானித்ததைப் பற்றி, அவர்கள் முடிவு என்ன என்பதைப் பற்றி நாங்கள் வெளியே சொல்வது சரியா இல்லையா என்பதை எண்ணிப் பார்த்து, அப்படிப் பட்டவைகளில் இரகசியம் இருந்தால், சொல்லக் கூடாதவைகளாக இருந்தால், சொல்லக் கூடாதது என்று வைத்துக்கொள்வது ஒரு இரகசியம். அவர்கள் என்ன உள்ளத்தில் கருதினார்கள் என்று மற்றவர்கள் நம்புகிறார்களோ அதையும், கேள்விப்பட்டதையும் இரகசியம் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலைமையில்தான் மற்றவர்களுடைய சந்தேகங்களை முன்னால் இருந்த அரசின் மீது சுமத்தி அவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தக் கூடாது என்ற கருத்தில்தான் நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள் என்பதையும், கற்பனை செய்துகொண்டே போனால் அதற்கு முடிவு இருக்காது என்பதையும் நான் இங்கே சொல்லி, இப்படிப் பட்ட பிரச்னைகளில் நாம் ஈடுபடுவதைவிட, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் அனுபவத்தின்மீது சொன்னதைப் போல, அப்படிப்பட்ட அனுபவத்தைப் பயன் படுத்திக் கொண்டு, நல்ல நோக்கத்திற்கு அதை எந்த அளவுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்கின்ற வகையில் செயல்பட



1977 ஆகஸ்டு 26] [திரு எம். ஜி. இராமச்சந்திரன்]

வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்தைப் போன்றவர்கள் ஒத்துழைப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

திரு எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இரகசியம், இரகசியம் என்று சொன்னார்கள். அதில் ஏதும் கிடையாது. கம்பவுண்டிங் மூலமாக......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இதையெல்லாம் ஏற்கனவே விளக்கிவிட்டார்கள்.

திரு க. ராசரத்தினம் : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் இரகசியம் இருக்கின்றது என்றார். என்ன இரகசியம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். இப்போதுதான் உறுப்பினர் திரு சாதிக் பாட்சா அவர்கள் அதை யெல்லாம் சொல்லி விட்டார்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : தலைவர் அவர்களே, எனது மதிப்பிற்குரிய டி. ஆர். ஆர். அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இரகசியத்தை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், தகுதியானவர் சாதிக் பாட்சா அவர்களே தவிர, வேறு யாரும் இல்லை என்பதைத் தெரிவித்து, அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவையில் பலர் எழுந்து நின்றனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி கேட்டு எழுந்திருங்கள். எல்லோருமே நின்றால் எப்படி அனுமதிப்பது?

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது, ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானம் குறைந்து பாதிக்கப்படும் என்று கூறினேன். அந்த மாதிரி ஸ்தல ஸ்தாபனங் களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், இந்த அரசு அதற்கு நிதி உதவி செய்யுமா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்று இப்போதே கற்பனை செய்யாதீர்கள். நஷ்டம் வராது. ஆகையால் இரண்டாவது கேள்விக்குப் பதில் எழவில்லை.

[1977 ஆகஸ்டு 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஐந்து சட்ட முன் வடிவுகள் இருக்கின்றன. இதிலேயே 1¼ மணி நேரம் ஆகிவிட்டது.

திரு சோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, சும்பவுண்டிங் பண்ணியவுடன், நமது இன்றைய முதலமைச்சர் அவர்களுடைய பழைய படங்கள் எல்லாம் வேகமாக ஓடியதால் உடனே நிறுத்தி விட்டார்கள் என்று ஊரில் பேசிக் கொள்கிறார்கள். அதுதான் இரகசியமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். என் படம் இனிமேல் ஓடினாலும் ஓடாவிட்டாலும் மக்கள்தான் கவனிக்கப்பட வேண்டுமே தவிர அரசுக்குக் கவலையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

"தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/77) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(இ) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/77)

*THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR:
Mr. Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Public Men
(Criminal Misconduct) Repeal Bill,* 1977 be taken into consideration.
In moving the Bill, I wish to say that the Tamil Nadu *Public Men
(Criminal Misconduct) Act, 1973 (Tamil Nadu Act 2 of 1974) was
brought into force on the 8th May 1974. The Act seeks to empower
the Commissioner of Inquiries to investigate into allegations of a
criminal misconduct against Ministers and Members of the State
Legislature. Similarly, it seeks to empower the Additional Commis-
sioner to investigate into allegations of criminal misconduct against
the Mayor or Deputy Mayor of Municipal Corporations, Chairman,
and Vice-Chairman of Municipal Councils, and Chairman and
Vice-Chairman of Panchayat Union Councils, etc. The post of
Additional Commissioner of Inquiries was not filled up at all.

* 19—8—1977 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1977 ஆகஸ்டு 26] [Thiau K. Narayanaswami Mudaliar]

Experience over the last 3 years has shown that many persons are
not willing to depose before the Commissioner of Inquiries. Signed
complaints before the Commissioner have become a rarity. While the
Act is apparently enacted to provide a judicial forum for ventilation
of the grievances against the public men, some of the provisions
enacted particularly section 16 of the Act serve as a deterrent to
complainants, with the ulterior purpose of discouraging any
complaint against the public men as defined in the Act. The
ulterior objective of this legislation is proved by the fact that there
has not been a single instance in which the Commissioner has made
a complete investigation and made a report to the Government in
respect of any case under section 18 of the Act. The Act contains
no provision enabling a citizen to complain about administrative
lapses. In the light of the working of the Act for the past three
years, it has to be concluded that the Act has not served any useful
purpose. Having regard to the basic defects contained in the Act,
no amendment to the Act will make it effective.

The Government are considering the question of enacting
suitable and more comprehensive legislation on the subject in ஜம்
light of the proposed Central Legislation like the Lok Pal Bill தான்
and other allied legislation. நிர்ண

For the said reasons, it has been decided to repeal th ரையறை
Nadu Public Meu (Criminal Misconduct) Act, 1973 (Tamil
Act 2 of 1974) forthwith. The Bill seeks to achieve the க்த்,
object.

Sir, I request the House to accept the motion and pass v
Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு : நிறையப் பேர்கள் பேச விரும்புகிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்று பேசினால் சௌகரியமாக இருக்கும் என்று கருதுகிறேன். எல்லோரும் பேசுகிற வாய்ப்பு வேண்டுமானால் வைக்கலாம். ஆனால் நேற்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நாளையோடு இக்கூட்டத் தொடர் முடிவு அடைவதாக முடிவு எடுத்திருக்கிறோம். அதையும் பொறுப்பாக உணர்ந்து அத்தனைச் சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்றியாக வேண்டும்.

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு சட்டம் வருகிறபோதும் அல்லது அப்படி ஒரு சட்டம் கைவிடப்படுகிறபோதும் இரண்டு கட்டத்திலும் அந்தச் சட்டத்தில் வரக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் பற்றி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பது அவசியப்படுகிறது. அப்படித் தெரிவிக்கிறபோது ஒரே கட்சியில்கூட

(திரு க. அன்பழகன்) [1977 ஆகஸ்டு 26

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பேசுகிறபோது ஒவ்வொரு கோணத்தில் வலியுறுத்தி தங்கள் எண்ணங்களை வெளியிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, பேச விரும்புகிறவர்கள் குறைந்த நேரத்தில் தங்கள் கருத்துக்களைச் சொல்லும்படி அவர்களுக்குத் தெரிவிப்பதன்மூலம் நேரத்தைக் குறைக்கலாமே தவிர அவர்களுடைய அடிப்படை இயல்பான உரிமை இருப்பதை ஒரு பொது நோக்கத்தில் குறைத்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிடங்கள் ஒதுக்கி, அதற்குள்ளாக தங்களது பேச்சை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருகின்ற பொழுது, இதனுடைய [illegible]பல் ஆக்டையும்...............

[illegible] Nadu Public Men (Criminal Misconduct) Act, 1973

[illegible]டைய மூலச் சட்டத்தையும் அங்கத்தினர்களுக்கு கொடுப்பதின் [illegible]மாக அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, இங்கே Tamil Nadu Public Men (Criminal Misconduct) Repealing Act என்கிற சட்டம் ரத்து செய்யவேண்டும் என்று இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் உண்மையிலே ரத்து செய்யப்பட வேண்டியது தான் என்பதில் என்னுடைய ஆணித்தரமான கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

ஒரு சட்டம் என்று சொன்னால் அது பொது நோக்கோடு இருக்க வேண்டும். ஆனால் இந்தச் சட்டம் சுய நோக்கத்தோடு ஏற்படுத்தப் பட்ட சட்டம் என்பது இந்தச் சட்டத்தில் இருக்கின்ற பல பிரிவுகள் பல செக்ஷன்கள் அதில் சுய நோக்கத்தோடு போடப்பட்ட சட்டம் என்பது தெள்ளத் தெளிவாக விளக்குகிறது என்பதை சொல்லிக் கொள்ள விழைகிறேன். குறிப்பாக குற்றம் உள்ள நெஞ்சு குறு குறுக்கும் என்று சொல்வது போல், சுய நலத்தின் அடிப்படையில் 1974 ஆம் ஆண்டு தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த திராவிட



1977 ஆகஸ்டு 26] [திரு ரா. மார்க்கபந்து]

முன்னேற்றக் கழகம் தான் செய்த தவறுகளை எல்லாம் சட்டத்தி னுடைய பிடியிலிருந்து எப்படி தப்பித்துக்கொள்ளலாம் என்கின்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிலையில்தான் அந்தச் சட்டத்தில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இந்தச் சட்டத்தின் செக்ஷன் 8-ல்..............லிமிடேஷன் என்பதில்.........

Section 8—Limitation for preferring the complaints

என்று சொல்லுகிறார்கள். இந்தப் பொது வாழ்வில் ஈடுபட்டிருக் கின்றவர்கள் தவறு செய்வார்களேயானால்.........

It must be taken as a cognizable offence. The primary investigation has to be taken and then after coming to the conclusion that there is a *prima facie* case then only a detailed investigation can be taken over that.

அந்த நிலையில் கம்ப்ளேன்ட் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது......

'Limitation for preferring complaints'

அந்த புரொவிஷன்கள் எல்லாம் இந்தச் சட்டத்திற்கு பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக சிவில் வழக்குகளில்தான் லிமிட்டேஷன் என்பது அதாவது காலவரையறை என்று நிர்ண யிக்கப்பட்டிருக்கும். ஆனால் கிரிமினல் வழக்குகளில் காலவரையறை என்பது கிடையாது. ஆனால் இந்தச் சட்டத்தில்..................

திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, லோக்-அயுக்த், லோக்பால் ஆகியவைகளுக்குக் காலவரையறை உண்டா என்று சொன்னால் நல்லதாக இருக்கும்.

திரு ரா. மார்க்கபந்து : அதிலுள்ள விஷயங்கள் எனக்குத் தெளி வாக தெரியாது பொதுவாக இப்படிப்பட்ட சட்டங்களில் கால வரையறை கிடையாது.................. ...

திரு ப. உ. சண்முகம் : அதிலும் காலவரையறை வைத்திருக் கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

திரு ரா. மார்க்கபந்து : இதில் கிரிமினல் வழக்குகளை கொடுப் பதற்குக் காலவரையறை வைத்திருக்கிறார்கள். செக்ஷன் 8-ல்.........

'The Commissioner or an Additional Commissioner shall not investigate or cause to be investigated any complaint involving criminal misconduct if the complaint is made—

[திரு ரா. மார்க்கபந்து] [1977 ஆகஸ்டு 26

(i) after the expiry of one year from the date on which the criminal misconduct complained against was alleged to have been committed; or

(ii) after the expiry of six months from the date on which the public man ceases to be such public man

என்று இருக்கிறது. ஆகவே, இந்த விதிமுறைகளில் உள்ளபடி, அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் தவறு செய்து விடுவார்களேயானால் ஒரு வருடத்திற்குள் கம்ப்ளேண்ட் தாக்கல் செய்யவேண்டும். அல்லது அந்தப் பதவியிலிருந்து போன ஆறு மாதத்திற்குள் கம்ப்ளேண்ட் கொடுக்க வேண்டும். இந்த இரு முறைகளுக்குள்ளும் கம்ப்ளேண்ட் தாக்கல் செய்யப்படவில்லை என்ருல் பப்ளிக்-மென் தப்பித்துக் கொள்வதற்கு இந்தச் சட்டம் வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் குறிப்பாக.........(மணியடிக்கப்பட்டது) இன்னும் சிறிது நேரம் தர கேட்டுக்கொள்கிறேன். நான்கைந்து செக்ஷன்களைப்பற்றி முக்கியமாகச் சொல்ல வேண்டும்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிக்கிரத்தில் முடித்துவிடுங்கள் ... இன்னும் ஒரு நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுகிறேன்.

திரு ரா. மார்க்கபந்து : Kindly provide me some more time. பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு செக்ஷன்களை மட்டும் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். அதிலே செக்ஷன் 10 (2)-படி,

'The Commissioner or Additional Commissioner shall make or cause to be made a preliminary investigation to find out whether there is any prima facie case against the public man in respect of the allegation of criminal misconduct.'

இப்படியிருக்கையில், 10 (3)-ல்............

'Where the Commissioner or Additional Commissioner gives a finding under sub-section (2) that there is no prima facie case against the public man in respect of the allegation of criminal misconduct, he shall dismiss the complaint .......'

என்று சொல்லியிருக்கிருர்கள். இதனுடைய விளைவுகள் என்ன வென்று சொன்னல், "ஓரல்" எவிடென்சு தர மாட்டார்கள். அதே நேரத்திலே "ரெகார்டட்" எவிடென்சும் தர மாட்டார்கள். இதனல் கம்ப்ளேண்ட் தருவது நிறுத்தப்படும். அப்படியென்ருல்,

What is the consequence of the dismissal of that complaint ?



1977 ஆகஸ்டு 26] [திரு ரா. மார்க்கபந்து]

செக்ஷன் 11-லே சொல்லப்படுகிறது. இந்த கம்ப்ளேண்ட் தள்ளுபடி செய்யப்பட்டால்,

Compensatory costs in respect of false, frivolous or vexations complaints

இப்படி, உண்மைக்குப் புறம்பான, மாருன தவருன இந்த மூன்று காரணங்களால் அவர்களுக்கு குற்றஞ்சாட்டியவர்கள் பேரில் வழக்குத் தொடர அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது

செக்ஷன் 11 (2)-லே என்ன கூறுகிறதென்ருல்,

'No person against whom an order has been made under this section shall, by reason thereof, be exempted from any criminal liability in respect of any allegation made by him '

ஆகவே, இந்த கம்ப்ளேன்டைத் தள்ளுபடி செய்வதோடு மட்டு மில்லை. அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் போடலாம் என்று ஒரு வழியிருக்கிறது. இப்படி சிவில் வழக்கு போடுவதற்குச் சட்டம் இருந்தாலும், செக்ஷன் 10 (3)-லே சொல்லியிருக்கிறது. இதை அமுல்படுத்தும்போது,

It should be executed as a decree passed by a Civil Court. இப்படி அவர்கள் சிவில் கோர்ட்டுக்குப் போகும்போது, அப்படிக் கேஸ் போட்டால், சொத்துக்கள் ஜப்தி செய்யப்படலாம், அல்லது ஏலத் திற்கு கொண்டு வரலாம் அல்லது ஜெயிலிலேயும் வைக்கலாம். இதற்கெல்லாம் வாய்ப்பு ஏற்படுகின்றது. அதே நேரத்தில், குறிப்பாக, செக்ஷன் 16 மிகவும் முக்கியமானது.

It is a venomous provision in the Act. I shall read that section "Punishment for false, frivolous or vexatious complaint:—Notwithstanding anything contained in this Act, every person who makes a false, frivolous or vexatious complaint against a public man under this Act, shall on conviction be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine.

குற்றம் சமர்ப்பிக்கப்பட்டது என்ருல், அந்தக் குற்றம் நிரூபிக்கப் படவில்லை என்று சொன்னல், அந்த பப்ளிக் மென் மீது வழக்குத் தொடர்ந்து, மூன்று ஆண்டுகள் அளவிற்கு சிறைத் தண்டனை பெறு வதற்கான ஒரு புரொவிஷன் இருக்கிறது என்று சொன்னல், ஒரு சாதாரண மனிதன், அரசாங்கத்தில் இருக்கக்கூடிய ஒரு அதிகாரி மீது எவ்வாறு குற்றம் சொல்ல முடியும்? காரணம், அதை அவர்கள் கோர்ட்டிலே சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்லும்போது

அது நிரூபிக்கப்படவில்லை என்று சொன்னால். அந்தக் குற்றத்திற்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று சொன்னால், தவறுகளைச் செய்து, இப்போது சர்க்காரியா விசாரணைக் கமிஷன் முன் நிறுத்தப்பட்டு. அங்கே குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு இருக்கும்போது, தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக...........

திரு ப. உ. சண்முகம் : ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன், சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டு இன்னும் கிடைக்கவில்லை. குற்றம் சாட்டப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு விட்டது என்று இங்கே உறுப்பினர் அவர்கள் கூறுவது முறையும் அல்ல; சரியும் அல்ல. இன்னும் சில கடுமையான வார்த்தைகளைக்கூட போட்டார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், இந்தச் சட்ட [illegible] நிறைவேற்றி, அதிலிருந்து தப்பித்துக்கொள் ப[illegible] சக்[illegible]யற்சிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது எந்த வகையில[illegible] [illegible]தல்ல. எந்த வகையிலே சட்டத்திற்கு உட்பட்டது எ[illegible] [illegible] [illegible]ரிந்துகொள்ள [illegible]

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : தயவுசெய்து சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பேசுகின்ற நண்பர்கள் விவாதத்தை நீட்டிக் கொண்டு போக வாய்ப்பு வசதியை வலுவில் கொண்டு வந்து உருவாக்காமல் தங்களுடைய கருத்துக்களை அந்தந்த விதிகளின்மேல் என்னென்ன கருதுகிறார்களோ அதைச் சொல்லுமாறு பணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு நிமிஷத்தில் முடிக்க வேண்டும்.

திரு ரா. மார்க்கபந்து : முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி இந்தக் குற்றங்களை விசாரிப்பதற்காக ..... Section 4 of this Act—Appointment of Commissioner of Inquiries and Additional Commissioner of Inquiries–For the purpose of conducting investigation in accordance with the provisions of this Act, the Government shall, on the recommendation of the Chief Justice of the High Court appoint, by notification, a person to be known as Commissioner of Inquiries and one or more persons to be known as Additional Commissioner of Inquiries.



இந்தியன் Constitution ஆர்டிகள் 217–ல்

'Every Judge of a High Court shall be appointed by the President by warrant under his hand and seal after consulation with the Chief Justice of India, the Governor of the State, and in the case of appointment of a Judge other than the Chief Justice, the Chief Justice of the High Court, என்று இருக்கிறது.

இப்படி ஒரு மாநிலத்தினுடைய முதன்மை நீதிபதியைத் தேர்ந்தெடுப்பதிலே, நியமிப்பதிலே அந்த மாநிலத்தினுடைய கவர்னரைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையிலே தான் ஒரு மாநிலத்தின் முதன்மை நீதிபதி நியமிக்கப்படுகிறார். எந்த ஒரு அரசாங்கத்தால் நியமிக்கப்பட ரெகமண்ட் பண்ணப்பட்டவர் என்று பார்ப்பதல்ல. நீதி ஸ்தலங்களுக்குச் செல்லும்போது புகார் கொடுத்தவர்கள் நிரூபிக்க முடியவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு தண்டனை அளிக்க வேண்டுமென்ற நிலை இருக்கும்போது இந்த நாட்டிலே இருக்கும் யாரும் தன்னை அழித்துக் கொண்டு தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல முன்வர மாட்டார்கள். குற்றங்களை மறைப்பதற்காகத்தான் இந்தச் சட்டமானது கொண்டு வரப்பட்டது. இது நாட்டுக்குத் தேவையில்லாத சட்டம். இப்போதே இந்தியன் பீனல் கோட் இருக்கிறது; பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட் இருக்கிறது. இந்தச் சட்டங்களே போதும். ஆகவே, இது தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் கொண்டு வந்த சட்டம் என்ற காரணத்தால் இதை ரத்து செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

லஞ்ச ஊழலை ஆட்சியிலிருந்து அகற்றுவதை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இலட்சியமாகக் கொண்டிருக்கிறது. அந்த இலட்சிய ஆட்சியை அமைக்க நாங்கள் திடமாக இருக்கிறோம் என்று குறிப்பிட்டு 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட இந்தச் சட்டத்தின் துணை அதற்குத் தேவையில்லை என்ற காரணத்தால், இதை ரத்து செய்யவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

திரு ஏ. ரகுமான்கான் : மன்றத் தலைவர் அவர்களே, இப்போது இந்த அரசாங்கத்தால் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் சட்டம் "தமிழ்நாடு பப்ளிக்மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் ஆக்ட்" என்பதாகும். அதை ரத்து செய்ய சில காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் தவறு செய்வார்களேயானால், ஊழல் செய்வார்களேயானால்

[திரு ஏ. ரகுமான்கான்] [1977 ஆகஸ்டு 26

அவர்களை அனுமதிக்கக்கூடாது. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டு மென்ற கருத்தில் யாருக்கும் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. முரண்பாடு இருக்க முடியாது. காரணம், பொது வாழ்வு என்பது புனிதமான துறையில் தங்கள் வாழ்வை அர்பணித்துக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டியவர்கள் அந்தத் துறையில் தங்கள் சொந்த வாழ்வுக்காகத் தப்பான வழியில் செல்ல சட்டத்திற்கு விரோதமாக, தர்மத்திற்கு விரோதமாக அனுமதிக்கக் கூடாது என்பது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொதுவான கருத்து. குறிப்பாக, ஆளுகின்ற பீடத்தில் இருக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் லஞ்ச ஒழிப்பு என்பதையே அடிப்படையாக வைத்துக் கொண்டிருக்கும் இயக்கம் என்று சொல்லப் படுகிறது. லஞ்சத்தை ஒழிப்பதற்கு எத்தகைய சட்டங்கள் இருந்தா லும் அந்தச் சட்டங்களை வரவேற்கக்கூடிய நிலையில் இந்தச் சார்க்கார் முன்னுக்கு நிற்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த விதத்தில் பார்க்கும்போது இப்போது கொண்டு வரப் பட்டிருக்கும் இந்தச் சட்டம் ஏறத்தாழ ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த சட்டத்தை அடியோடு நீக்கிவிடுவதற்கான ஒரு அமைப்பாக இருக்கிறது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம் என்ன என்பதை இந்த மன்றம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே உள்ள சட்டப்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுபவர்கள், குற்றத்தை இழைத்தவர்கள் ஏழு ஆண்டுகள் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள். ஆனால் அதை நிரூபிக்கவில்லை யென்று சொன்னால் புகார் மனு கொடுத்துவிட்டதாலேயே லஞ்சக் குற்றச்சாட்டுச் சொல்லிவிட்டதாலேயே குற்றவாளி ஆகிவிட முடியாது. ஆகவே சொன்ன குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியாமல் போய்விடுகிற கட்டத்தில் அவர்களை, குற்றஞ்சாட்டியவர்களை சும்மா விட்டுவிடக் கூடாது. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். காரணம் என்னவென்றால் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள்மீது ஒரு களங்கத்தை ஏற்படுத்தி விட்டு அந்தக் களங்கத்தையே மூலதனமாக வைத்து அந்த அடிப்படையிலே எந்தவிதமான கொள்கையும் இல்லாமல் இதையே கொள்கையாக வைத்துக்கொண்டு நாட்டு மக்களிடத்திலே சொல்லி மக்களை ஏமாற்றுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்துவார்கள்.



1977 ஆகஸ்டு 26] [திரு ஏ. ரகுமான்கான்]

ஆகவே அப்படி ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுச் சொல்கிற வர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஏனென்றால் புராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது, மாபெரும் மன்னன், பகவான் இராமச் சந்திரனே தன்னுடைய மனைவி ஜானகிமீது சந்தேகப்பட்டிருக்கிறான், இருந்தாலும் அக்கினி பிரவேசம் செய்து காட்டியிருக்கிறாள். அக்கினி பிரவேசம் என்பது போன்று இப்படிப்பட்ட சட்டம் ஜனநாயக நாட்டிலே இருக்க வேண்டும்.

முன்பு சந்தானம் கமிட்டி ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்தார்கள். அமைச்சர்கள்மீது சட்டமன்ற உறுப்பினர்கள்மீது, நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீது, முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன் உறுப்பினர்கள் மீது பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்கள்மீது குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டால் அவை நிரூபிக்கப்பட்டாக வேண்டும், அப்படி அவர்கள் நிரூபிக்கவில்லையென்றால் அவர்கள்மீது வழக்குத் தொடர வேண்டும் என்ற அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலேதான் கமிஷன் ஆப் என்குயரிஸ் ஆக்ட் 1952 உருவாக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப் படையிலே ஒரு மாநிலத்திலே குற்றம் செய்தவர்களை மட்டுமல்ல, குற்றச்சாட்டு சொல்லி நிரூபிக்காதவர்களையும் தண்டிக்கவேண்டு மென்று சொன்னார்கள், அந்த அடிப்படையிலே தான் லோக்பால், லோக் அயுக்த் என்று எல்லாம் சட்டங்கள் வந்தன....................

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Speaker, Sir, on a point of clarification. The Commission of Inquiry Act, 1952 was enacted following an earlier Act. But Santhanam Committee's recommendations saw the light of the day only right about 1963 or 1964.

திரு ஏ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டு சட்டம் இருந்தது, அதற்குப் பிறகு சந்தானம் குழுவின் அறிக்கையின் பேரில் மத்திய அரசாங்கத்திலே, மாநில அரசாங் கத்திலே ஊழல் இருந்தால் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே கொண்டு வரப்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. மகாராஷ்டிராவிலே அப்படிப்பட்ட சட்டம் இருக்கிறது, இராஜஸ் தானிலே ஒரு சட்டம் இருக்கிறது. கேரளாவில் அப்படிப்பட்ட சட்டம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன்.

[திரு ஏ. ரகுமான்கான்] [1977 ஆகஸ்டு 26

தி. மு. க. அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. ஏதோ புகார் காண்டம் சொல்கிறார்கள், கறை படிந்த கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் தி. மு. க. வினர் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லுங்கள், அவை நிரூபிக்கப்பட்டால் எந்த அமைச்சராக இருந்தாலும் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், ஆனால் நிரூபிக்கவில்லையென்றால் அவர்களை விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டால் ஒரே பாடல், ஒரே ராகம் என்பதைப்போல் நாட்டு மக்களிடம் இதையே சொல்லி நாட்டு மக்களை ஏமாற்றக்கூடிய நிலைமை ஏற்படும். அன்றைக்கு இதை துரதிருஷ்டவசமாக கறுப்புச் சட்டம் என்றார்கள். இன்றைக்கு ஊழலை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிற சர்க்கார் இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்க வேண்டும். இந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏன் பயப்படுகிறது என்று தெரியவில்லை.

இவர்கள் சொல்கிற காரணம்

**'Experience has shown that many persons are not willing to depose before the Commissioner of Inquiries'.**

என்று சொல்கிறார்கள். இந்த கமிஷன் ஆப் என்குயரிஸ் முன்னாலே புகார் யாரும் கொடுக்கத் தயாராக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைப் பகிரங்கமாகச் சொல்லிக்கொள்கிறேன். இதே அமைச்சரவை மீது புகார் மனுக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன், அந்தக் குற்றச்சாட்டுகளை நான் நிரூபிக்கா விட்டால் நான் 3 ஆண்டுகால தண்டனைக்கும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட இந்த அமைச்சரவை அதற்குத் தயாரா, நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி என்னைப்போன்று பலர் தயாராக இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-30]

திருட்டு அதிகமாகிக் கொண்டே போகிறது என்பதற்காக காவல் நிலையமே வேண்டாமென்று சொல்லிவிட முடியாது. பள்ளிக்கூடம் சரியாகச் செயல்படவில்லை என்பதற்காகப் பள்ளிக்கூடமே தேவையில்லை என்று சொல்ல யாரும் முன் வர மாட்டார்கள். கமிஷனர் முன்னால் புகார் மனு கொடுப்பதற்கு யாரும் இதுவரைக்கும் வரவில்லை, ஆகையினாலே நாங்கள் இதை எடுத்து விடுகிறோம் என்று



1977 ஆகஸ்டு 26] [திரு ஏ. ரகுமான்கான்]

சொன்னாலே, அன்றைக்கு ஆதாரத்தோடு வருவதற்கு யாரும் தயாராக
இல்லை, வெறும் குற்றச்சாட்டைச் சொல்பவர்கள்தான் இருந்தார்கள்
வெறும் அல்லகேஷன்ஸ், அக்யூசேஷன்ஸ் என்று தான் சொல்லிக்
கொண்டிருந்தார்களே தவிர ஆதாரங்கள் இல்லை.

ஆனால் இன்றைக்கு நாங்கள் ஆதாரங்களை வைத்துக்கொண்டிருக்
கிறோம். நான் பகிரங்கமாகவே சொல்கிறேன், மருத்துவக் கல்லூரி
விவகாரத்திற்கு ஆதாரம் இருக்கிறது. இப்படி இன்னும் பல்வேறு
பிரச்னைகளுக்கு ஆதாரம் இருக்கிறது. நீங்கள் கமிஷனை நியமியுங்
கள், நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்:

இன்னொரு காரணத்தையும் சொல்லியிருக்கிறார்கள்.

**'Some of the provisions enacted serve as a deterrent to complainants'.**

இது குற்றச்சாட்டு கொடுப்பவர்களைப் பயமுறுத்துவதாக
இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. குற்றச்சாட்டைக்
கொடுப்பவர்கள் ஆதாரத்தோடு கொடுக்க வேண்டும். அப்படி
கொடுப்பவர்கள் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? நிரூபிக்கவில்லை
யென்றால் தண்டனைதான்.

**Indian Criminal Procedure Code**-ல் இல்லையா

**Indian Civil Procedure Code**-ல் இல்லையா

இங்கே சட்ட அமைச்சரவர்கள் இருக்கிறார்கள், மதிப்பிற்குரிய
மரியாதைக்குரிய நீதிபதியாக இருந்த அவர்கள் இருக்கிறார்கள்.
அந்தப் பிரிவு கிரிமினல் ப்ரொசிசர் கோடில் இல்லையா? அதில்
இருக்கிறது. **Deterrent Provision** என்பதில் அர்த்தம் இல்லை.
அப்படியிருந்தால்தான் யார் வேண்டுமானாலும் ஊழல் புகாரைப்
பரப்பலாம், விஷக் காற்றைப் பரப்பலாம் என்ற எண்ணத்திற்கு
முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

மூன்றாவது ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள்.

**The ulterior objective of this legislation is proved by the fact that there has not been a single instance in which the Commissioner has made a complete investigation and made a report to the Government in respect of any case under section 18 of the Act.**

ஏற்கனவே நான் இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன். வெங்கடாத்திரி
கமிஷனிலே மூன்று பேர் புகார் கொடுத்தார்கள். 500 ரூபாய்,
500 ரூபாய், அடுத்தபடியாக 500 ரூபாய் என்று 1,500 ரூபாய் லஞ்சம்
வாங்கினார் ஒரு அமைச்சர் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட

[திரு ஏ. ரகுமான்கான்] [1977 ஆகஸ்டு 26

புகார் மனு இருக்கிறது. அதில் ஏற்கனவே விசாரிக்கபட்டிருக கிறது. அதை விசாரிப்பதற்கு முன்னால் வெங்கடாதநி வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார். ஏனென்றால் அவருக்குக் காலம் முடிந்து விட்டது. காலம் என்று நான் சொல்வது பதவிக் the term. Term முடிந்து விட்டது. அவருக்கு டேர்ம் முடிந்த பிறகு வேறொருவரைப் போட்டிருக்கலாம். ஆனால் கேட்டால் சம்பந்தப்பட்டவர்கள் சொல்கிறார்கள், புகார் மனு கொடுத்தவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? என்று. அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? அல்லது செத்து விட்டார்களா, அவர்களுக்கு என்ன ஏற்பட்டு விட்டது என்பதை இந்த அரசுதான் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும். அந்தக் கேள்வி எழுதப்பட்டதன் மூலம் எங்களுக்கெல்லாம் பயமாக இருக்கிறது. எந்த நேரத்திலும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் படலாம், எங்களுடைய உடைமைக்கும், உயிருக்கும் ஆபத்து வரலாம் என்ற நிலைமை ஏற்படுகிறது. பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட பிறகு நாங்கள் அவற்றைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். அது வேறு விவாகாரம். இன்றைக்கு அந்தக் கமிஷன் நீக்கப்பட்டு விட்டது. இது யாருக்கு எதிராகச் செய்யப்பட்டது, யாரைக் காப்பாற்றுவதற் காகச் செய்யப்பட்டது என்பதெல்லாம் தெரிய வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால் குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப் பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள், இதே சர்க்காரில் முக்கியப் பொறுப்பில் அங்கம் வகிக்கின்றவர்கள்மீது முதலமைச்சரவர்கள் புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். மாஜி அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையாருக்கு எதிராகப் புகார் மனு இருக்கிறது. இப்பொழுது அமைச்சராக இருக்கும் பண்ருட்டி இராமச்சந்திரன் மீது புகார் மனு இருக்கிறது. அதே போல் மதுரை முத்து மீது புகார் மனு இருக்கிறது. வெளியிலே பல சந்தேகங்கள் கிளப்பப் பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்கள் எல்லாம் சாதாரண நபர் களாகத் தானே இருந்தார்கள். அரசியலுக்கு வந்ததற்குப் பிறகு எம். எல். ஏக்களாகவும், எம். பி-க்களாகவும் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களுக்கு அண்ணா நகரிலும் மற்ற இடங்களிலும் எப்படி இடம் வந்தது என்பது மாதிரியான சந்தேகங்கள் நிறையப் பேசப்படுகிறது, நம்பப்படுகிறது. சொல்லப்படுகிறது. ஆகவே, இவைதப்பற்றியெல்லாம் விசாரிக்க கமிஷன் இருந்தால் புகார் மனு கொடுத்து விசாரிப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.



1977 ஆகஸ்டு 26] [திரு ஏ. ரகுமான்கான்]

ஆகவே இது யாரைக் காப்பாற்றுவதற்காக என்று தெரிய வேண்டும். துரதிருஷ்ட வசமாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அன்றைய தினம் அகலிகை இராமன் பாதம் பட்டு புனிதமடைந்ததைப்போல, இன்றைக்குப் புகார்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் நம்முடைய, நான் யார் என்று சொல்லத் தயாராக இல்லை, யாரோ ஒரு இராமச்சந்திரன் பாதம் பட்டு இன்றைக்குப் புனிதமாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஏற்கனவே கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் ஊழலை ஒழிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம், குறைகளைப் போக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம், இந்தச் சட்டம் பொதுவாழ்வில் தூய்மையை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம். ஊழலை ஒழிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கின்ற சர்க்கார், புத்தராக, ஏசுநாதராக, நபிகள் நாயகமாக, உலக உத்தமராக இருக்கிறோம், அப்படிப்பட்ட உறுப்பினர்களைக் கொண் டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கின்ற ஒரு சர்க்கார் இதற்காகப் பயப்படக்கூடாது. குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஏழாண்டுத் தண்டனை குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால் மூன்றாண்டுத் தண்டனை. இதை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம், எனவே, இங்கே இதற்குச் சொல்லப்பட்ட காரணங்கள் சரியாக இல்லை.

இந்தச் சட்டத்தின் உள்நோக்கமே, சில கறைப்பட்ட கரங்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக் கிறது. எனவே, இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் சார்பாகச் சொல்லி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மன்னித்துக் கொள்ள வேண்டும். நண்பர் ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது, யாரும் தவறாகக் கருத வேண்டாமென்பதற்காக நான் தெரிவிக்கிறேன், தப்பான அர்த்தம் வந்து விடும் என்பதற்காக, மனம் நொந்து சொல் கிறேன்—தயவுசெய்து பகவான் என்று அவர் சொன்ன சொற்றொடரை, அந்த வாக்கியத்தை அப்படியே நீக்கி விட வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது அப்படியே இருக்கட்டும், அது நல்லது என்று கருதுகிறேன்.

[1977 ஆகஸ்டு 26

திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும், அது தவருன அர்த்தம் தந்து விடும் என்பதற்காக, நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து முதலமைச்சரவர்கள் இணக்கம் தெரிவிக்க வேண்டும். அதை நீக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : அவரவர்கள், உணர்ச்சிகளைத் தெரிவிக்கும்போது, அதற்காக தலைவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டியதில்லை. முன்பு ஒரு விஷயம் நடந்தது, அது வேறு விஷயம். ஆனால், சொல்லுகின்ற காரியங்களாக இருந்தாலும், காரணங்களாக இருந்தாலும் அப்படியே இருக்கட்டும். பின்னால் வருபவர்களுக்கு உதவியாக இருக்கும். அது அப்படியே இருக்கட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வாசகங்கள் சபைக் குறிப்பில் இருப்பது ஆட்சேபகரமானது, குரியதல்ல என்ற காரணத்தாலே, அது நீக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எம். ஏ. ஜெயவேலு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றி நான் ஒரு வாரத்திற்கு முன்னதாக இங்கே பேசினேன். எதிர்க்கட்சியிலேயிருந்து அதற்கு உரிய பதில் வரும் என்று எதிர்பார்த்தோம். அதற்குப் பதிலாக, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இதை வாபஸ் வாங்குங்கள், இருக்கிற சட்டத்தை வைத்திருங்கள் என்று சொன்னார்கள். இப்படி பதில் கூறுவதற்குப் பதிலாக ....................

திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். நான், இன்று பேசவே ஆரம்பிக்கவில்லை—இன்னும் பேசவில்லை. நான் அப்பொழுதே, ஒரு சிலரைக் காப்பாற்றுவதற்காக இந்தச் சட்டத்தை ரத்து செய்து விடாதீர்கள் என்று சொன்னேன். ஒரு வேளை, பெயர் தடுமாற்றமாக இருக்குமோ, என்னவோ, தெரியவில்லை. ரகுமான்கான் தான் பேசினரே தவிர, சாதிக் பாட்சா இப்பொழுது பேசவில்லை.



1977 ஆகஸ்டு 26]

திரு எம். ஏ. ஜெயவேலு : இதிலே உள்ள சட்டப் பிரச்சனையையும், எப்படி இது சந்து பொந்துகள் உள்ள, விரிசல்கள் நிறைந்த, குற்றவாளிகளைக் காப்பாற்றுகின்ற வகையிலே இருக்கிறது என்பதையும் நான் தெள்ளத் தெளிவாகக் கூறி இருக்கிறேன். மீண்டும் இங்கே என்னுடைய கருத்தைச் சொல்ல நினைக்கிறேன். இந்தச் சட்டத்திலே பொது ஊழியர்கள் என்று இல்லை, பொது மனிதர்கள் என்று இருக்கிறது. அதாவது, இலஞ்சத் தடுப்புச் சட்டத்திலும், இந்திய குற்றயியல் சட்டத்திலும் 4 ஆவது பிரிவிலும், 162 ஆவது பிரிவிலும் பப்ளிக் சர்வீஸ் என்று இருக்கிறது. ஆனல், அவர்கள் தங்களை மக்கள் சேவகர்கள் என்று சொல்வதற்கு வெட்கப்பட்டு, ஊழியர்கள் என்று சொல்ல வெட்கப்பட்டு, பப்ளிக் மென் என்று போட்டிருக்கிறார்கள். இப்படி அந்த இரண்டு சட்டத்தை விட இது மூன்றாவது சட்டமாக இருந்த போதிலும், நான் ஒன்று சொன்னேன், இது மூன்றாவது சட்டமாக இருந்தாலும், மூன்றாந்தரச் சட்ட—It is a third-rate enactment என்று நான் சொன்னேன். It is a black law என்று நான் சொன்னேன். It is a white elephant on the public exchequer என்று நான் சொன்னேன்

அதாவது, மக்களுடைய வரிப் பணத்தை எடுத்து, எந்தவித நன்மையும் புரியாது சாப்பிடுகிறது என்று சொன்னேன். அதற்கான காரணத்தைச் சொல்கிறேன். அதிலே, கமிஷனர் இருக்கிறாரே, அவர் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது விட்டுவிடலாம். அதற்கு மேல் முறையீடுகள் இல்லை. ஆனல், மற்ற சட்டங்களில் அப்படி இல்லை. அதற்குப் பிறகு, அவர் விசாரணைக்கு (இன்வெஸ்டிகேஷன்) அனுப்பலாம். விசாரணைக்குப் பிறகு, வேண்டுமானல் எடுத்துக் கொள்ளலாம், வேண்டாமென்றால் விடலாம். அதற்குப் பிறகு முழு விசாரணை நடைபெறும்—முன் விசாரணை அல்லது முழு விசாரணை. அந்த முழு விசாரணை செய்த பிறகு ஏதோ கெட்ட எண்ணத்திலே செய்கிறார் என்று பார்த்தால், அதற்கு மேல் முறையீடு இல்லை.

[திரு எம். ஏ. ஜெயவேலு] [1977 ஆகஸ்டு 26

[முற்பகல் 11-40]

முதல் இரண்டு கட்டத்திலே தள்ளுபடி செய்து விட்டால், வேறு சட்டத்திற்குப் போகலாம். ஆனால் அப்படி வேறு சட்டத்திற்குப் போகவேண்டுமென்றால், இந்தச் சட்டம் எதற்கு? மூன்றாவது முறையாக அவர் விடுதலை செய்து விட்டால், வேறு எந்த நீதிமன்றத்திற்கும் போக முடியாது. இந்தியாவினுடைய தலைமை நீதிமன்றமாக இருக்கிற சுப்ரீம் கோர்ட்டுக்குக் கூட போக முடியாது. அந்த அளவிலே, அந்தக் கமிஷனை, சுப்ரீம் கோர்ட்டிலே உள்ள நீதிபதியை விட மிகுந்த உயர்ந்த அளவில் வைத்திருப்பதன் காரணம் என்ன? அரசியல் சட்டத்திலே, ஒரு முறை விடுதலை செய்யப்பட்டவன், அவன் மீண்டும் அதே குற்றத்திற்காக அவனை நீதிமன்றத்தில் நடத்த முடியாது. அது மட்டுமல்ல, புகார் கொடுத்தால் 211 பின்னர் ஐ. பி. சி. இருக்கிறது. அவன் நல்ல எண்ணத்தோடு இருக்கிறானா, கெட்ட எண்ணத்தோடு கொடுத்தானா—Whether the m... was mala fide or bona fide இங்கே இருக்கிறது. பிட்..er there was a just or reasonable ... அங்கே இருக்கிறது. ஆனால் அந்த சட்டத்தில் இல்லை.

இப்போது நீதிமன்றங்களில் இருக்கிற குற்ற வழக்கை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 60 சத விகிதம் வழக்குகள் விடுதலை ஆகின்றன. இப்படி 60 சதவிகிதம் விடுதலை ஆகிவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் 60 சதவிகிதம் உள்ளே போக வேண்டும். ஏனென்றால் குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால் உள்ளே போகவேண்டும். இதுதான் இருக்கிறது. அது மாத்திரமல்ல, லஞ்சத் தடுப்பு சட்டத்திலே லஞ்சம் கொடுத்தது நிரூபித்து விட்டால், எப்படி வந்தது, எதற்காக வந்தது என்பதை நிரூபிக்கின்ற பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவரிடத்திலே இருக்கிறது. ஆனால் இதிலே அப்படியில்லை. எல்லா பொறுப்பும் புகார் கொடுத்தவர் பேரிலே இருக்கிறது. அப்படி இருந்தால் யார் தைரியத்தோடு புகார் கொடுப்பார்கள். காவல்துறையினர் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் கூட சில குற்றங்கள் நிரூபிக்க முடியாமல் போய் விடுகிறது. இன்னும் சொல்லப் போனால் 900 கொலை வழக்குகளில் ... பேர்கள் தண்டனை அடைந்தார்கள். மீதி 300 பேர்கள் மீது கொலை வழக்கில்லை. அப்படி என்றால் அந்த 300 பேர்களும் உள்ளே போகவேண்டுமா. அவன் புகார் கொடுக்கும்போது, நல்ல



1977 ஆகஸ்டு 26] [திரு எம். ஏ. ஜெயவேலு]

எண்ணத்தோடு கொடுத்தானா, கெட்ட எண்ணத்தோடு கொடுத்தானா என்பதைப் பார்க்கவேண்டும். இதுதான் அடிப்படை.

மேலும் இதிலே கால வரையறையிருக்கிறது. முதலிலே ஓராண்டு என்று வைத்தார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, There must be some motivation behind the enactment of this Act. அவசரமாக அதை 5 ஆண்டுகளாக நீட்டினார்கள். ஒரு ஆளும் கட்சியினால் 5 ஆண்டு காலம் கடத்துவது மிகச் சுலபமான காரியம். ஒரு அரசுக்குப் புகார் தந்தால் அந்தக் கமிஷனுக்கு அனுப்பலாம். ஆளுங்கட்சியினால் நிச்சயமாக அதை நீட்ட முடியும். ஆகவே இப்படிக் காலவரையறை இதற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது என்பது என்னுடைய எண்ணம். அது மாத்திரமல்ல, புகாரை நிரூபிக்காவிட்டால் நஷ்ட ஈடு தரவேண்டும் என்று இருக்கிறது. வசதி படைத்தவர்கள் நல்ல எண்ணத்தோடு ஓரளவுக்கு சுத்தமாக இருந்த போதிலும் அவர்கள் புகார் கொடுக்க பயப்படுகிறார்கள். ஏனென்றால் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். ஆகையினால், கண்டவர்கள், பராரிகள் எல்லாம் பொய்யாக வழக்குக் கொடுப்பதற்குத் தான் இது உதவியாக இருக்கிறது என்பது என்னுடைய எண்ணம். ஆகவே இப்படிப்பட்ட மிகவும் மோசமான மூன்றாந்தர சட்டத்தை கொண்டு வருவதை விட, இதை விட மிகக் கடுமையாக இருக்கிறது லஞ்சத் தடுப்புச் சட்டம், இந்திய குற்றவியல் சட்டம். அந்தச் சட்டங்களுக்குப் பதிலாக, இப்படி பல ஓட்டைகள் நிறைந்த பலரைக் காப்பாற்றுகின்ற வகையிலே, ஏற்படுத்தப்பட்ட இந்த சட்டத்தை நீக்குமாறு நான் இங்கே கேட்டுக்கொண்டேன்.

அது மட்டுமல்ல, வீணாக புகார் கொடுப்பார்கள் என்று சொல்கிறார்கள். 197 பிரிவு, சி. ஆர். பி. சி.-ல் இருக்கிறது. அந்தப் பிரிவின்கீழ் ஆட்சியின் அனுமதி பெற்று வழக்குத் தொடரலாம். சாட்சிகளை வரவழைக்க வேண்டுமென்றால் சி. ஆர். பி. முறையைப் பின்பற்ற வேண்டுமென்று இருக்கிறது. ஐ. பி. சி. சட்டப்படி முயற்சி எடுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. சி. ஆர். பி. முறை என்றால், சம்மன் அனுப்பி வாரண்டு அனுப்பி, சர்ச் வாரண்டு போட்டு சாட்சிகளை கொண்டு வருவது. இது தான் சி. ஆர். பி. முறை. இந்த முறையைப் பின்பற்றுவதனால் தான் மூன்று ஆண்டுகளானாலும் வழக்கு முடிவதில்லை. அவர்களால் எந்தக் காரியமும் நிறைவேற்ற முடியவில்லை. இதை சும்மா சொல்லவில்லை.

[திரு எம். ஏ. ஜெயவேலு] [1977 ஆகஸ்டு 26

So it is my humble opinion that it is a white elephant and the Commission is impotent with regard to production of documents and witnesses.

ஆக முழுப் பொறுப்பும் கம்பளெயிண்ட் கொடுக்கிறவர் பேரிலே இருக்கிறது. இப்படி இருப்பதால் எல்லோருக்கும் கஷ்டமாக இருக்கிறது. இதை மாற்றி எளிதாக வையுங்கள் என்று சொல்லப் பட்டது. இப்படி இருப்பதனுல் தான் மத்திய சர்க்கார் சர்க்காரியா கமிஷனை நியமித்தது. தனியாக ஐ. பி. சி.-ல் கொடுமை பேர வழமல் வழக்குப் போட்டது. எங்கே ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனே இவைகளெல்லாம் கைவிடப்பட்டு விடுமோ என்று பயந்தோம். பழைய ஆட்சி போய் புதிய ஆட்சி வந்தவுடனே இந்த சர்க்காரியா கமிஷன் வாபஸ் பெற்றுக் கொள்ளப் படுமென்றும் புதிதாக வந்திருப்பவர்கள் எங்கே வாபஸ் பெற்றுக் கொண்டு விடுவார்களோ என்று பயந்தோம். ஆனுல் அவர்கள் அப்படி வாபஸ் பெற்றுக் கொள்ளவில்லை. நமது மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த அந்த புகார் மனு, அதன் அடிப்படையில் மத்திய அரசு விசாரித்து, அதிலே கண்டவைகள் எல்லாம் உண்மை என்று அறிந்து சர்க்காரியா [illegible] போட்டது. அப்போது இருந்த அரசின் முடிவுகள் தவறு என்று புதிய அரசு எங்கே இந்தக் கமிஷனை வாபஸ் பெற்று விடுவார்களோ என்று பயந்தோம். ஆனுல் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஏற்கெனவே இந்த வழக்கைப் பற்றி நன்கு அறிந்த சாந்தி பூஷன் சட்ட அமைச்சராக வந்ததினுல் இந்த வழக்கு நடைபெறட்டும் என்று முடிவு செய்திருக்கிருர். ஆகவே இந்தச் சட்ட மன்றத்தில் உள்ளவர்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை. இதிலே உண்மை இருக்கிறதா, இல்லையா என்பதிலே யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. சட்டம் படித்த அமைச்சர் சாந்தி பூஷண் அவர்கள் பிரதமரின் பக்கத்திலே இருக்கிருர். அதனுல் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்தச் சட்டத்தை ரத்துச் செய்வதற்காகக் கொண்டு வந்துள்ள சட்டத்தை நான் ஆதரிக்கிறேன். இதை நீக்குவதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று முன்பே பேசினேன். எனவே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இங்கே கொண்டு வந்திருப்பதற்காக இந்த அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 26].

திரு க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மிக முக்கியமான இந்த மசோதா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயரில் இருந்தாலும், சட்ட அமைச்சரால் இங்கே முன் மொழியப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்தார்கள். அதிலே முக்கியமான கருத்து ஏற்கெனவே "இண்டியன் பீனல் கோடிலே" இருக்கிற சில பிரிவுகளும், செக்ஷன்களும் இருக்கின்றன. எனவே இது தேவை அற்றது என்று சொல்லப் படுகிறது. பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும், அவர்கள் தவறு இழைப்பார்களானுல் அதைத் தடுக்க, அவர்களைத் தண்டிக்க கமிஷன் அமைக்க வேண்டுமென்று இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. ஏற்கனவே "கமிஷன் ஆப் என்கொயரி" ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறது. அதனுல் இப்படி ஒரு சட்டம் தேவையில்லை என்று சொன்னுர்கள். அந்த கமிஷன் ஆப் என்கொயரி சட்டப்படி மத்திய சர்க்கார் ஒரு கமிஷனைப் போடலாம். ஆனுல் நம்முடைய சட்டப்படி உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரை, தலைமை நீதிபதியின் ஒப்புதலோடு போட முடியும்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிருர்கள் என்று ஒரு சில மேதாவிகள் சொன்னுர்கள். நான் அவர்களுக்குச் சொல்வது ராஜஸ்தான், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது. சந்தானம் கமிட்டியின் சிபாரிசின் பேரில் லோக்பால் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த வழியில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்லி சில பிரிவுகளை எடுத்துப் போட்டு இந்தச் சட்டம் போடப்பட்டது. இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டது. யாராவது புகார் கொடுத்தால் அவர்கள் தண்டனை அடைவதோடு, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. யாராவது பொய் என்று தெரிந்தே புகார் கொடுத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தக்க சட்டத்தில் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்ற விதி சேர்க்கப் பட்டது. அது கூட அவர் புகார் கொடுத்து அந்தப் புகார் பொய்யானது என்று கூறப்பட்டதாலேயே நஷ்ட ஈடு தர வேண்டுமென்று அல்ல, சட்டப்படி அனுமதிக்கப்பட்ட பிறகு தான். இது

[திரு க. சுப்பு] [1977 ஆகஸ்டு 26

பற்றி சட்ட அமைச்சர் பின்னால் பேசும்போது விளக்கம் சொல்வார் என்று நம்புகிறேன்.

இண்டியன் பீனல் கோடிலேயே 250 ஆவது பிரிவில் காம்பென் சேஷன் கொடுக்க வேண்டுமென்று விளக்கமாக இருக்கிறது. அதே மாதிரி பொய்யான புகார் கொடுத்தால் அதற்குப் பனிஷ்மெண்ட் கொடுக்க இண்டியன் பீனல் கோடிலே இருக்கிறது. இவற்றை யெல்லாம் எடுத்துப் போட்டுத் தான் இந்தச் சட்டம் இயற்றப் பட்டது.

[முற்பகல் 11.50]

ஏற்கனவே ஐ. பி. சி. 211 ஆவது செக்ஷனில் இருக்கிறது. அதைத் தான் எடுத்து இந்தச் சட்டத்திற்குள் போட்டிருக்கிறோமே தவிர, அந்தச் சட்டத்தை மீறி புதிதாக போட்டிருக்கிறோமா என்றால் இல்லை. அப்படியானால் இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய வேறு குறை பாடுகள் என்ன? கம்ப்ளேண்ட் கொடுக்க ஒரு லிமிடேஷன் வைத்திருக்கிறார்கள். 50 வருடத்திற்கு முன்னால் குற்றம் செய்தால், இப்போது கம்ப்ளேண்ட் கொடுக்கலாமா என்றால், அதற்கு லிமி டேஷன் வேண்டும் என்று வைத்திருக்கிறோம். நீங்கள் வேண்டாம் என்றால் எடுத்துவிடலாம். அதை முறையாக நீக்க அமெண்ட்மெண்டு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யாமல், சட்டத் தையே ரீபில் செய்கிறீர்கள்.

எப்போது இது அமுலுக்கு வருகிறது என்று சொல்லும்போது, It shall come into force at once உடனடியாக அமுலுக்கு வரும் என்று போட்டிருக்கிறீர்கள். அப்படி என்ன அவசியம் உடனடியாக அமுலுக்கு வருவதற்கு? குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோரினார்கள். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், இந்தச் சட்டம் இருக்கலாம், நீக்க வேண்டியதில்லை. சில புரொவிஷன்களை மாற்றிவிட்டு, இன்னும் கொஞ்சம் பர்ஃபெக்ஷ னோடு செய்யவேண்டும் என்று தான் கருதினார்கள். எங்களை ஒழிக்க வேண்டும் என்று கருதியவர்களே, இந்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. சில செக்ஷன்களை மாற்றினால் போதும் என்று மாற்றினார்கள். இப்போது இந்த அரசு உடனடியாக இந்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்றால் என்ன நோக்கம்?



1977 ஆகஸ்டு 26] [திரு க. சுப்பு]

ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்பதில் என்ன "ரீசன்" சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்தச் சட்டப்படி புகார் கொடுக்க யாரும் முன்வரவில்லை. ஆகவே இதை ரீபில் செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புகார் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத்தைப் போட முடியுமா? நிறைய புகார் கொடுங்கள் என்று வற்புறுத்த முடியுமா? அது முடியாது. ஸ்டாடிஸ்டிகல் பர்ப்பஸுக்காக புகார் கொடுப்பது என்றால், புள்ளி விவரங்களுக்காக கேஸ் போடுவது என்றால், அப்படிச் செய்வதால் தான் பொய் வழக்குகளைப் போலீஸ் போட வேண்டியிருக்கிறது. புகார் வந்தால், நிரூபிக்கலாம் என்பதற்காகச் சட்டம் போடப்பட்டது. அந்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருந்தால், அதை நிவர்த்திக்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுத் துக் கொண்டால் வரவேற்கலாம். ஆனால் உடனடியாக இந்தச் சட்டத்தையே நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்களே, என்ன அர்த்தம்? மாற்று ஏற்பாடு செய்து நீக்குங்கள், வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. வேறு சட்டம் வரும் வரையில் இந்தச் சட்டம் நீடிக்கும் என்று சொல்லுங்கள். புரிந்து கொள்ள முடியும். உடனடியாக நீங்களும் சட்டம் கொண்டு வரமாட்டீர்கள். இருக் கின்ற சட்டத்தையும் அனுமதிக்க மாட்டீர்கள் என்றால், அதைத் தான் சொல்கிறேன் "பொலிடிகலி மோடிவேட்", "அல்டீரியர் மோட்டிவ்" காரணமாகக் கொண்டுவரப்பட்டது என்று சொல் கிறேன். அமைச்சருக்குத் தனிப்பட்ட முறையில் மோட்டிவ் இருக் கிறது என்று நான் கூறவில்லை.

வெங்கடாத்ரி கமிஷனில் உள்ள ஜட்ஜ் ரிடையாகிறார் என்பது வேறு விஷயம். அமைச்சர் ஒருவரின் மீது புகார் இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை ரிபீல் செய்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட ஒரு எண்ணத்திற்கு இடம் தரலாமா? அமைச்சர் மீது புகார் இருக்கக் கூடாதா? எங்கள் கட்சித் தலைவர் முன்னாள் முதலமைச்சர் மீது புகார் சொல்லப்படவில்லையா? அமைச் சர்களைப் பற்றி புகார் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டாமா?

**Justice should not only be rendered but should also appear to be rendered.**

அமைச்சர் பேரில் புகார் இருக்கிறது. ஆகவே வெங்கடாத்ரி கமிஷன் போய்விட்டது என்ற குற்றச்சாட்டுக்கு நீங்கள் ஆரம்பத் திலேயே இடம் கொடுக்கலாமா? முதல் கோணல் முற்றும் கோணல் ஆகிவிடாதா?

[திரு க. சுப்பு] [1977 ஆகஸ்டு 26

இந்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் நீக்காமல், சட்டத்தையே நீக்குவது உங்களைப் பாதுகாத்துக்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்று குற்றம் சாட்ட வழி ஏற்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் மீது வழக்குப் போட்டார்கள். அதில் எந்த நேரத்தில் எப்படி சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன என்பதெல்லாம் அனைவருக்கும் தெரியும். இன்றைக்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பன்சிலால் கைது செய்யப்பட்டு கோர்ட்டில் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டி என்ன தீர்மானம் போட்டிருக்கிறது? "பன்சிலாலை கையில் விலங்குபோட்டு கோர்ட்டில் நிறுத்தியிருக்கிறார்கள். கட்சி நிதியைக் கையாடிவிட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு இவ்வளவு கொடுமையா? நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஒருவருக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லையே. எக்ஸ்டிரா ஜுடிஷியல் கன்பெஷன் பெறுவதற்காக இவ்வளவு கொடுமையா" என்றெல்லாம்..................

திரு ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த மாதிரி கையில் "ஹாண்டுகப்" போட்டார்கள் என்பதற்காக [illegible] கமிட்டி தீர்மானம் போடவில்லை. இல்லாததை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். ஒர்க்கிங் கமிட்டி சொன்னதெல்லாம், இந்த மாதிரி அவர்கள் "கரப்ஷனுக்கு உடந்தையாக" இருந்ததாகக் கற்பனையாகப் போட்டிருக்கிறார்கள் என்று தான்.

மாண்புமிகு பேவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்டத்தை நீக்குவதில் என்ன குறைபாடுகள் என்பதைச் சொல்லுங்கள். இன்னொரு கட்சியில் என்ன தீர்மானம் போட்டார்கள் என்பது இதற்கு அவசியமில்லை.

திரு க. சுப்பு : சரி விட்டுவிடுங்கள். எதற்கு விவகாரம். எங்கள் தலைவர் மீது வழக்குப் போட்டு, சர்க்காரியா கமிஷனைப் போட்டு, அந்தக் கமிஷன் அறிக்கை கொடுக்கின்ற வரையில் காத்துக் கொண்டிருக்கமுடியாமல், அரசியல் ஆதாயம் தேடுவதற்காக கோதுமை பேர ஊழல் என்ற வழக்கை ஸ்பெஷல் கோர்ட்டில்—அவரை அந்த கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தினார்கள். பப்ளிக் மென் கிரிமினல் மிஸ்காண்டக்டு ஆக்ட் இருக்கும்போது, எப்படி ஐ. பி. சியின் கீழ் வழக்குப்போட்டு கோர்ட்டில் கொண்டு



1977 ஆகஸ்டு 26] [திரு க. சுப்பு]

போய் நிறுத்தக்கூடாது என்ற சட்டப் பிரச்னையைக் கிளப்பி, அது சுப்ரீம் கோர்ட்டில் இன்றைக்கு இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டு அதன் பேரில் தீர்ப்பு அளிக்க வேண்டியிருக்கும்போது, இந்தச் சட்டத்தை ரிபீல் செய்கிறீர்கள். சுப்ரீம் கோர்ட்டில் வாதம் நடந்து கொண்டிருக்கிறது. அதன் தீர்ப்பு வந்தால் "பொசிஷன் ஆப் லா" எப்படியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளமுடியும்.

* * * * * * இங்கு மற்றவைகளைப் பற்றிச் சொன்னால் சப் ஜுடிஸ் என்று சொல்வார்கள். அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காகச் செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதுபோல் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இ[illegible] விட முழுமையானதொரு சட்டத்தைக் கொண்டு வந்திருந்த வேண்டும். அப்படி கொண்டுவந்து லஞ்சத்தை ஒழிக்க நடவடிக்கைகள் எடுத்தால் நாங்கள் அதை முழுமனதுடன் வரவேற்போம். [illegible]எடுக்கும் செய்வது என்பது மனித இயல்பு. டு எர் ஈஸ் ஹுமன். தவறும் அல்ல மாட்டார்கள் என்றால் அவர்கள் தேவராக இருக்க [illegible]திருக்கின்ற ஆகவே தவறு செய்பவர்களைக் கண்டித்து நடவடிக்கை அது தான் வகை செய்வதை வரவேற்கிறேன். [illegible]தில் இந்தச்

ஆனால் இந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்வதன் உள்நே[illegible] தவறான அவர்கள் நான் சந்தேகப்படுகிறேன். அரசியல் உள்நோக்கத்தோடு [illegible]ருக்கும் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. லஞ்சத்தைத் தடுப்ப[illegible] என்று சொல்கிறார்கள். அதற்காக இவ்வளவு அவசரமாக இதைக் கொண்டுவரத் தேவையில்லை. ஒரு அமைச்சரை, அல்லது ஒரு நண்பரைக் காப்பாற்ற இந்தக் குறுகிய வழியைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பழிதீர்க்கக் கொண்டு வருவதைப் போல் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முழுமையான சட்டத்தை முறையாகக் கொண்டு வந்திருக்க வேண்டும். இது ஒரு கறுப்புச் சட்டம், கறுப்புச் சட்டைக்காரர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று வெறுப்பு அடையலாம், ஒரு சிலர். கலர்ட் க்ளாஸ் கொண்டு இதைப் பார்க்கக் கூடாது. இதில் வெறுப்படைய ஒன்றுமில்லை. எனவே இந்தச் சட்டத்தை ரத்து

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11.55–நண்பகல் 12–00-இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

[திரு க. சுப்பு] [1977 ஆகஸ்டு 26

செய்யவேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை வாபஸ் வாங்கவேண்டும், இதை நிறைவேற்றக் கூடாது என்று சொல்லி என் கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பேசும்போது இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் * * * * * என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். நான் ஒன்றை தாங்கள் [தீ]ர்ப்பு சொல்வதற்கு முன் சொல்ல விரும்புகிறேன். ரூலிங் கொடுத்த [பிற]கு அதைப் பற்றி ஒன்றும் சொல்லக் கூடாது என்று அமைச்சர் அ[வ]ர்கள் சொல்வார்கள். அதை ஒரு ஸ்டாண்டிங் பாயின்டாக எ[டுத்து]க்[கொண்]டிருக்கிறார்கள்.

[மாண்]புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூலிங்-க்கு பிறகு டிஸ்[கஸ் செய்யக் கூடா]து என்று அமைச்சர் அவர்கள் சொல்வது சரிதான்...

கையில் ... Rahman Khan : Before the chair gives his ruling, ... கமிட்டி ... the grounds for it.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வழக்கின் முடிவு [எ]ந்[த]வாகும் என்பது சுப்ரீம் கோர்ட்டில் நடந்து முடிந்த பிறகு [தெ]ரியவேண்டிய விஷயம்.

திரு க. அன்பழகன் : தாங்கள் எடுத்துச் சொல்லத் தொடங்குகிற தொடரே பொருத்தமாக இல்லை என்பதால் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு இந்தச் சட்டம் இங்கே இருக்கிறது என்ற அடிப்படையில் அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் என்ன தீர்ப்பு வேண்டுமானாலும் சொல்லலாம். என்ன தீர்ப்புச் சொல்வார்கள் என்று இங்கே யாரும் சொல்லவில்லை. இங்கிருக்கிற இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அங்கு வழக்கு நடைபெறும்போது இந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்வதன்மூலம், நீக்குவதன்மூலம் * * * என்ற கருத்தைப் பேசுவது நியாயம். இந்தச் சட்டமன்றத்தில் பேசக்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11.55–நண்பகல் 12-00-ல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11.55–நண்பகல் 12.00-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.



1977 ஆகஸ்டு 26] [திரு க. அன்பழகன்]

கூடிய கருத்து, அந்தக் கருத்தை தாங்கள் நீக்குவது சட்டமன்ற முறைக்கு மாறானது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட் பற்றி கருத்துத் தெரிவிப்பது சரியா கூடாதா என்பது விவாதத்தில் வைக்கவேண்டிய விஷயமாக இருந்தாலும் இந்தச் * * * சட்டத்தை இங்கே நிறைவேற்றுவதன்மூலமாக நீதிபதிகளுடைய தீர்ப்புக்கு இங்கே முடிவு என்பதை அங்கிருக்கிற நீதிபதிகளுடைய தீர்ப்புக்கு இங்கே முடிவு கட்டி கருத்துத தெரிவிப்பதாக அமைகிறது என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் இந்த நேரத்தில் வந்திருப்பதின் காரணமாக வந்திருக்கின்ற ஒரு பிரச்னையைத்தான் சொல்லுகிறேன். சுப்ரீம் கோர்ட் என்ன முடிவு எடுக்கும் என்று நாம் சொல்ல முடியாது. சொல்வது நியாயமும் அல்ல சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தாவா இருக்கிறது, இப்போதிருக்கின்ற சட்டத்தின் அடிப்படையில் பிறந்திருக்கிற வழக்கு, அது தான் இப்போது சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. இந்த நேரத்தில் இந்தச் சட்டம் இங்கு ரத்து செய்யப்படுமானால் வேறொரு தவறான எண்ணத்தை உருவாக்கும். அதைப்பற்றித்தான் சுப்பு அவர்கள் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு இப்படியிருக்கும் என்கின்ற கருத்தினை அவர்கள் சொல்லவில்லை...........

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : அவர் * * * * * * * என்று சொன்னார்கள்.

திரு க. சுப்பு : இந்தச் சட்டத்தின் அனுகூலத்தின் அடிப்படையில் தான் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அப்படியிருக்கும் போது இங்கே ரிப்பீல் ஆகிறது என்றால். * * * * * * * * * *

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-55–நண்பகல் 12-00-ல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.01-இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : உறுப்பினர் அவர்கள் அதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய தீர்ப்புத் தேவை.

திரு க. அன்பழகன் : இப்போது சுப்பு அவர்கள் சொல்வது வேறு, அதை வேண்டுமென்றால் நீக்கிவிடுங்கள். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது, இந்தச் சட்டத்தை இங்கு ரத்து செய்தால் சுப்ரீம் கோர்ட்டிலுள்ள வழக்கின் தன்மை பாதிக்கப்படும். ஆகவே ரத்து செய்வது முறையல்ல என்று அவர் சொன்ன நோக்கத்தை—கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : முறையல்ல என்பது ஒருவருடைய கருத்தாக இருக்கலாம். ஆனால் தீர்ப்பு எப்படி வரும் என்பதை இங்கே சொல்லக்கூடாது என்பது தான் என்னுடைய கருத்து.

திரு ரா. உமாநாத் : பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே சொல்லப்படுகின்ற கருத்துக்களை அடிக்கடி அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விடவேண்டும் என்று சொல்லும்போது நாம் சற்று "கேர்ஃபுல்"-லாக இருக்கவேண்டும். என்னுடைய கருத்து, சுப்பு அவர்கள் சப்-ஜுடிஸாக இருக்கும் வழக்கு பற்றி எதுவும் பேசவில்லை என்பதுதான். அவருடைய கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்கிறேனா இல்லையா என்பது வேறு விஷயம், அதை என் பேச்சில் குறிப்பிடுகிறேன். இங்கு அவர் குறிப்பிட்டது. இந்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப் பட்டால் * * * * * * * *

அவர் கருதக்கூடிய ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். (தி. மு. க. உறுப்பினர்கள் கைதட்டல்) ஆகவே தயவு செய்து முதலமைச்சர் அவர்கள் இதைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமென்றால் இதற்கு பதில் சொல்லுகிற நேரத்தில் லா-மினிஸ்டரோ அல்லது முதலமைச்சரோ * * * *

ஆகாது என்று சொல்லலாம். இப்படி கருத்துக்கள் சொல்வதை எல்லாம் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று சொன்னால் குறிப்பேட்டில் பின்னால் எதுவுமே இல்லாமல் போய்விடும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.03-இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.



இராமச்சந்திரன் : மாண்புமிகு
மாண்புமிகு திரு எம். ஜி.
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
உமாநாத் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற என்னுடைய பிரச்னை எல்லாம் சொல்லுவதில் யாரும் தலைவிட சட்டத்தின்மீது கருத்துக்களைச் சொல்லுவதில் யாரும் பதிவு பண்ணக் கூடாது விரும்பவில்லை. அவையெல்லாம் குறிப்பில் பதிவு பண்ணக் கூடாது என்ற நோக்கம் யாருக்கும் கிடையாது. இப்போது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை நிறைவேற்றுவதின் விளைவாக சுப்ரீம் கோர்ட்டு இன்ன முடிவுக்கு வரும் என்கிற கருத்தை —சுப்ரீம் கோர்ட்டை வேறிடத்திற்கு இழுத்துச் செல்வது என்பது நியாயத்திற்கு மாறாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(திரு ஜே. ஜேம்ஸ் அவர்கள் எழுந்தார் ..........)

(திரு ஆர். மார்க்கபந்து அவர்கள் எழுந்தார்..........)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் கருத்துத் தெரிவித்தது போதும், தயவு செய்து உட்காருங்கள்.

திரு ரா. மார்க்கபந்து : ஒரு கேள்வியை மட்டும் தான் கேட்க விரும்புகிறேன். ......... மாண்புமிகு சுப்பு அவர்கள் குற்றச்சாட்டை சொல்லுகின்ற நேரத்தில் ஒரு அமைச்சரைப்பற்றி குறிப்பாகச் சொன்னார்கள். எந்த ஆட்சிக் காலத்தில் இந்த அமைச்சர்மீது மனு கொடுக்கப்பட்டது, எந்தெந்த தேதிகளில் எந்தெந்த மனுக்கள் கொடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் : இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியது இப்போது சபையில் உள்ள பிரச்னைக்குத் தொடர்பான பிரச்னை அல்ல. ஆகவே வேறு பிரச்னைகளுக்கு இங்கே இப்போது கேட்பதற்கு இடம் கிடையாது. ஆகவே இதற்கு முடிவு செய்து விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஜே. ஜேம்ஸ் : Sir, I want to raise a point of order in connection with this matter.
மாண்புமிகு சுப்பு அவர்கள் இந்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப் பட்டால், சுப்ரீம் கோர்ட்டில் உள்ள வழக்கு * * * * * *

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-03-ல் ஒரு சொல் அகற்றப்பெற்றது.

[திரு ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 26

...ரும் என்றுதான் சொன்னார்கள்.................. வார்த்தைகளை வேண்டு மென்றால் இதில் மாற்றிக் கொள்ளவேண்டும் என்று சொல்லலாம்... We must take the spirit in which he has expressed the idea. இதில் தப்பு எதுவுமில்லை. இந்த "ஐடியா"வைத்தான் அவர் சொன்னார் என்று கருதுகிறேன். That portion need not be expunged.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரே கருத்தைத் தான் சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லும்போது, இந்தச் சட்டம் எடுக்கப்பட்டு விட்டால், தலைமை நீதிமன்றம் கொடுக்கின்ற திர்ப்பைப்பற்றி எதுவும் குறிப்பிட்டிருந்தால் அதை நீக்கிவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். முதலமைச்சர் அவர்களும் அதே கருத்தைத்தான் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட்டு முடிவு பாதிக்கும், பாதிக்காது என்பது வேறு. ஆகவே இங்குள்ள பிரச்னை, இந்தச் சட்டம் நீக்கப் படுவதால் * * * * * * * என்று சொன்ன வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு யாக உத்தரவிடுகிறேன். வேறு சொல்லப்பட்ட கருத்துக்கள் இருக்கட்டும் * * * என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தர விடுகின்றேன்.

திரு ஏ. ரகுமான்கான் : ஒரே ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரிபிகேஷன் வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு ஏ. ரகுமான்கான் : கிளாரிபிகேஷன் வேண்டாம். நீங்கள் கொடுத்த ரூலிங்கை நான் கொஸ்டியன் பண்ணவில்லை. ஒரே ஒரு சந்தேகம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். நான் பேசும்போது நீங்கள் பேசக் கூடாது. நீங்கள் கிளாரிபிகேஷன் என்று கேட்டாலும்கூட, நான் கொடுத்த தீர்ப்பை ஒட்டித்தான் வரும். எனவே, இது முடிந்துபோன பிரச்னை. சந்தேகம் வேண்டாம்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.04-இல் சில சொற்கள் அகற்றப் பெற்றன.



1977 ஆகஸ்டு 26]

திரு ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கின்ற இந்த தமிழ்நாடு பப்ளிக்மென் கிரிமினல் மிஸ்-காண்டக்ட் ஆக்ட்-ஐ ரத்து செய்வதைப் பற்றிய இந்த மசோதா சரியானது என்பது என்னுடைய கருத்து. இங்கே உறுப்பினர்கள் பலர் இதை ஆதரித்தும், எதிர்த்தும் பேசியிருக் கிறார்கள்.

இந்தச் சட்டப் பேரவையிலே இது சம்பந்தப்பட்ட சட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது, அப்போது எதிர்த் தரப்பிலே இருந்து அத்தனைபேரும், இந்தச் சட்டத்தில் உள்ள குறைகளைக் குறிப் பிட்டு, இதிலே பயன் கிடையாது, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படக் கூடாது என்று பேசி, நாங்கள் எல்லாம் எதிர்த்தோம். அப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு, இந்த நாட்டிலே இருக்கின்ற மத்திய சட்டத்தை இதர மாநிலங்களிலே இருக்கின்ற சட்டங்களைவிட ரொம்ப உயர்வானது, சரியானது என்று சொல்லி நிறைவேற்றப் பட்டது.

இதிலே பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்றெல்லாம் குறிப் பிட்டார்கள். ஒரு குடம் பால் வைத்துவிட்டு, அதிலே ஒரு துளி விஷத்தை விட்டுவிட்டு, அத்தனையும் நல்ல பால், நல்ல பால் என்று நாம் சொல்ல முடியாது. அதைப்போல் இந்தச் சட்டத்திலே ஒரு முக்கியமான குறைபாடு இருக்கிறது. யார் புகார் கொடுக் கின்றார்களோ, அந்தப் புகார் நிரூபிக்கப்படவில்லையென்றால், அவருக்குத் தண்டனை அளிப்பதாக இதிலே சொல்லியிருப்பது மிகப் பெரிய குறைபாடாகும். இம்மாதிரி இந்த ஒரு செக்ஷன் இருக்கின்ற காரணத்தினாலே, யாராவது துணிந்து இந்தச் சட்டத்தின் மூலம் தவறு செய்தவர்கள் என்று கருதப்படுவார்களேயானால், அவர்கள் பேரிலே யாரும் வழக்குத் தொடரமாட்டார்கள், சாத்தியமில்லை. ஏனென்றால், முயற்சித்து ஒருவர் பேரிலே இம்மாதிரி குற்றம் இழைத்தார், லஞ்சம் வாங்கினார், தவறு செய்தார் என்று யாரா வது சொல்லி, அதைக் கோர்ட்டிலே போட்டு கேஸ் நடந்து கொண்டிருக்கிறபோது, கோர்ட்டிலே அது நிரூபிக்க முடியாமல் போய்விடலாம். சர்க்கார் தரப்பிலே எத்தனையோ விதமான கேஸ் களைத் தொடர்கின்றார்கள், தொடரப்படுகின்ற வழக்குகளில் சில கோர்ட்டிலே நிரூபிக்க முடியாமல் தள்ளப்பட்டு விடுகிறது. அப்படிப்

[திரு ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 26

டிகேட் பண்ணுவாரா? யார்மீதாவது வழக்குத் தொடருவாரா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

எத்தனையோ கொலைகள் நடக்கின்றன, துப்புத் துலக்குவதில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன, சாட்சியங்கள் கிடைக்காத நேரத்திலே வழக்குகளை விட்டுவிடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்திலே கொலை வழக்குப் போட்ட அதிகாரிகளைத் தூக்கிலிட வேண்டுமென்று சொன்னால் யாராவது வழக்குப் போட முன் வருவார்களா? ஒரு வழக்குப் போடப்பட்டு அது நிரூபிக்கப்படவில்லையென்றால் அந்த வழக்குப் போட்டவர்களுக்கு 3 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை என்று சொல்வது என்றால் இந்தச் சட்டம் தேவையில்லை என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, கம்ப்ளைன்ட் என்று சொன்னால் அதனுடைய டெபனிஷன் இந்த சட்டத்திலே கொடுக்கப்படவில்லை it has not been defined. இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு சட்டம் இருக்கிறது என்றால் இதை ஒரு சட்டம் என்று கூறுவதற்கில்லை.

அது மட்டுமல்ல, இந்த வழக்குகளுக்கு காலக் கெடு வைத்திருக்கிறார்கள். ஒரு வருடத்திற்குள் வழக்கு தொடரவேண்டுமென்று. one year from the date of occurrence அதிலிருந்து ஒரு ஆண்டுக்குள் தொடரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கிரிமினல் வழக்குகளுக்கு லிமிட்டேஷன் கிடையாது. இப்படி இதிலே லிமிட்டேஷன் வைத்திருப்பது வழக்குகளுக்குக் காரணமாக இருக்கிறவர்கள் தப்பித்துக் கொள்வதற்குத்தான் வழி செய்யும். இந்தச் சட்டம் அமலில் இருந்தால் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்குத்தான் வழி செய்யும். ஆகவே இந்தச் சட்டம் ரத்துச் செய்யப்படவேண்டியது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்தச் சட்டம் அமலில் இருக்கும் என்று சொன்னால் பல ஆண்டுகளுக்கு முன்னதாக சில ஆண்டுகளுக்கு முன்னதாகக் குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது, ஏனென்றால் காலக்கெடு வைத்திருக்கிறோம்.

இம்மாதிரி நிர்ப்பந்தங்கள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தச் சட்டம் தேவையற்றது என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தை எடுத்துவிடுவது மாத்திரம் போதுமா;



1977 ஆகஸ்டு 26] [திரு ஜே. ஜேம்ஸ்]

என்பதை எண்ணிப் பாக்க வேண்டும். பொது வாழ்வில் உள்ளவர்கள்
தூய்மை உள்ளவர்களாக கறைபடாத கரங்களை உடையவர்களாக
இருக்கவேண்டுமென்பது நியதி. அதிலும் குறிப்பாக நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கையை வலியுறுத்தி
வருகிறார்கள். தேர்தல் அறிக்கையிலே இந்தக் கொள்கையை
அதிகமாக அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின்
நோக்கமே அது என்று கூடக் கூறப்பட்டிருக்கிறது. லஞ்சத்தை
ஒழிப்பது போன்ற முறைகளிலே இந்த அரசு தீவிரமாக இருக்கிற
போது இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டு இன்னொரு சட்டத்தைக்
கொண்டுவந்திருந்தால், இந்த மசோதாவிலேயே அந்தச் சட்டத்
தைப்பற்றிய விவரங்களையும் கொண்டுவந்திருந்தால், இந்தச்
சட்டத்தை இன்னும் அதிகமாக ஆதரிப்பதோடு மட்டுமல்ல,
இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவதற்கும் வழி இருக்கும்.
இந்தச் சட்டம் எடுக்கப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் ஏற்
கனவே அசல் சட்டம் இங்கே வருகிறபோது அரசாங்கம் ஆப்
ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்று குறிப்பிட்டிருப்பதில் பொதுவாழ்வில்
ஈடுபடுகிறவர்களின்மீது சந்தேகங்கள் ஏற்பட்டதின் காரணமாக
கொண்டுவரப்பட்டது என்ற பொருள்பட அமைந்திருந்தது. தமிழ்
நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் வரையிலும் அந்தச்
சட்டத்தின்கீழ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பொது வாழ்வில் ஈடுபட்ட பலர் மீது ஆளுங்கட்சியைச் சேர்ந்
தவர்கள் மீதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் பல ஆண்டு
களுக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க
வழியிருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக
இல்லை. அரசியலில் இருக்கிறவர்கள் மீது பல களங்கங்கள் இருக்
கின்றன என்பதை அரசு உணரவேண்டும். ஆளுங்கட்சியைச் சேர்ந்
தவர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. எனவே கட்சி
பார்க்காமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

[பிற்பகல் 12-20]

அப்படிப்பட்ட வழிமுறைகளைக்கூட இந்த மசோதாவில்
அல்லது இன்னொரு விதமாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்திருந்
தால் உண்மையிலேயே நான் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்
என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இன்றைய தினம்

[திரு ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 2

டிகேட் பண்ணுவாரா? யார்மீதாவது வழக்குத் தொடருவாரா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

எத்தனையோ கொலைகள் நடக்கின்றன, துப்புத் துலக்குவதில் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன, சாட்சியங்கள் கிடைக்காத நேரத்திலே வழக்குகளை விட்டுவிடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது, அப்படிப்பட்ட நேரத்திலே கொலை வழக்குப் போட்ட அதிகாரிகளைத் தூக்கிலிட வேண்டுமென்று சொன்னால் யாராவது வழக்குப் போட முன் வருவார்களா? ஒரு வழக்குப் போடப்பட்டு அது நிரூபிக்கப்படவில்லையென்றால் அந்த வழக்குப் போட்டவர்களுக்கு 3 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனை என்று சொல்வது என்றால் இந்தச் சட்டம் தேவையில்லை என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, கம்ப்ளேன்ட் என்று சொன்னால் அதனுடைய டெபனிஷன் இந்த சட்டத்திலே கொடுக்கப்படவில்லை it has not been defined. இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு சட்டம் இருக்கிறது என்றால் இதை ஒரு சட்டம் என்று கூறுவதற்கில்லை.

அது மட்டுமல்ல, இந்த வழக்குகளுக்கு காலக் கெடு வைத்திருக்கிறார்கள். ஒரு வருடத்திற்குள் வழக்கு தொடரவேண்டுமென்று. one year from the date of occurrence அதிலிருந்து ஒரு ஆண்டுக்குள் தொடரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கிரிமினல் வழக்குகளுக்கு லிமிட்டேஷன் கிடையாது. இப்படி இதிலே லிமிட்டேஷன் வைத்திருப்பது வழக்குகளுக்குக் காரணமாக இருக்கிறவர்கள் தப்பித்துக் கொள்வதற்குத்தான் வழி செய்யும். இந்தச் சட்டம் அமலில் இருந்தால் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதற்குத்தான் வழி செய்யும். ஆகவே இந்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டியது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்தச் சட்டம் அமலில் இருக்கும் என்று சொன்னால் பல ஆண்டுகளுக்கு முன்னதாக சில ஆண்டுகளுக்கு முன்னதாகக் குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது, ஏனென்றால் காலக்கெடு வைத்திருக்கிறோம்.

இம்மாதிரி நிர்ப்பந்தங்கள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தச் சட்டம் தேவையற்றது என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தை எடுத்துவிடுவது மாத்திரம் போதுமா



1977 ஆகஸ்டு 26] [திரு ஜே. ஜேம்ஸ்]

என்பதை எண்ணிப் பாக்க வேண்டும். பொது வாழ்வில் உள்ளவர்கள் தூய்மை உள்ளவர்களாக கறைபடாத கரங்களை உடையவர்களாக இருக்கவேண்டுமென்பது நியதி. அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கையை வலியுறுத்தி வருகிறார்கள். தேர்தல் அறிக்கையிலே இந்தக் கொள்கையை அதிகமாக அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் நோக்கமே அது என்று கூடக் கூறப்பட்டிருக்கிறது. லஞ்சத்தை ஒழிப்பது போன்ற முறைகளிலே இந்த அரசு தீவிரமாக இருக்கிற போது இந்தச் சட்டத்தை எடுத்துவிட்டு இன்னொரு சட்டத்தைக் கொண்டுவந்திருந்தால், இந்த மசோதாவிலேயே அந்தச் சட்டத் தைப்பற்றிய விவரங்களையும் கொண்டுவந்திருந்தால், இந்தச் சட்டத்தை இன்னும் அதிகமாக ஆதரிப்பதோடு மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவதற்கும் வழி இருக்கும். இந்தச் சட்டம் எடுக்கப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே அசல் சட்டம் இங்கே வருகிறபோது அரசாங்கம் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்று குறிப்பிட்டிருப்பதில் பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்களின்மீது சந்தேகங்கள் ஏற்பட்டதின் காரணமாக கொண்டுவரப்பட்டது என்ற பொருள்பட அமைந்திருந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் வரையிலும் அந்தச் சட்டத்தின்கீழ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பொது வாழ்வில் ஈடுபட்ட பலர் மீது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வழியிருக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அரசியலில் இருக்கிறவர்கள் மீது பல களங்கங்கள் இருக்கின்றன என்பதை அரசு உணரவேண்டும். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. எனவே கட்சி பார்க்காமல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

அப்படிப்பட்ட வழிமுறைகளைக்கூட இந்த மசோதாவில் அல்லது இன்னொரு விதமாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்திருந்தால் உண்மையிலேயே நான் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆக, இன்றைய தினம்

[திரு ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 26

இந்த மசோதா நமது சட்டப் புத்தகத்திலிருந்து எடுபடுவது என்று சொல்லும்பொழுது நிச்சயமாக நான் அதை வரவேற்கிறேன். ஆக இந்த அவையில் இன்றைய தினம் அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவை ஜனதாக் கட்சியின் சார்பில் நான் வரவேற்று அமர்கின்றேன்.

*திரு ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருந்த பொழுது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த வரலாற்றுப் பின்னணியை நாம் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்திலே அப்பொழுது அதிகாரத்திலே இருந்தவர்கள் மீதும், மற்றும் சிலர் மீதும் கொடுக்கப்பட்ட, குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப் பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பிற்பாடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று நினைக்கிறேன். ஆகவே, அந்தக் குற்றச்சாட்டு களிலேயிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்படியொரு சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்ததை அப்பொழுதிருந்த எல்லாக் கட்சிகளும், பொதுமக்களும் அதைக் கறுப்புச் சட்டம் என்று சொல்லி எதிர்த்திருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய ஒரு கறுப்புச் சட்டத்தைச் சட்ட புத்தகத்திலிருந்து நீக்குவதற்காகக் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

பொதுவாக ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது என்றால், அந்தச் சட்டத்தினுடைய நோக்கம் எப்படியிருக்க வேண்டுமென்றால் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், குற்றச்சாட்டைச் சாட்டக் கூடியவர்களுக்கு அரசு ஆதரவாக இருந்து அந்தக் குற்றத்தை நிரூபிக்க, ருசு செய்ய ஆதரவாக இருக்க வேண்டும். ஆனால் இந்தச் சட்டம் குற்றம் சாட்டுகின்றவர்களை எவ்வளவுக் கெவ்வளவு தடுத்து நிறுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு அந்தச் சட்ட ஷரத்து இருக்கிறது.



1977 ஆகஸ்டு 26] [திரு ஓ. சோ. வேலுச்சாமி]

அதற்கடுத்தபடியாக ஒரு சட்டத்தினுடைய அடிப்படையை நாம் பார்த்தால் பொதுவாக natural justice அதாவது இயற்கையான நீதி, equity சமமான நீதி, good conscience நல்ல மனச்சாட்சி ஆகிய இந்த மூன்று பெரும் கொள்கைகளின் அடிப்படையில்தான் சட்டம் இருக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த இந்தச் சட்டத்தில் natural justice இல்லை. equity இல்லை. good conscience இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அந்தச் சட்டம் மக்கள் விரோதச் சட்டம் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், அப்பொழுது எந்தவிதமான தவறுமே நடக்கவில்லை, யாரும் எந்தக் குற்றமுமே செய்யவில்லை, ஆகவே, எந்தவிதமான குற்றச்சாட்டு களையும் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். பொதுவாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பல குற்றச்சாட்டுகளை தஸ் தாவேஜுகள் மூலம் ருசு செய்யத் தயாராக இருக்கிறோம். ஒரு சில நகராட்சிகளிலே அப்பொழுதிருந்த அமைச்சர்களுக்கு வரவேற்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லி 600 ரூபாய் 700 ரூபாய் என்று எடுக்கப்பட்டு, ஆறேழு மாத காலம் வரையில் அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக நகராட்சித் தலைவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலே வைத்துக்கொண்டு இருந்தார்கள். அப் படிப்பட்ட குற்றம் டெம்பரரி மிஸ்-அப்ரோபிரியேஷன் அதாவது தற்காலிகக் கையாடல் என்றுதான் ஆகும். அப்படியிருந்தும்கூட அப்பொழுதிருந்த நகர்மன்ற உறுப்பினர்கள் பலர் பல புகார் மனுக்களைக் கொடுத்தும் எதுவும் கேட்கப்படவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தன. ஆகவே, இந்தச் சட்டத்திற்குப் பயந்து கொண்டு குற்றம் சாட்டுபவர்கள் இருந்த நிலைமைகளைத் தமிழ் நாட்டில் பார்த்தோம்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் (Evidence Act) எவிடென்ஸ் ஆக்ட் விதிகளுக்கு மாறாக இருக் கிறது கிரிமினல் ப்ரொசீஜர் கோடு என்ற அந்தச் சட்டம் கூட இந்தச் சட்டத்திற்குப் பயன்படாத முறையிலே இருக்கிறது. "கிரிமினல் ப்ரொசீஜர் கோடு" என்ற மத்திய சட்டம் இருக்கிறதே. குற்ற இயல் நடைமுறைச் சட்டம், அந்தச் சட்ட விதிகளின்படிகூட விசாரணை நடத்த முடியாத அளவிற்கு இருக்கிறது.

[திரு ஓ. சோ. வேலுச்சாமி] [1977 ஆகஸ்டு 26

இந்தச் சட்டத்தின்படி கமிஷனிடத்தில் அந்தப் புகாரைக் கொடுத்தால் அந்தப் புகாரை விசாரிப்பது அவரது விருப்பு, வெறுப்பைப் பொறுத்ததே. He can use his discretion அவர் விருப்பப்பட்டால் எடுத்துக்கொள்ளலாம், விருப்பப்படவில்லை என்றால் அதைத் தள்ளிவிடலாம். அதைப்போலவே இதைப் புலன் விசாரணைக்கு அனுப்பும் நேரத்தில் அதுவும் அவர்களின் விருப்பு வெறுப்பைப் பொறுத்திருக்கிறது. சரி. அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலே விசாரணை செய்து, வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வது கூட அவருடைய விருப்பு வெறுப்பு. அப்படி ஒருவர் அங்கே குற்றவாளி இல்லையென்று தீர்ப்பு செய்துவிட்டால், அப்பீல் செய்ய எந்தவிதமான ப்ரொவிஷனும் முன்னால் இயற்ற வில்லை ஆகவே அப்படிப்பட்ட கறுப்புர்சட்டத்தை ரத்து செய்கிற இந்த மசோதாவை இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக வரவேற்கிறேன், வணக்கம்.

**திரு ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள் விடுக்க நான் அனுமதி கேட்கிறேன். அதிகமான அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்றால், 5 நிமிஷம் என்று சொன்னீர்கள், எங்கள் குரூப்பில் வேறு யாரும் பேசமாட்டார்கள், நான் மட்டும்தான் பேசப்போகிறேன். அதனாலே, எனக்கு அதிக நேரம் தரவேண்டுமென்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்களாகவே எவ்வளவு நேரம் கேட்கிறீர்கள்? அதைச்சொன்னால், அதையொட்டித்தானே நான் சொல்லமுடியும்.

**திரு ரா. உமாநாத் :** 15 நிமிஷத்திலிருந்து 20 நிமிஷம் வரை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 10 நிமிஷம் தருகிறேன்.

**திரு ரா. உமாநாத் :** இந்த மசோதாவை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் ஒரே ஒரு வருத்தம். எங்களுக்கு. எந்த காலத்தில், அதே நேரத்தில் பலமாக, ஊழலை எதிர்த்து ஒரு மாற்றுச் சட்டம் இதே சபையில் கொண்டு வந்திருக்க வேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். அதை நான் [illegible] சொல்ல விரும்புகிறேன். அந்தப் பழைய சட்டத்தை ரத்து செய்யக்கூடிய இந்தச் சட்டத்தை நாங்கள் ஏன் ஆதரிக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பழைய சட்டமானது ஊழலை எதிர்ப்பதன் பெயரால் வந்த சட்டம்—உண்மையிலே



1977 ஆகஸ்டு 26] [திரு ரா. உமாநாத்]

கூத்தாக்கப்பட்டது என்று நான் சொல்ல
வெறும கேலிக் சட்டமாகத்தான் நான் கருதுவேன்.
விரும்புகிறேன். அப்படிப்பட்ட சட்டம்
அந்தச் சட்டம் வந்த பின்னணியை நாம் கவனிக்க வேண்டும்.
ஏதோ தி. மு. கழக நண்பர்கள் சொல்கிறார்கள், ஊழலை ஒழிக்க
என்று. இல்லை, வந்த பாக்கியமுண்டுதான் முக்கியமானது.
எம். ஜி. ஆர். அவர்கள் அன்று தி. மு. கழக அரசின் மீது பல
குற்றச்சாட்டுகளை அடுக்கி வைத்து, மகஜா தயார் செய்து, மத்திய
அரசாங்கத்திடம் கொடுத்து, நீதி விசாரணை வேண்டும், கமிஷன்
வரவேண்டும் என்று பெரிய பிரச்னையாக வந்திருக்கக்கூடிய
பின்னணியில் இந்தச் சட்டம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டது
என்பது முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயம். அன்று
தி. மு. கழக அரசு அதை எதிர்த்தது, மத்திய அரசாங்கம் ஒரு
என்குயரி கமிஷன் வைக்கக்கூடாது என்று. அவர்கள் எதிர்க்கிற
பொழுது, ஒரு கரெக்டான பாயின்ட் சொன்னார்கள். அந்த
பாயின்டை நாங்கள் ஒத்துக்கொண்டோம். மத்திய அரசு, இந்த
மாதிரி மாநில விஷயத்தில் தலையிடச் செய்வது என்று அனுமதித்
தால், மத்திய அரசாங்கம் என்றைக்குப் பிரச்சனைகள் வந்தாலும்,
மாநில அரசாங்கத்தின்மீது சவாரி செய்வார்கள். ஆகவே,
கூடாது என்று சொன்னார்கள். அந்த பாயின்டிலே நாங்கள் ஒத்துக்
கொண்டோம். ஏனென்றால், மல்டி பார்ட்டி சிஸ்டம் இருக்கக்கூடிய
நம்முடைய நாட்டில், மத்தியிலும், மாநிலத்திலும் வெவ்வேறு
பார்ட்டி வரக்கூடிய சூழ்நிலை இருக்கும்போது, மத்திய அரசாங்கத்
திற்கு அந்த அதிகாரத்தை நாம் அளிப்போமானால், அது மிகவும்
ஆபத்தாகிவிடும். தனக்குப் பிடிக்காத இன்னொரு கட்சி சர்க்கார்
மாநிலத்தில் இருக்கும்போது, அந்தக் கட்சி அரசை நாளைக்கு
மத்திய சர்க்கார், கவிழ்க்க இதைத் துஷ்பிரயோகப்படுத்துவார்கள்
என்று சொல்வதில் உண்மை இருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்
கத்தின் அதிகாரத்திற்குள் தலையிட வாய்ப்பு ஏற்படும் என்று நாங்கள்
எதிர்பார்க்கிறோம். லோக் பால் வருகிறது. அதிலே ஒரு புரவிஷன்
இருக்கிறது. மாநில முதலமைச்சரையும் அதிலே உட்படுத்தலாம்,
என்று நாடாளுமன்றத்திலே பில் வந்திருக்கிறது. இன்றைக்கும் அந்த
லோக் பால் பில்லிலே, எங்கள் கட்சித் தோழர்கள், உறுப்பினர்கள்,
முதலமைச்சரை உட்படுத்தக் கூடாது என்று சொல்லி, பிடிவாத
மாக நாங்கள் எதிர்த்திருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் நாங்கள்
மற்றொன்றைப் பார்க்க வேண்டியிருக்கிறது. எம். ஜி. ஆர்.

[திரு ரா. உமாநாத்] [1977 ஆகஸ்டு 26

கொண்டு வரக்கூடிய குற்றச்சாட்டுகள் சீரியசான குற்றச்சாட்டுகள். மக்கள் மத்தியில் பிரச்னை இருந்ததால்—அன்றைக்கு எங்களுக்கும் தி. மு. கழக அரசாங்கத்திடம எந்த உடன்பாடும் கிடையாது—இருந்தாலும் சொன்னோம். அவர்கள் சுப்ரீம் கோர்ட் நீதிமன்றத்தை அணுகி ஒரு நீதிபதியை அவர்கள் கேட்டு, பெற்று, அந்த நீதிபதியிடம் அந்தக் குற்றச்சாட்டை சமர்ப்பித்து, அந்த நீதிபதி எந்த நபர் பேரிலாவது பிரைமாஃபாசி கேஸ் உண்டு என்றால்—அவர் அமைச்சராக இருந்தாலும் முதலமைச்சராக இருந்தாலும் கீழே இறங்கி அந்த விசாரணை முடிந்து சுத்தவாளி என்றால் திரும்ப வரட்டும். குற்றவாளி என்றால், எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னோம். மாநில அரசு விஷயத்தில், மத்திய அரசு தலையிடக் கூடாது என்ற அதே நேரத்தில் (குறுக்கீடு) சுத்தவாளி என்றால், நிரபராதி. அது தமிழ் வார்த்தை என்று நினைக்கிறேன். சுத்தவாளி என்றால், சுற்றவாளி என்று அர்த்தம் அல்ல. சுத்தவாளி என்றால், குற்றம் செய்யாதவன் என்று பொருள்.

[பிற்பகல் 12.30]

ஆகவே, அந்த யோசனையும் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் நிராகரித்து விட்டார்கள். அதற்குப் பதிலாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டத்தில் அவர்களுடைய நோக்கம் என்ன என்பது ஒரே ஒரு "புரொவிஷனி"லிருந்து அம்பலமாகிறது. ஊழல் செய்தவன் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு ஒரே தண்டனை. "ஒன் பனிஷ்மென்ட்". ஆனால் ஊழல் செய்தவன் பேரிலே குற்றச்சாட்டைக் கொண்டு வந்தவன் இருக்கிறானே, அவன் பேரிலே தப்பு என்று முடிவு செய்யப்பட்டால் அவனுக்கு இரண்டு தண்டனை, ஊழல்காரனுக்கு ஒரு தண்டனை என்று அந்த சட்டம் சொல்கிறது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டைக் கொண்டு வருபவனுடைய நிலையைக் கருதி, அவனுக்கு இரண்டு தண்டனை. ஒரு தண்டனை, யார் பேரிலே கொண்டு வந்தானோ அவருக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். இரண்டாவது தண்டனை அவன் 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும். இதுதான் இந்தச் சட்டத்தின் கொடுக்கு. தேளுக்குக் கொடுக்கு. இந்த சட்டம் என்ற தேள் இருக்கிறதே அந்தத் தேளுக்கு இது கொடுக்கு, இங்கே இருக்கிறது. இதுதான் தி. மு. க. வினர் கவனிக்கவேண்டிய விஷயம். இந்தக் கொடுக்கு மிகவும் விஷம் பொருந்திய கொடுக்கு. ஊழல்



1977 ஆகஸ்டு 26] [திரு ரா. உமாநாத்]

அம்பலப்படுத்த முன்வருபவர்களை, விரட்டி, மிரட்டி அனுப்புவது என்பதுதான் இந்த சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

நான் சொல்வதை எடுக்கவேண்டாம், கட்சி என்ற பிரச்னை கூட இல்லாமல், செலக்ட் கமிட்டி இருக்கிறதே, இந்த சட்டம் சம்பந்தப்பட்ட செலக்ட் கமிட்டி. அதனுடைய ரிப்போர்ட்டில், தமிழ்நாடு பார் கவுன்சில் வைஸ் சேர்மேன் ஆர். ஜி. இராஜன் என்ன சொல்கிறார் என்றால்—சட்டத்திலே .....................

For the first in Clause II, there is provision of payment of Compensatory costs to the public man complained against. This is in the nature of Compensation for malicious allegations: Again, clause 15 leads to prosecution for the same reason. If it is established that the allegation is false, frivolous or vexatious, the complaint is liable for action. The combined effect of both clause II and clause 15 will be that Complainants will be shut out and frightened away" தெளிவாக இப்படி இருக்கிறது என்று பார் கவுன்சில் உப தலைவர் சொல்லிவிட்டார். அவர் அரசியல்வாதி அல்ல. ஆகவே அந்த முறையிலேதான இது முக்கியமான அம்சம். அதற்காக நாங்கள் எதிர்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் சொன்னார்கள். களங்கம் விளைவிக்கப்படுகிறது, தண்டிக்கப்படவேண்டாமா என்று. நான் கேட்கிறேன். ஒருவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்படுகிறது. அவரை "அக்கியூஸ்டு" ஆக வைக்கிறார்கள். அதன் பிறகு அவரை "இன்னொசன்ட்" என்று சொல்லி விடுதலை செய்கிறார்கள். விடுதலை செய்கிற வரைக்கும் அவன் களங்கப்படுத்தப் படவில்லையா? அப்படிக் களங்கப்படுத்தப்பட்டார் என்றால் ஐ. பி. சி. அல்லது சி. ஆர். பி. சி. இருக்கிறது. அதிலே இந்த ஜட்ஜ் இந்த அரசாங்கத்தின் மீது தண்டனைக் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கிறதா?

திரு க. சுப்பு : இருக்கிறது.

Relevant provision 211.

வாசித்துக் காட்டினால் நேரம் ஆகும் என்பதால் படிக்கவில்லை.

திரு ரா. உமாநாத் : I am not yielding. Clarification வேண்டியது இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்காக உட்கார்ந்தேன்.

(திரு க. சுப்பு நின்றார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் "ஈடுபடு" பண்ணவில்லை என்கிறாரே.

திரு க. சுப்பு : False accusation. He is hurling accusation against me.

நான் சொன்னது பற்றி சொல்கிறார் அவர் சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டாமா. இருக்கிறதா என்று கேட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசும்போது பதில் இருந்தால் அவர் சொல்வார்.

திரு க. சுப்பு : முதல் அமைச்சர் பதில் சொல்லப் போவதில்லை. சட்ட அமைச்சர் தான் சொல்லப் போகிறார்.

திரு ரா. உமாநாத் : கேராளாவில் ஒரு சட்டம் இருக்கிறது. அதிலே வெறும் 500 ரூபாய் டெபாசிட் கட்டினால் போதும்.

திரு க. சுப்பு : சட்டம் இல்லை, அது ஒரு ஜி. ஓ.

திரு ரா. உமாநாத் : புகார் கொண்டு போகிற ஆளுக்கு இரண்டு தண்டனை அதிலே இல்லை.

திரு ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு உறுப்பினர் சபைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : He is not yielding கடைசியிலே பேசுகிற நேரத்தில் சந்தர்ப்பம் கிடைக்கலாம். என்னையும் கேட்காமல், நீங்கள் பேசுவது என்றால், உட்கார்ந்து கொண்டே சொல்வது என்றால் ...........

திரு ரா. உமாநாத் : இது மாதிரி ஊழல் சம்பந்தமாக யாரும் சொல்ல முன் வரக்கூடாது என்று அதை முறியடிப்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்படிப்பட்ட முயற்சிகளை முறியடிப்பதற்காகவே என்று நான் சொல்கிறபோது அறிந்தோ அறியாமலோ, அதை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தின் சார்பாக மாதவன் அவர்கள் பேசுகிறபோது—நான் இந்த புரொ சீடிங்ஸ் ஏன் கொண்டு வருகிறேன் என்பதற்கான விளக்கத்திலே குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் He admits in an indirect way இப்படி செய்கின்ற சட்டமாகும்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்கள் ஊழல் குற்றத் திற்காக இன்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். முக்கிய





செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது
மான தலைவர்கள் கைது சொல்கிறேன் என்றால் இப்
நமக்குத் தெரியும். ஆகவே நான் என்ன வருகின்றன. இப்படி
படிப்பட்ட ஊழல்கள் இன்றைக்கு வெளியே இருப்பதற்காகத் தான்,
ஊழல்கள் வெளியே கொண்டு வரப்படாமல் பயமுறுத்தி,
கொண்டு வருகிறவர்கள் மீது நடவடிக்கை என்று வெளியே
அவர்கள் இப்படிப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுக்களை இப்படிப்
சொல்லாமல் இருப்பதற்காக சில காங்கிரஸ் சர்க்கார்கள் தலைவர்கள்
பட்ட சட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் "டிஸ்கரேஜ்"
தங்கள் மேல் ஊழல் குற்றங்கள் கொண்டு வருவதை வந்தார்கள்.
செய்வதற்காக இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு என்று
அந்த சட்டத்தினை நாங்கள் "பாலோ" பண்ணுகிறோம் சொல்கிற
அன்றைக்கு புரோசீடிங்ஸ்ஸிலே மாதவன் அவர்கள் ராஜஸ்தான்
போது "மராட்டிய மாநிலத்துச் சட்டத்தினை, இப்படி 3
சட்டத்தினைப் பின் பற்றுகிறோம். அந்தச் சட்டத்திலே அகில இந்திய
ஆண்டு தண்டனை என்று இருக்கிறது" என்றார்கள். பின்பற்றப்படு
ரீதியில் செயல்படுகிறது என்ற கருத்தின் அடிப்படை ஒரு
கிறது என்று "கிளியர்" ஆகச் சொன்னார்கள். எனவே இது
"இன்டைரக்ட் அட்டெம்ட்" என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆதரிக்கிறேன் என்று விரிவாகச்
இந்தச் சட்டத்தை மூலம் மட்டும் ஊழலை
சொன்னாலும், இப்படிப்பட்ட சட்டங்களின் என்பதைத் தெளிவாகச்
முழுமையாக ஒழித்து விட முடியாது
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இருக்கிறது. அது தான்
75 குடும்பங்களில் செல்வக் குவியல் என்று மனோகரன்
ஊழலின் ஊற்று. நான் மீண்டும் குறிப்பிடுகிறேன் இப்படிப் பணக்காரக்
அவர்கள் சிரிக்கிறார். "திஸ் ஈஸ் தி பாக்ட்". ஊழல் ஊற்றின்
குடும்பங்களின் கையில் இருக்கிற செல்வக் குவியல் பெருக்கெடுத்து ஓடு
"ரியல் சோர்ஸ்". இதனால் தான் லஞ்சம் "சோர்ஸ்". இவர்கள்
கிறது. இவர்கள் "மல்டிநேஷனல்" ஊழல் விலைக்கு வாங்கு
நம்முடைய நாட்டில் சில அரசாங்கங்களையே வாங்குகிறார்கள். ஜப்பான்
கிறார்கள். சில அமைச்சர்களை விலைக்கு வாங்கினார்கள்.
நாட்டில் அந்த நாட்டு முதலமைச்சரை விலைக்கு வரையில்
இப்படிப்பட்டவர்களிடம் செல்வக் குவியல் இருக்கும்
ஊழலை முழுமையாக ஒழிக்க முடியாது.

[திரு ரா. உமாநாத்] [1977 ஆகஸ்டு 26

இப்படிப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக உள்ள சட்டங்களை மாற்ற மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்குள்ள அதிகாரத்தை மாநில அரசும் பயன்படுத்த வேண்டும். இந்த ஏகபோகப் பணக்கார குடும்பங்களின் ஊழல்களையெல்லாம் எந்த அளவிற்குத் தடுக்க எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுக்க வேண்டுமென்றும், அதற்காகத் தனியாகச் சட்டம் தேவைப் பட்டால் அதைக் கொண்டு வர வேண்டுமென்றும் கேட்டு இந்தச் சட்டத்தை நான் ஆதரிக்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னாலே பல உறுப்பினர்கள் பொது வாழ்வில் ஈடுபடுவோர் குற்ற நடத்தைத் தடுப்பு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டுள்ள அந்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை ஆதரித்து அது சம்பந்தமாக சுருக்கமாக ஒரு சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் சென்ற அரசு இருந்த காலத்தில் கொண்டு வரப் பட்டபோது இங்கேயுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிக் காரர்களைத் தவிர அத்தனைக் கட்சிக்காரர்களும் இந்தச் சட்டம் வேண்டப்படாத ஒன்று, கறுப்பு சட்டம், பிற்போக்கான சட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அந்தச் சட்டம் மசோதாவாக வரக்கூடிய காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினை ஆதரித்த மற்ற கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. அதிலேயிருந்து விலகி நின்றிருக்கிறார்கள்.

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னணி என்ன என்பதை இங்கே பேசிய உறுப்பினர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அந்தச் சட்டத்தில் குற்றம் செய்பவன் மீது புகார் செய்கிறவர் அதிக மான தண்டனைக்கு உள்ளாகிற நிலைமை இருந்தது. அவருக்கு அதிக தண்டனை கொடுக்க அதில் வகை செய்யப்பட்டிருந்தது. ஆகவே அந்தச் சட்டம் எதற்காக கொண்டு வரப்பட்டது என்பதைப் பற்றி யெல்லாம் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இருந்தாலும் கூட நாம்



1977 ஆகஸ்டு 26] [திரு சோ. அழகர்சாமி]

கொண்டு வந்த சட்டமாயிற்றே, ரத்துச் செய்வதா என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் வாதாடினார்கள் என்று தெரிகிறது.

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் யாராவது தைரியமாக முன் வந்து பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள இன்னார் இன்ன ஊழல் செய்து உள்ளார் என்று புகார் செய்தாரா, என்றால் இல்லை, காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 12.40]

புகார் கொடுக்க முன் வருகிற நேரத்தில், அதற்கு வேண்டிய ஆதாரங்களைக் கொடுத்து புகார் கொடுத்தவரே நிரூபிக்க வேண்டும் என்று சொல்லுகிறது இந்தச் சட்டம். பல வழக்கு களில் அரசாங்க அதிகாரிகளே ஆதாரங்களை சேகரித்து நிரூபிக்க முடியாத நிலையில் வழக்குகள் விடுபட்டுப் போகின்றன. அப்படி இருக்கின்றபோது, இந்தச் சட்டத்தின்படி ஊழல் புகார் யார் கொடுத்தார்களோ, அவர்கள் அதை நிரூபிக்கவில்லை என்றால் அவரை தண்டிக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதிலிருந்து, இந்தச் சட்டம் எவ்வளவு பிற்போக்கான சட்டம் என்பதை இந்தச் சட்டம் கொண்டு வந்த போதே சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டம் வரக் கூடாது என்று அவ்வளவு கட்சிகளும் சேர்ந்து சொல்லியிருக்கின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தை ரத்து செய்வதை எங்கள் கட்சியின் சார் பில் வரவேற்பதோடு, கேரளாவில் இது சம்பந்தமாக ஒரு சட்டம் வந்திருக்கிறது. அதே போன்றதொரு சட்டத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கேரளத்தில் போடப்பட்டிருக்கும் சட்டத்தின்படி, பொது வாழ்வில் யாராவது தவறான வழிகளில் ஈடுபடுகிறார்கள், என்றால், அது பற்றி புகார் செய்ய ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி புகார் செய்யலாம். அந்தப் புகார் விசாரணை செய்யப்பட்டு, சொல்லப்பட்ட புகார் நிரூபிக்கப்படாவிட்டாலும், புகார் செய்தவர் மீது எந்தவிதமான தண்டனையும் விதிக்கப்படமாட்டாது என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் இங்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.